கல்கி

வைரவிழா ஆண்டு

KALKI
27.1.2002
ரூ. 6.00



'டைட்டில் செண்டிமெண்ட்' படுத்தும்பாடு!

என்னையே நம்பி இருக்கும் என் குழந்தையின் ஊட்டசத்துக்கு நான் யாரை நம்புவது?





என் குழந்தைதான் எனக்கு ஒப்பற்ற செல்வம். அவள் என்னையே நம்பியிருப்பதால், கொஞ்சம் கவலைப்படுவது இயற்கைதான். பெரும்பாலான தாய்மார்கள், 'அவளுக்கு சரியான ஊட்டசத்து கிடைக்கிறதா, சரியான முறையில் வளர்ச்சி இருக்கிறதா?' என்றெல்லாம் கவலைப்படுகிறார்கள். ஆனால் எனக்கு அந்த கவலை இல்லை, ஏனெனில், ஃபாரெக்ஸ் இருக்கிறதே!

ஃபாரெக்ஸை எளிதில் தயார் செய்ய முடியும். எனவே, குழந்தைக்கு பசி எடுத்தவுடனேயே ஊட்டலாம். அது மட்டுமா? ஃபாரெக்ஸ் ஒரு விசேஷ முறையில் தயாரிக்கப் படுவதால் எளிதில் செரிக்கக் கூடியது. மற்றும்.

பால், கோதுமை, அரிசி, பழங்கள் மற்றும் காய்கறிக
இயற்கையான நற்குணங்கள் அதிசிறப்
அப்படியே இருக்கும். மேலும், ஃபாரக்ஸ் என் குழந்
புரோட்டீன்ஸ், கார்போஹைட்ரேட்ஸ், விட்டமின்ஸ் ம
மினரல்ஸின் சரியான கலவை அடங்கிய சமச்சீர் ஊட்ட
அளிக்கிறது. எனவே, என் குழந்தை
சரியான வளர்ச்சிக்கு வீட்டில் தயார் செ
ஆகாரங்களுடன், நான் நம்பு
ஃபாரெக்ஸைதான்.

எனவே, 50 ஆண்டுகளுக்கும் மேலாக,
தலைமுறைகளாக தாய்மார்கள் ஃபாரெக்
நம்புவதில் ஆச்சரியம் இல்லை. ஒவ்வொ
முறையும் என் குழந்தை சிரிக்கும் போ
'நன்றி, ஃபாரெக்ஸ் அம்மா!' என்று கூற
போல் இருக்கும்.



ஃபாரெக்ஸ்®
வளர்ச்சிக்கு சிறந்த வழி

6 ருசிகரமான சுவைகளில்

ரைஸ் | வீட் | வீட் வெஜிடபிள் | வீட் மிக்ஸ்டு ஃப்ரூட்ஸ் | வீட் ஆப்பிள் | வீட் எக்



IMPORTANT NOTICE: MOTHER'S MILK IS BEST FOR YOUR BABY, INFANT FOOD SHALL BE INTRODUCED ONLY AFTER 4 MONTHS

महत्वपूर्ण सूचना: माँ का दूध आपके बच्चे के लिये सर्वोत्तम है. ४ महीने के बाद ही उसे शिशु आहार देना शु





என்ன செய்வார் ரஜினி?

சோ அழைப்பு

"ஜெயலலிதா தமது கூட்டணியில் இருந்த கட்சிகளையெல்லாம் உதறிவிட்டார். த.மா.கா., காங்கிரஸ் மற்றும் சில கட்சிகள் சேர்ந்து மூன்றாவது அணி அமைக்கப் போவதாகப் பேசப்படுகிறது. எந்த அணியானாலும், அதற்கு பர்ஸனாலிட்டி உடையவர் தலைவராக இருக்க வேண்டும். அதற்கு உண்டான தகுதிகள் ரஜினிக்கு இருக்கின்றன. எனவே ரஜினி மூன்றாவது அணிக்குத் தலைமை தாங்க வேண்டும். அப்படி நடந்தால் அமோக வெற்றி கிடைக்கும்"_ 'துக்ளக்' ஆண்டு விழாவில் சோ இப்படிப் பேசியது ஒரு பரபரப்பை உண்டாக்கியிருக்கிறது.

ஒவ்வொரு சட்டமன்றத் தேர்தலின் போதும் தமது கண்ணோட்டத்தில் சில நியாயங்களை எடுத்து வைத்து, அரசியல் அணிகளை உருவாக்குவதில் சோ, பின்னணியில் இருப்பதால் அவரது பேச்சுக்கு ஒரு முக்கியத்துவம் இருக்கிறது. அது தவிர சோ அப்படிப் பேசும் போது, ரஜினி எதிரே அமர்ந்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

"கடினமான பாறையைப் போல அமைதி காத்து வரும் ரஜினியை, சோவின் பேச்சு அசைத்துப் பார்த்திருக்குமோ இல்லையோ தெரியாது; ஆனால், பல கட்சிகளில்

கல்கி இண்டர்நெட் முகவரி : www.kalkiweekly.com
ஈ மெயில் : kalkiweekly@vsnl.com

குறிப்பாக மூன்றாவது அணி என்று போனால் ஒருங்கிணையும் கட்சிகளிடையே, கலந்து கட்டிய அபிப்ராயங்களை உருவாக்கியிருக்கிறது.

"தமிழ்நாட்டில் தேர்தலில் வாக்கு பெற்று வெற்றி பெறுவது மட்டுமே பிரச்னை அல்ல; அதையும் தாண்டி, சமூகப் பிரச்னைகள் பல இருக்கின்றன. எனவே கருத்துத் தெளிவுடன் சமூக மாற்றங்களை இலட்சியங்களாகக் கொண்ட இயக்கங்கள் தமிழ்நாட்டுக்குத் தேவை. வாக்குச் சேகரித்து, வெற்றிபெற மட்டுமே ஒரு பர்ஸனாலிட்டி தேவை என்ற வகையில் அணுகுவது சரியல்ல" என்று சொல்கிறார் வலது கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளரான நல்லகண்ணு. "மூன்றாவது அணிக்கு ரஜினி தலைமை தாங்குவது என்ற விஷயத்தைத் தவிர தி.மு.க.வையும் கடுமையாகத் தாக்கிப் பேசியதில் கடுப்பாகிவிட்டார் கலைஞர். உடன்பிறப்புகளுக்குக் கடிதம் எழுதி சோவை ஒரு பிடி பிடித்தாலும், 'மூன்றாவது அணிக்கு ரஜினி தலைமை' என்ற அம்சத்தில் மட்டும் கருத்து தெரிவிக்காமல் விட்டுவிட்டார் கலைஞர். நிருபர்கள் இந்த விவகாரத்தில் கொக்கிபோட்டபோது "முதலில் மூன்றாவது அணியில் எந்தெந்த கட்சிகள் இருக்கின்றன என்பது முடிவாகட்டும்; அதன் பிறகு தலைமையைப் பற்றி கருத்துச் சொல்லலாம்" என்பதே அவரது பதிலாக இருந்தது.

'கலைஞர் மீது மிகுந்த மதிப்பு வைத்திருக்கும் ரஜினிகாந்த், அவரை எதிர்த்து அரசியல் நடத்த முன் வரமாட்டார்' என்று உறுதியாகச் சொல்கிறார்கள் கழக உடன்பிறப்புகள். சோவைப் பற்றி வெளிப்படையாகக் கலைஞர் கடிதம் எழுதியப் பிறகு இது பற்றிப் பேச வேறு தி.மு.க. பிரமுகர்கள் முன் வரவில்லை. "கடந்த இரண்டு சட்டமன்றத் தேர்தல்களில் சோவின் நிலைப்பாடு நமக்குத் தெரிந்ததுதான். மூன்றாவதாக மற்றொரு நிலைப்பாட்டை அவர் எடுத்திருக்கிறார். அதற்காகத்தான் மூன்றாவது அணி என்று முட்டுக் கொடுக்கிறார்; ஆனால் மூக்குடையப் போவது நிச்சயம். ஜெயலலிதாவின் மீது தற்காலிகமாக அவருக்கு ஏதோ கோபம். எனவே அவரையும் மிரட்டுவதற்காகத்தான் ரஜினியைப் பயன்படுத்த நினைக்கிறார். ஆனால் அவரது வலையில் விழ ரஜினி ஏமாளி அல்ல" என்கிறார் ஒரு முன்னாள் தி.மு.க. அமைச்சர். "மூன்றாவது அணி முழு மூச்சுடன் அ.இ.அ.தி.மு.க.வை எதிர்க்கும் சந்தர்ப்பம் வரும்போது, தி.மு.க. அணியுடனும் இணைந்து போராட வேண்டிய நிலை வரலாம். அது போன்று வரும்போது ஜெயலலிதாவுக்குத் தமிழகத்தில் மாபெரும் எதிர்ப்பு அலை உருவாகும். ஆனால் சோ, மிக தந்திரமாக ஜெ.க்கு அது போன்ற எதிர்ப்பு நிலை வரக் கூடாதென்று இப்போதே அணிகளைப் பிரித்து வைக்கப் பார்க்கிறார்" என்கிறார் அவர்.



ரஜினி, சோ மீது மதிப்பும், மரியாதையும் வைத்துள்ள த.மா.கா. பிரமுகர்களும், இந்த விஷயத்தில் பகிரங்கமாகக் கருத்துகளைச் சொல்லத் தயங்குகிறார்கள். "கம்யூனிஸ்டுகள் குறிப்பாக இடது கம்யூனிஸ்டுகள், நேரடியாக காங்கிரஸுடன் அணி அமைக்கத் தயங்குவார்கள். காங்கிரஸ் தலைமையில் மூன்றாவது அணி என்றால் 'குட்பை' சொல்லி விடுவார்கள். எனவே இப்போதிருக்கும் நிலையில் தமிழக மூன்றாவது அணிக்கு த.மா.காவே தலைமை தாங்கிக் கொண்டிருக்கிறது என்பது தான் உண்மை. ஆகவே 'மூன்றாவது அணி – ரஜினி தலைவர்' என்பதில் ரொம்பவும் யோசிக்க வேண்டியிருக்கிறது" என்று சொல்கிறார் ஒரு த.மா.கா. முன்னணி பிரமுகர். "சோ சொல்வது ஒரு பக்கம் இருக்கட்டும்; ரஜினியின் ரியாக்ஷன் வரட்டும், பார்த்துக் கொள்ளலாம்" என்றும் சொன்னார் அவர்.

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் இளங்கோவன் வழக்கம் போல தமது கருத்துகளைத் தயங்காமல் எடுத்துச் சொல்கிறார். "திராவிட இயக்கங்களுக்கு மாற்றாக, தமிழகத்தில் காமராஜ் ஆட்சி கொண்டுவர வேண்டுமென்று காங்கிரஸ் த.மா.கா. ஆகிய கட்சிகள் பாடுபட்டுக் கொண்டிருக்கின்றன. எங்களுடைய அந்த




இலட்சியத்துக்கு உதவும் வகையில் ரஜினி அரசியலுக்கு வந்தால் மனம் திறந்து வரவேற்போம்" என்று நம்மிடம் சொன்னார் இளங்கோவன். வாசனும் கிட்டத்தட்ட இதே கருத்தைக் கொண்டிருப்பதாக த.மா.காவினர் சொல்கிறார்கள்.

அ.இ.அ.தி.மு.கவினர் சோவின் கருத்துக்களை சீரியஸாக எடுத்துக் கொள்ளவில்லை.

"கருணாநிதியா - அம்மாவா என்று வரும்போது சோ 'அம்மா' பக்கம்தான் நிற்பார்... இது எங்கள் கணிப்பு. எனவே இந்த விஷயத்தில் ஏதாவது கருத்து சொல்ல வேண்டுமென்றால் அதை அம்மாதான் சொல்ல வேண்டும். மூன்றாவது அணி மட்டுமல்ல, எத்தனை அணிகள் வந்தாலும் அவற்றை எதிர்த்து நின்று வெற்றி கொள்ளும் திறன் அம்மாவுக்கு இருக்கிறது. எனவே நாங்கள் இதைப் பற்றியெல்லாம் ரொம்பவும் கவலைப்பட வேண்டியதில்லை" என்று குரலில் உறுதிப்படச் சொன்னார் அ.இ.அ.தி.மு.க தலைமை நிலையப் பிரமுகர் ஒருவர்.

சோ கிளப்பி விட்ட உரத்த சிந்தனை ஒரு பக்கம் இருக்க, ரஜினி என்ன நினைக்கிறார்? இப்போதெல்லாம் தமது கேளம்பாக்கம் வீட்டுக்கு அடிக்கடி ஓய்வெடுக்கச் சென்று விடுகிறார். அவருக்கு மிக நம்பிக்கையான - விரல் விட்டு எண்ணக்கூடிய நண்பர்களில் சோவும் ஒருவர் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் சோவோடு பேசும்போது, தமது கருத்துகளைத் தெரிவிக்காமல் அவரிடம் நாட்டு நடப்புகளை மட்டுமே கேட்டுத் தெரிந்து கொள்வாராம் ரஜினி. "சோ கூப்பிட்டார் என்று ரஜினி நிகழ்ச்சிக்குப் போனார். சோ, ரஜினியை வைத்துக் கொண்டே அப்படிப் பேசியது எங்களுக்கும் ஷாக்தான்" என்று ரஜினியின் உள் வட்டாரத்திலிருப்பவர்கள் சொல்கிறார்கள். ஆனால் நிகழ்ச்சிக்குப் போய் வந்த பின் அதைப் பற்றி ரஜினி யாரிடமும் பேசவில்லையாம். 'ரஜினி அரசியலுக்கு வர வேண்டும்' என்று ரசிகர் மன்றங்கள் தொடர்ந்து வற்புறுத்தி வந்தாலும், அரசியல் பற்றி ரஜினியிடம் பேச ரசிகர் மன்றத் தலைவர் சத்திய நாராயணாவே தயங்குவாராம். ஜாதகப்படி வரும் ஜூன் வரை ரஜினிக்கு நேரம் சரியில்லை. அரசியலோ, புதுப்படமோ எந்த ஒரு முடிவும் எடுக்க இன்னும் ஐந்து மாதங்களுக்கு மேல் ஆகலாம்" என்கிறார்கள்.

"சட்டமன்றத் தேர்தல் உடனடியாக இல்லை. மூன்றாவது அணி அமைப்பதிலேயே கம்யூனிஸ்ட், காங்கிரஸ் கட்சிகளிடையே சில பிரச்னைகள் உள்ளன. ரஜினி இப்போதே வரணும் என்று சொல்லவில்லை" என்கிறார் சோ.

"ரஜினி எப்படிப்பட்ட நிலையில் தலைமை தாங்க வேண்டும்? தனித்துக் கட்சி துவங்கி, மூன்றாவது அணியில் இணைய வேண்டுமா? அல்லது தலைமை கோ-ஆர்டினேட்டராக இருக்க வேண்டுமா?"

"தனிக்கட்சி துவங்கி மூன்றாவது அணிக்கு தலைமை தாங்குவதுதான் பொருத்தமாக இருக்கும்" என்கிறார் சோ.

1996ல் ரஜினி அரசியல் தலைமைப் பொறுப்பை ஏற்கும் வாய்ப்பை நழுவ விட்டார் என்பதை சோ மறுக்கிறார்.

"அவரே அவருடைய சொந்த பஸ்ஸை ஓட்டுவார்" அன்றைய விழாவில் அப்படிப் பேசியது ரஜினியை சங்கடப்படுத்தியிருக்காதா?" என்றபோது "விழாவுக்கு வந்தவர்கள் அவருடைய ரசிகர்கள் அல்ல; ஏன் அரசியலுக்கு அவர் வர வேண்டும் என்பதையும் நான் தெளிவாக விளக்கினேன். ரஜினி தலைமை ஏற்க வர வேண்டும் என்று நான் சொன்னபோது கூட்டம் ஆர்ப்பரித்தது. மக்களுடைய ரெஸ்பான்ஸை அவர் நேரடியாக காணட்டும் என்றுதான் அவ்வாறு பேசினேன்" என்கிறார் சோ. "ரஜினி வந்தால் அது மூன்றாவது அணி. இல்லையேல் மூன்றாவதாக வரும் அணிதான்!" என்றும் முத்தாய்ப்பாகச் சொன்னார் சோ.

— ப்ரியன்

கவர் ஸ்டோரி

டைட்டில்



இந்தியா – பாகிஸ்தான் பதற்றம் கூட கொஞ்சம் தணிந்துவிட்டது. இந்த சின்னத்திரை – பெரியதிரை விவகாரம் நாளுக்கு நாள் விஸ்வரூபமாகிக் கொண்டே வரும் சூழ்நிலையில், தமிழ் மீடியாவுக்கு அதுதான் இன்றைய தலைப்புச் செய்தி! நாம் தரப் போகும் தலைப்புச் செய்தி கனோ வேறு! 'ஏய்! நீ ரொம்ப அழகா இருக்கே', 'ஐ லவ் யூ டா' மாதிரியான அபத்தம் ஆட்சி செய்யும் தலைப்புகளை, தங்கள் படங்களுக்கு வைத்து, புரட்சி பண்ணிக் கொண்டிருக்கிறார்கள் நமது தமிழ் சினிமா பெருமக்கள். எதனடிப்படையில் படங்களுக்குத் தலைப்பு சூட்டுகிறார்கள். சின்ன ஆராய்ச்சி என்று புகுந்தால் சினிமாஸ்கோப் மாதிரி விரிந்து கொண்டே போகிறது...

'பாலும் பழமும்', 'பாசமலர்', 'அவள் ஒரு தொடர்கதை', 'அவன்தான் மனிதன்', 'அபூர்வ ராகங்கள்', 'முள்ளும் மலரும்', 'மீண்டும் ஒரு காதல் கதை' இவையெல்லாம் எண்பதுகளுக்கு முற்பட்ட தலைப்புகள். தலைப்பைப் படித்த மாத்திரத்தில் படத்தைப் பார்க்க வேண்டும் என்று ஆர்வத்தைத் தூண்டும். போய்ப் பார்ப்பவர்களை ஏமாற்றாத அளவுக்குக், கதையம்சம் நிறைந்திருந்த படங்கள்.

'சென்டிமென்ட்' படுத்தும்பாடு!

இன்று வரும் படங்களில், கதையம்சம். உப்புக்குச் சப்பாணியாக ஆகிவிட்டதால்தானோ என்னவோ, படத்தின் தலைப்புக்கும், அதில் கையாளப்பட்டிருக்கும் கதைக்கும் துளியும் சம்பந்தம் இருக்காது. இதற்கொரு நல்ல உதாரணம் 'சாக்லேட்' படம்.





இந்தப் படத்தில் 'சாக்லேட்' என்றொரு பாடல் இடம்பெறுகிறதே தவிர கதையோடு துளியும் சம்பந்தமில்லாத தலைப்பு இது. இப்படித்தான் இன்றைக்கு தொண்ணூறு விழுக்காடு படங்களின் தலைப்புகள் வைக்கப்படுகின்றன.

விஜய் நடிக்கும் 'தமிழன்', பிரசாந்த் நடிக்கும் 'தமிழ்' என்று திடீர் தமிழ்ப் பற்று தற்போது நம் தமிழ்ப்பட நாயகர்களைப் போட்டு ஆட்டத் துவங்கியிருக்கிறது. இருந்தும் என்ன செய்ய? இதே ஹீரோக்கள் நடிக்கும் பல படங்களின் தலைப்புகள் ஆங்கிலத்தில் வைக்கப்பட்டுள்ளன. இந்த ஆங்கிலத் தலைப்பு மோகம் எங்கே, எப்படி ஆரம்பித்தது என்று கிளறினால், இயக்குனர் ஷங்கர்தான் இந்தப் புரட்சிக்கு வித்திட்டவர் என்று தெரிய வருகிறது.

ஷங்கர் முதன் முதலாக இயக்கிய படத்துக்கு 'ஜென்டில்மேன்' என்று தலைப்பு வைத்தாலும் வைத்தார். அதன் பிறகு புற்றீசல் மாதிரி ஆங்கிலத் தலைப்புகளை, காரண காரியம் இன்றிச் சூட்டத் தொடங்கி

விட்டார்கள். 'பேண்ட் மாஸ்டர்', 'ப்ரெண்ட்ஸ்', 'லிட்டில் ஜான்', 'சிட்டிசன்', 'லவ் சேனல்', 'லவ் மேரேஜ்', 'லவ்லி', 'ஸ்டார்', 'டபுள்ஸ்', 'குட்லக்', 'வின்னர்' இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம். தனது முயற்சியில் சற்றும் மனம் தளராத இயக்குனர் ஷங்கர், மறுபடியும் முருங்கை மரம் ஏறி, தனது புதுப் படத்துக்கு 'பாய்ஸ் ஃபார் கேர்ள்ஸ்' என்று தலைப்புச் சூட்டி சாதனை படைத்துவிட்டார்! தமிழும் ஆங்கிலமும் கலந்து பெயர் வைப்பதிலும் நம் ஆட்கள் சரியான கலப்படக் கில்லாடிகள். 'பட்ஜெட் பத்மநாபன்', 'மிடில் கிளாஸ் மாதவன்' என்று இதற்கு நிறைய சாட்சிகள் உண்டு.



அரசியல்வாதியையும் ஊழலையும் எப்படிப் பிரிக்க முடியாதோ, அப்படித்தான் சினிமாவும் சென்டிமெண்டும். பூஜையில் ஆரம்பிக்கும் சென்டிமெண்டுகள் படப்பிடிப்பு முடிந்து பூசணிக்காய் உடைக்கிறவரை தொடரும்! இப்படியிருக்கையில் தலைப்பு வைப்பதை மட்டும் விட்டு விடுவார்களா என்ன? இதில் கைதேர்ந்தவர் இயக்குனர் டி. ராஜேந்தர் என்கிறார்கள். எண்கணிதப்படி ஒன்பது எழுத்துகளில் டைட்டில் வைக்காவிட்டால் இவருக்குத் தலை வெடித்து விடுமாம். 'உயிருள்ளவரை உஷா' படத் தலைப்பில் ஆரம்பித்து, புதிதாக பூஜை போட்டிருக்கும் 'காதல் அழிவதில்லை' வரை எல்லாமே ஒன்பது எழுத்துகள்தான். இடையில் இந்த சென்டிமெண்டில் இருந்து விலகிய டி.ராஜேந்தர் 'மோனிசா' என்ற தலைப்புடன் படத்தைத் தொடங்கினார். ஆனால் பொருளாதாரப் பிரச்னைகளால் படப்பிடிப்புத் தேக்கம் அடைந்துவிட்டதாகவும், அதன் பிறகு தலைப்பை 'மோனிஷா என் மோனாலிசா' என்று மாற்றியதும் நிதி குவிந்து, மறுபடியும் படம் எடுத்ததாகவும் பட்சிகள் பகர்கின்றன.

இதற்கு அப்பால் கதாநாயகர்களைக் கட்டிக் கொண்டு தமிழ் சினிமா அழுவதால், கதையில் அவர்களின் பாத்திரப் பெயர்களையே படத்தின் தலைப்பாகச் சூட்டி விடும் நோய் வெகுவாகப் புரையோடி விட்டது. 'அண்ணாமலை', 'அருணாசலம்', 'வல்லரசு', 'நரசிம்மா', 'தீனா', 'பத்ரி', 'தவசி', 'ரிஷி', 'தெனாலி', 'மாயன்', 'நந்தா', 'ஆளவந்தான்', 'ஸ்ரீ', 'கிங்', 'சாமுராய்' என்று அதுவும் பெரிய பட்டியல். பாவம் கதாநாயகிகள் பெயரில் நீலாம்பரி, ஈர நிலா என்று அபூர்வமாகத்தான் தலைப்புகள் அமையும். சித்தி, மங்கை, மருமகள், ஆர்த்தி, ஸ்ருதி என்று சின்னத்திரையில்தான் அவர்களுக்குப் பூர்ணகும்ப மரியாதை! ஒரு குறிப்பிட்ட ஹீரோ நடிக்கும் ஸ்டீரியோ டைப் கதை என்றால் தலைப்புகளும் ஒரே மாதிரி இருக்கும். இதற்கு உதாரணமாகத் திகழ்பவர் உங்கள் அல்லது புரட்சித் தமிழன் சத்யராஜ். ஏகப்பட்ட இளம் ஹீரோக்கள் இண்டஸ்ரிக்குள் புகுந்து காதல், ரொமான்ஸ் என்று களமிறங்கிவிட்டார்கள். இந்த வயதில் நாம் மரத்தைச் சுற்றிவந்து டூயட் பாடவும் முடியாது, அதிரடி ஆக்ஷனும் பண்ண முடியாது என்று குழம்பிப்போய், கடைசியில் லொள்ளு, மற்றும் ஜொள்ளு பாணிக் கதைகள்தான் நமக்கு இனி சரிப்படும் என்று 'என்னம்மா கண்ணு' படம் மூலம் கண்டு கொண்டார். விளைவு அதே மாதிரி கதையம்சத்தோடு 'லூட்டி', 'அசத்தல்', 'விவரமான ஆளு' என்று தலைப்புகளும் அதே மாதிரி வாசனையோடு வைக்கப்படுகின்றன.

ஒரே மாதிரி கதையைத் திரும்பத்திரும்ப எடுக்கும் இயக்குனர்களும் இங்கே சிலர் உண்டு. கூட்டுக் குடும்பம், மிடில்கிளாஸ் குடும்ப வாழ்க்கை என்று தொடர்ந்து துணிச்சலாக முயன்று படமெடுக்கும் இயக்குனர் வி. சேகரின் படத் தலைப்புகள் கூட ஒரே மாதிரிதான் இருக்கும். 'கூடி வாழ்ந்தால்

வர்த்தமானன் பதிப்பகம் வழங்கும் கையடக்கப் பதிப்பு

சிலப்பதிகாரம்
மணிமேகலை



பக்கம் 511 ரூ.45.00

மூலமும் தெளிவுரையும்

'இரட்டைக் காப்பியங்கள்' எனப் போற்றப்படும்

சிலப்பதிகாரமும் மணிமேகலையும்

ஒரு பக்கம் மூலம் - எதிர்ப்பக்கம் உரை என்னும் அமைப்பில்

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய இவ்விரு காப்பியங்களும் தமிழர் நாகரிகத்தின் சின்னமாகத் திகழ்கின்றன. தமிழில் தோன்றிய ஆதி காவியங்கள் என்னும் பெருமை இவ்விரு காப்பியங்களுக்கும் உண்டு.

சிலப்பதிகாரம் : தன்னுணர்ச்சிப் பாடல்களையே கொண்டு திகழ்ந்த சங்க இலக்கியப் போக்கை மாற்றிப் புரட்சி செய்தவர் இளங்கோவடிகள். தனிப்பாடல்களிலேயே தங்கியிருந்த தமிழ்த் தாயைக் காப்பிய மாளிகையில் குடியேறச் செய்த பெருமை இளங்கோவையே சாரும்.

கண்ணகி புகாரில் அமைதிப் பெண்ணாகத் தோன்றி, மதுரையில் வீரம் விளைத்து, வஞ்சியில் வானவர் வாழ்வு பெறுகிறாள். கண்ணகி சாதாரணக் குடியில் பிறந்தவளே யாயினும் காப்பியத் தொடக்கம் முதல் முடிவுவரை தெய்வமாகவே அனைவராலும் போற்றப்படுகிறாள். சேரன் கல்லை அடுக்கிக் கண்ணகிக்கு அமைத்த கற்கோயில் இன்றில்லை. ஆனால் இளங்கோவடிகள் சொல்லை இழைத்து அமைத்த சுந்தரமாம் ஒரு காப்பியக் கோயிலில் கண்ணகியைக் கண்டு வழிபடலாம்.

மணிமேகலை : தந்தை கோவலன் கதையைச் சிலம்பு சித்திரிக்க, மகள் மணிமேகலையின் மாண்பை 'மணிமேகலை' கூறுகிறது. தன் வயிற்றில் பிறந்த மணிமேகலையை மாதவி, மாபெரும்பத்தினி (கண்ணகி)யின் மகள் என்று கூறி மகிழ்ச்சி அடைகிறாள். மணிமேகலை பருவப் பெண்ணாகச் சிலம்பில் விளங்குவதைத் தொடர்ந்து மணிமேகலைக் காப்பியம் கதையைக் கூறிச் செல்கிறது.

சாத்தனார் பசி எங்கெல்லாம் தோன்றுகிறதோ அங்கெல்லாம் சென்று அமுதசுரபியைக் கொண்டு அறப்பணி செய்யும் அறச் செல்வியாக மணிமேகலையைக் காட்டியுள்ளார். மணிமேகலை பசிக் கொடுமையைத் தொலைக்கிறாள்; சாதுவன் மதுவை ஒழிக்கிறான்; ஆபுத்திரன் சாதியைச் சாடுகிறான். இவ்வாறு காப்பியத்தில் பல மாந்தரை உலவ விட்டுத் தம் காப்பியத்தையே ஒரு புரட்சிக் காப்பியமாக அமைத்துள்ளார், சாத்தனார்.



பக்கம் 437 ரூ.45.00

நூல்களைப் பெறக் கடிதம் எழுதுக. இரு நூல்களையும் V.P.P. யில் அனுப்புகிறோம். நூல்கள் விலை, தபால் மற்றும் கட்டுச் செலவு சேர்த்து ரூ. **106** மட்டும் செலுத்தி நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

கடிதம் எழுத வேண்டிய முகவரி :

வர்த்தமானன் பதிப்பகம்

15, சரோஜினி தெரு, தியாகராயநகர், சென்னை - 17.

(உஸ்மான் சாலை - கீதாஞ்சலி ஹோட்டல் அருகில்) ☎ : 435 0561.

நேரில் : ரூ.90 மட்டும் செலுத்தி நூல்களை உடனே பெற்றுக் கொள்ளலாம். நேரம் : காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை. இடைவேளையின்றி. ஞாயிறு வார விடுமுறை

கோடி நன்மை', 'ஒன்னா இருக்கக் கத்துக் கனும்', 'பொண்டாட்டி சொன்னா கேட் டுக்கனும்' என்று தலைப்பே இது வி. சேகர் படம் என்பதைச் சொல்லிவிடும்!

இதையெல்லாம் விட கோடம்பாக்கத்தை ஏழரைச்சனி மாதிரி ஆட்டிப்பிடிக்கும் காதல் படங்களுக்கு வைக்கப்படும் தலைப்புகள் இருக்கிறது! காதல் மீதான நம்பிக்கையும் ஆர்வமும் ரசிகனுக்கு இல்லாமல் செய்து விடும்படியாகத் தலைப்புகள் இருக்கின்றன. 'தேவதை'யில் தொடங்கி 'மின்னலே' என்று முழங்கி, 'காதலே நிம்மதி', 'காதலே சுவாசம்', 'என்றென்றும் காதல்' என்று புலம்பி, இறுதியில் நினைவுச் சின்னங்களையும், வரலாற்றுக் காதலர்களையும் கூட விட்டு வைக்கவில்லை. 'தாஜ்மஹால்', 'ஷாஜஹான்', 'மஜ்னு' போன்ற தலைப்புகள் நல்ல எடுத்துக்காட்டுகள். இந்த அளவோடு காதல்பட பைத்தியம் நின்றதா என்றால் இல்லை... 'பார்வை ஒன்றே போதுமே' படம் ஓரளவு வசூல் செய்துவிட, 'இனி எல்லாம் சுகமே' என்று அதே பட நிறுவனம், அதே இயக்குனர், அதே ஹீரோ என்று களமிறங்கி விட்டது.

நல்லவேளையாக வந்தாச்சு. போயாச்சு பாணி டைட்டில்கள் கொஞ்சம் ஓய்ஞ்சு போயிடுச்சு என்பதற்கு ஆதாரமாக கடந்த ஆண்டு, 'தைபொறந்தாச்சு', 'கிழக்கு வெளுத்தாச்சு' ஆகிய இரண்டு படங்கள் மட்டுமே வெளிவந்தன. ஆனால் இந்த புருஷன் பொஞ்சாதி டைட்டில்களைக் கொண்ட படங்கள் வருஷத்துக்கு ஒரு அரை டஜனாவது வந்து, தமிழ் சினிமாவின் தரம் இன்னும் அடிமட்டத்திலேயே இருக்கிறது என்பதை ஞாபகப்படுத்திக் கொண்டே இருக்கின்றன. 'புல்லானாலும் பொஞ்சாதி', 'என் புருஷன் குழந்தை மாதிரி', 'வீட்டோட மாப்பிள்ளை', 'வடுகப்பட்டி மாப்பிள்ளை' இவையெல்லாம் சமீபத்திய டொமஸ்டிக் கல்வெட்டுக்கள்!

தமிழ் சினிமாவில், மலையாள மற்றும் வங்காள சினிமாக்களுக்கு வைக்கப்படும் கவிதைத்தனமான தலைப்புகளைப் போல் யாராவது சூட்டுகிறார்களா என்றால், 'கடலோரக் கவிதைகள்', 'கடல் பூக்கள்', 'ரோஜாக் கூட்டம்', 'நிலாக்காலம்' என்று பெயர் சூட்டும் ஒரு சில இயக்குனர்களை விரல்விட்டு எண்ணி விடலாம். ஆனால் தேன்மாவில் கொம்பத்து (தேன் மாமரத்தின் கிளை), மழைத்து முன்பே (மழை வரும் முன்பே), 'கிருஷ்ணங்குடியில் ஒரு பிரணய காலத்து (கிருஷ்ணங்குடியில் ஒரு காதல் காலம்), பிரணய வர்ணங்கள் (காதல் வண்ணங்கள்) போன்ற தலைப்புகள் தமிழில் இல்லை.

ஆனால் கவனத்தை ஈர்க்கவே கிடைக்கும் என்பதற்காகவே ராஜாதி ராஜ, ராஜ மார்த்தாண்ட, ராஜகம்பீர, ராஜ குலோத்துங்கன் என்று மைல் நீள தலைப்பு வைக்கும் மன்சூர் அலிகான் மாதிரியான ஆட்களும் தமிழ் சினிமாவில் இருக்கவே செய்கிறார்கள். தலைப்பு வைப்பதில் புரட்சி செய்கிறேன் பேர்வழி என்று 'ஏ' என்று ஒற்றை எழுத்தி லெல்லாம் வைத்தாகிவிட்டது. நமது கவலையெல்லாம், தலைப்பே இல்லாமல் யாரும் படமெடுத்து புரட்சி செய்துவிடக் கூடாதே என்பதுதான்!

— விஷுவல்தாசன்



சூ! விக்ரமக்காளி!

எதைச் செய்தாலும், ஆழ்ந்த ஈடுபாடு ப்ளஸ் புதுமை இருக்கும்படி மெனக்கெடுவது நடிகர் விக்ரமின் ஸ்டைல். 'கிங்' படத்தில் மேஜிஷியன் கதாபாத்திரத்தில் நடிப்பதால், உண்மையாகவே மேஜிக் மேன் ஒருவரிடம் சென்று மேஜிக் வித்தையைக் கற்று வந்திருக்கிறார். அதுமட்டுமல்ல, தான் கற்ற, மந்திர தந்திர வித்தைகளை 'கிங்' கேஸட் வெளியீட்டு விழாவில் நடத்திக்காட்டி பார்வையாளர்களை அசத்தவும் திட்டமிட்டிருக்கிறாராம்.

— ஜெ

- உயிர் பிழைத்த பக்தர்களின் உதறல் பேட்டி!

மகர ஜோதியா? மரண ஜோதியா?

நம்மைத் தொலைபேசியில் அழைக்கும்போதே குரல் உடைந்து தழுதழுக்கிறது வே கோபாலுக்கு! முப்பத்து மூன்று வருடமாக சபரிமலை சென்று வரும், ஐயப்ப குருசாமியான இவர், இந்தியன் வங்கியில் முதுநிலை ஊழியர். இவரது தலைமையில் பதினான்கு ஐயப்பப் பக்தர்கள், ஜனவரி 14 ஆம் தேதி மகர ஜோதியையும், ஸ்ரீ ஐயப்பனையும் தரிசிக்க சபரி மலைக்கு யாத்திரை மேற்கொண்டார்கள்! ஆனால் "நாங்கள் உயிர் பிழைத்து வந்ததே கடவுள் கிருபை. எங்களுக்கு மட்டுமல்ல. அங்கே குழுமிய பத்து லட்சம் பக்தர்களுக்கும் நேர்ந்த கசப்பான அனுபவங்கள், ஒரு கட்டத்தில் நாத்திக எண்ணங்களைக்கூட மனத்தில் ஓட்டின" என்று அதிர்ச்சி விலகாத முகத்துடன் சொல்கிறார்கள் விக்னேஷ், திருக்குமரன்.

"நாங்கள் பலமுறை நாற்பத்து எட்டு மைல் பெருவழிப்பாதையில் சென்றிருக்கிறோம். மகரஜோதிக்கு லட்சக்கணக்கில் பக்தர்கள் கூடுவார்கள். தெரிந்தே தான் யாத்திரை புறப்பட்டோம். புறப்படும்போது எங்களுக்கு எந்தக் கவலையும் இருக்கவில்லை. காரணம் அங்கே தேவஸ்தான நிர்வாகம், கேரள காவல் துறை, முக்கியமாக ஐயப்ப சேவா சங்கம் என்று எல்லா தரப்பிலிருந்தும் பக்தர்களுக்குப் பாதுகாப்பும், உதவியும் கிடைக்கும் என்று வழக்கம்போல நம்பிக்கையோடு போனோம்.



• விக்னேஷ்

• வேணுகோபால்

"எரிமலை வரை எங்கள் நடைபயணம் எந்தப் பிரச்னையும் இல்லாமல் நகர்ந்தது. ஆனால் கரிமலையில் நாங்கள் தங்கியிருந்தபோது நூற்றுக்கணக்கான யானைகள் சூழ்ந்து கொண்டன. பயந்தடித்து ஓடிய பல ஆயிரம் பக்தர்கள் தூங்கிக் கொண்டிருந்த பக்தர்களை மிதித்து நசுக்கிச் செல்ல, அதில் நாங்களும் காயமுற்றோம் என்றனர் இலேசான நடுக்கத்துடன்.

"பம்பாவிலிருந்துதான் போலீஸ் காவலே போடப்பட்

டிருந்தது. பம்பாவிலிருந்து மதியம் பன்னிரண்டு மணிக்கு நகர ஆரம்பித்த எங்கள் வரிசை சரகொத்தி வந்தபோது இரவு இரண்டு மணி. 'ஹரிஹராசனம்' பாடி முடித்தாகிவிட்டது. "இனி நாங்கள் போய்ச் சாப்பிட்டு காலையில் வருகிறோம்" என்றபோது போலீசார் தடிகளை ஓங்கி "எங்கும் நகராதே! வரிசையைத் தாண்டிக் குதித்தால் காலை ஒடிப்பேன்" என்று அசிங்கமாகத் திட்டினார்கள். கைநிறையப் பணமிருந்தும் வாங்குவதற்கு வழியில் தண்ணீரோ உணவோ இல்லை. சரி, காலை நான்கு மணிக்கு நடை திறந்துவிடுவார்கள். தரிசனம் முடித்து விடலாம் என்று காத்திருந்தோம். காலை ஐந்துமணிக்குத் திரும்பவும் வரிசை நகர ஆரம்பித்ததும் ஏழு மணிக்கெல்லாம் சன்னிதானம் போய்விடலாம் என்று நினைத்தோம். ஆனால் காலை பதினொரு மணிக்குத்தான் சன்னதியை நெருங்கினோம். எங்கள் குழுவில் பலர் மாற்றி மாற்றி மயக்கமடைந்து சரிந்து விழுந்தனர். இதற்கிடையில் வரிசையில் எகிறிக் குதித்த சில பக்தர்களைக் காரணம் காட்டி, கேரள போலீசார் தடிகொண்டு தாக்க... நூற்றுக்கணக்கான பக்தர்கள் இரத்தம் வழியச் சிதறி ஓடியும், விழுந்தும் படுகாயமுற்றனர். இதைக் கண்முன்னால் கண்டபடி, பதினெட்டாவது படிவரை ஏறிய எங்களால் ஸ்வாமியைத் தரிசிக்க முடியவில்லை. நூறு பேர் நிற்க வேண்டிய படியில் ஆயிரம் பேர் என்ற நிலையில் தூக்கி வீசப்பட்டோம்.



• திருக்குமரன்

"இதையெல்லாம் கேரள போலீஸ் வேடிக்கைப் பார்த்தது அல்லது முடிந்த மட்டும் பக்தர்களை குண்டாந்தடி கொண்டு தாக்கியது! வழியும் இரத்தத்தோடுத் தரிசனம் முடித்து, உயிர் மீண்டதே போதுமென்று பம்பா திரும்பி வந்த எங்களுக்கு இதயமே ஒருகணம் உறைந்துவிட்டது. காரணம் ஆயிரத்து இருநூறு வாகனங்கள் பார்க் செய்யப்படும் பம்பையில் ஒரு பேருந்தையோ வேனையோகூட காணவில்லை. அதிர்ச்சியுடன் போலீஸ் பூத்தை நோக்கி ஓடியபோது "உங்கள் வண்டிகள் எல்லாம் 'நிலக்கல்' லிலேயே நிறுத்தப்பட்டு விட்டன. நடந்து போய் ஏறிக் கொள்ளுங்கள்" என்றார்கள். "நிலக்கல்லுக்கு எந்த வழியில் போவது, எத்தனை தூரம்?" என்றபோது எங்களுக்கு எதுவும் தெரியாது. எப்படியாவது போய்க் கோடா" என்று திட்டினார்கள். நிலக்கல்லிலேயே பேருந்துகள் நிறுத்தப்படும் என்று முன்கூட்டியே கேரள அரசு எந்த அறிவிப்பும் வெளியிடாததால், செய்வதறியாது திகைத்து, திரும்பவும் முப்பது கிலோமீட்டர் தூரம் நடந்தோம்.


இந்தத் திடீர் மாற்றத்தால், எங்களைப் போலவே வந்து கொண்டிருந்தனர் பல ஆயிரம் பக்தர்கள். இவர்களுள் பலர் குழந்தைகள், முதியவர்கள்! எங்கும் யாரிடமும் குடிதண்ணீர் இல்லை. தாகத்தில் மூர்ச்சையாகி வழி நெடுகிலும் 'சோமாலியா'-போல பல நூறு பக்தர்கள் மயங்கி விழுந்த காட்சியைக் கண்டு உறைந்து போனோம்.

தொண்டை வறண்டு, இறந்து போன இரண்டு பக்தர்களின் உடல்களை எங்கள் கண்முன்னால் தூக்கிக் கொண்டு போனார்கள்..." விவரித்த அனுபவத்தை நினைத்து நடுங்கினார்கள் விக்னேஷும் திருக்குமரனும்.

"செங்கனூரிலிருந்து சென்னை வந்து சேர அரசுப் பேருந்தில் நாங்கள் முன்பதிவு செய்திருந்தும் அதில் வந்து சேர முடியவில்லை. இரண்டு நாட்கள் தாமதமாக 'செத்தோம், பிழைத்தோம்' என்று வீடு வந்து சேர்ந்தோம்" என்ற குருசாமி வேணுகோபால் தொடர்ந்து பேசினார்.

"பம்பை பார்க்கிங் காண்ட்ராக்டருக்கும், பம்பை போலீஸ் ஸ்பெஷல் ஆபீசர் லட்சுமணாவுக்கும் கமிஷன் தொகையில் தகராறு என்கிறார்கள். இதனால் பேருந்துகள் எல்லாம் நிலக்கல்லிலேயே நிறுத்தப்பட்டு, பக்தர்கள் பழி வாங்கப்பட்டனர். கேரள அரசும் இதை வேடிக்கை பார்த்துக்கொண்டு இருந்துவிட்டது. மகரஜோதியின் போது லட்சக்கணக்கான பக்தர்கள் வருகிறார்கள் என்று தெரிந்தும் குடிநீர் போன்ற அடிப்படை வசதி கூட செய்து கொடுக்காமல், வருமானத்தில் மட்டும் குறியாக இருக்கிறது கேரள அரசு. "அரசும் ஐயப்ப தேவஸ்தானமும் இணைந்து ஏற்பாடுகளைச் சரியாக செய்யாவிட்டால் ஒவ்வொரு ஆண்டும் சபரிமலை நெரிசலிலும் போலீஸ் அத்துமீறலிலும் நேர்ந்துவரும் நூற்றுக்கணக்கான உயிரிழப்புகள் கேரளத்துக்கு மட்டுமல்ல, இந்தியாவுக்கும் கறையாக அமைந்துவிடும்" என்கிறார்.

சந்திப்பு: ஆர்.சி. ஜெயந்த்
படங்கள்: ஸ்ரீஹரி





2002 ஜனவரி 27
விஷு தை 14
மலர் : 60
இதழ் : 26

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.




பாகிஸ்தானுடன் பேசுங்கள்!

"பேசினால் போதாது; செயலில் காட்டுங்கள். இந்தோ - பாக் உறவைச் சீர்ப்படுத்த விரும்பினால் காஷ்மீரில் எல்லைப்புற பயங்கரவாதத்துக்கு முடிவு கட்டுங்கள்!" - இந்தியா தரப்பில் பாகிஸ்தான் அதிபர் முஷரஃபுக்குத் தரப்பட்டுள்ள பதில் இதுதான்!

முஷரஃபின் அறிக்கை அமைதிக்கான உத்தரவாதமாக அமைந்துவிடவில்லை என்பது வாஸ்துவம்தான். லஷ்கர் முதலான நான்கு அமைப்புகளை அவர் தடை செய்ததுதான் தாமதம்... 'ஜிஹாத் தொடரும்' என்று அதிரடி அறிக்கை விட்டார் லஷ்கர் அமைப்பின் தலைவர்!

இந்த பயங்கரவாத அமைப்புகள் மீது நடவடிக்கை எடுப்பதுபோல நாடகமாடுவது முஷரஃபுக்கு எளிது. ஒரு கண்துடைப்பாக அல்லாமல் நிஜமாகவே நடவடிக்கை எடுத்தாலும் பயங்கரவாதிகள் தலைமறைவாகி விடுவார்கள்.

அமெரிக்கா, முஷரஃபின் அறிக்கையைப் பாராட்டலாம். ஆனால், அறிக்கைகளும் பாராட்டுகளும் காஷ்மீர் எல்லையில் பயங்கரவாதிகளின் ஊடுருவலைத் தடுத்துவிடாது. அதைத் தடுக்க இரண்டே வழிகள்தான் உள்ளன. ஒன்று, பாகிஸ்தானுக்குள் புகுந்து பயங்கரவாதிகள் முகாம்களைத் தாக்குவது. இது இந்தோ-பாக் யுத்தமாக நிச்சயம் விரிவடையும். ஏற்கெனவே நலிவுற்றுள்ள நமது பொருளாதாரம், அதலபாதாளத்துக்குப் போகும்.



இரண்டாவது வழி: பாகிஸ்தானுடன் பேச்சுவார்த்தை நடத்துவது. 'பேசுகிறோம்; ஆனால் இதர விஷயங்கள் பற்றி பேசலாம்; காஷ்மீர் பற்றி பேச முடியாது' என்கிற பிடிவாதம், பிரச்னைக்குத் தீர்வாக அமையாது.

'காஷ்மீர்ப் பிரச்னை ஏற்கெனவே முடிவு காணப்பட்ட விஷயம். அதுபற்றிப் பேச என்ன இருக்கிறது?' என்கிற அணுகுமுறையை இந்தியா மேற்கொள்வது விவேகமல்ல.

காஷ்மீரில் அமைதி காக்கவும் காஷ்மீர் மக்களின் பாதுகாப்புக்காகவும் செலவாகும் வரிப்பணம், ஆண்டுதோறும் அதிகமாகிக் கொண்டே வருகிறது. ஆனால், அந்த மாநிலத்தில் அமைதியும் சகஜ வாழ்க்கையும் இன்னும் திரும்பவேயில்லை.


போதாக்குறைக்கு, காஷ்மீர் எல்லையில் தழைக்கும் பயங்கரவாதம், அந்த மாநிலத்தைக் கடந்து நாட்டின் பல்வேறு பகுதிகளுக்குள் ஊடுருவிக் கொண்டுமிருக்கிறது.

காஷ்மீரில் இயங்கும் பயங்கரவாத அமைப்புகள், ஆரம்பத்தில் பாகிஸ்தான் கூலிப்படைகளாக இருந்தன. ஆனால், காலப்போக்கில் அவை தனித் தனி பயங்கரவாத அமைப்புகளாக 'பரிணாம வளர்ச்சி'யுற்றுவிட்டன. உலகளாவிய பயங்கரவாத அமைப்புகளின் ஆதரவும் 'ஆசி'யும் பெற்று இயங்குகின்றன. முஷரஃப்பின் கோரிக்கைக்கோ மிரட்டலுக்கோ அவை பணியும் என்று எதிர்பார்ப்பது தவறு. முஷரஃப் அவற்றை மெய்யாலுமே மிரட்டி, கட்டுப்படுத்த முயற்சி மேற்கொள்வார் என்று எதிர்பார்ப்பதோ நம்மை நாமே ஏமாற்றிக்கொள்ளும் காரியம்.

முஷரஃப் நடத்துவது ராணுவ ஆட்சி. அதன் கதியே நித்திய கண்டம் பூரண ஆயுள் என்று இருக்கிறது! மேலும், பாகிஸ்தான் அரசியலின் முக்கிய அம்சமே இந்தியா எதிர்ப்புதான். உள்நாட்டுப் பிரச்னைகளிலிருந்து மக்களை திசை திருப்ப, சதாகாலமும் காஷ்மீர்ப் பிரச்னையைக் கிளறி இந்தியாவோடு மோதுவதுதான் அடுத்தடுத்து வந்த பாக் அதிபர்களின் பழக்கம்.

எனவே, முஷரஃப் விரும்பினால்கூட தாம் சொல்வதைச் செயலில் காட்டுவது கடினம்.

இவ்வாறிருக்க, இந்தியா காஷ்மீர் பற்றிய பேச்சுவார்த்தைக்கு ஒப்புதல் தெரிவிக்காமல்



பிடிவாதம் காட்டுவது நிலைமையை மேலும் சிக்கலாக்கும்.

பேச்சு வார்த்தைக்கு ஒப்புக் கொண்டால்...

- பாக் பயங்கரவாதிகள் இந்தியாவில் நாசம் விளைத்திருப்பதை ஆதாரங்களுடன் பிட்டுப் பிட்டு வைக்கலாம்.
- இந்தியா விசாரிக்க விரும்பும் இருபது பாகிஸ்தானியர்களை ஒப்படைக்கும்படி எடுத்துச் சொல்லி, தார்மிக பலத்துடன் வலியுறுத்தலாம்.
- லஷ்கர் அமைப்பை பாகிஸ்தான் தடை செய்த கையுடனேயே அவ்வமைப்பின் தலைவர் புனிதப் போரைத் தொடரப் போவதாக அறிவித்திருப்பதைச் சுட்டிக்காட்டி, உலகத்தின் கவனத்தைப் பெறலாம். இந்தியாவின் கை ஓங்க இது உதவும்.

பாகிஸ்தானை எளிதில் தோற்கடிக்கும் அளவுக்கு இந்தியாவிடம் ராணுவ பலமும் ஆயுத பலமும் இருக்கின்றன. ஆனால் அவற்றை இந்தக் கட்டத்தில் பிரயோகிப்பது தவறாகிவிடும். யுத்தத்துக்கு முதல் அடியை எடுத்து வைத்த குற்றச்சாட்டுக்கு பாரதம் ஆளாகிவிடும். ஆக்கிரமிப்பாளர் என்ற பழி வந்து சேரும். பொருளாதாரமும் பாழாகும்.

ராணுவ பலத்துக்கு நிகரான அயலுறவுத்துறை அனுபவமும் சாதுர்யமும் இந்திய அதிகாரிகளிடமும் அரசியல்வாதிகளிடமும் உண்டு.

ஆனால் நமது அரசியல்வாதிகள் இந்தோ - பாக் பிரச்னையை ஒரு கௌரவப் பிரச்னையாக்கி உணர்ச்சிபூர்வமாக அணுகுகிறார்களே அன்றி அறிவுபூர்வமாக அல்ல. உணர்ச்சி பூர்வமான அணுகுமுறை, குறுகிய நோக்கில், மத்திய அரசைக் குறித்து மக்களின் மதிப்பை உயர்த்தி, வோட்டுக்கள் பெற உதவலாம். ஆனால், நீண்டகால நோக்கில் காஷ்மீர்ப் பிரச்னைக்குத் தீர்வு ஏற்படாது.

காஷ்மீர் தொடர்பாக நாட்டின் செலவுச் சுமையும் ராணுவத்துக்கான செலவுகளும் குறைந்தாக வேண்டும். தினம் தினம் செத்துப் பிழைக்கின்ற காஷ்மீர் மக்களின் துயர் களையப்பட்டாக வேண்டும். இவை அனைத்துக்கும் முதல்படி பாகிஸ்தானுடனான பேச்சு வார்த்தைதான். ○

மேஷம் : பாகிஸ்தானும் இந்தியாவும் எல்லையில் முறைத்துக் கொண்டு நிற்பது மாதிரிதான் இந்த வாரம் உங்களுக்கு. எந்தக் காரியமும் இழுத்தடிக்கப்படும். குடும்பத்துல அமைதி காண பாடுபட வேண்டியிருக்கும். உடல் நலன்ல கவனம் வைக்கவும். கொடுக்கல் வாங்கல்ல எச்சரிக்கை அவசியம். பயணமா? ஐயோ, இந்த வாரம் வேண்டாம். வியாபாரிகளுக்கு வளர்ச்சி உண்டு. கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்குக் கவலை இல்லை. கம்ப்யூட்டர், எலக்ட்ரானிக்ஸ் துறைகள்ல வேலை பார்க்கறவங்களுக்கு அனுகூலம் உண்டு. இயந்திரம், எரிபொருள், மின்சாரம் போன்ற துறைகள்ல வேலை பார்க்கறவங்க உஷாரா இருக்கறது நல்லது.

ரிஷபம் : அமெரிக்கப் பயணத்துல சந்தோஷமாயிருக்கிற உள்துறை அமைச்சர் அத்வானி மாதிரி மகிழ்ச்சிதான் இந்த வாரம். எதிர்ப்புகளே இருக்காது. இதுவரை இம்சை பண்ணிக் கொண்டிருந்த பிரச்னைகள் குறையும். மனசுல துணிச்சலும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். பார்ட்னர்ஷிப்ல தொழில் பண்றவங்களுக்கு ஆதாயம் உண்டு. எந்தக் காரியத்துலேயும் அதிகம் உழைப்பு வேண்டியிருக்கும். பெற்றோர் நலன்ல அக்கறை அவசியம். சிலருக்கு அதிர்ஷ்ட வாய்ப்புகள் இருக்கு. ஏற்றுமதி இறக்குமதி தொழில் பண்றவங்க விழிப்போட இருந்தா நஷ்டத்திலிருந்து தப்பலாம்.

மிதுனம் : உங்க சாமர்த்தியம் ஜெயிக்கும். எடுத்தக் காரியத்தை எப்பாடுபட்டாவது நிறைவேற்றிடுவீங்க. என் ஜீனியர்கள், சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவங்களுக்கு வெற்றி வாய்ப்பு இருக்கு. அலைச்சல் அதிகமாவதைத் தடுக்க முடியாது. கொடுக்கல் வாங்கல் விஷயத்தில் எச்சரிக்கை அவசியம். சனி பலம் குறைந்து இருக்கறதால செலவுகள், இழப்புகள் தவிர்க்க முடியாது. மனசுல ஏதாவது சஞ்சலம் இருந்துட்டே இருக்கும். கணவன் மனைவிக்குள்ள கருத்து வேறுபாடு இருக்கும். விட்டுக் கொடுத்துப் போறது நல்லது.

கடகம் : உங்க திறமை, செயல்பாடுகள் பளிச்சிடப் போகுது. எதிர்ப்புகள் கட்டுக்குள் அடங்கிக் கிடக்கும். நண்பர்கள், முக்கியமானவர்கள் உதவுவாங்க. பக்தி மார்க்கத்திலேயும், ஞானமார்க்கத்திலேயும் மனம் அலையும். காடு, மலை பிரதேசம் வனாந்தரங்களில வேலை பார்ப்பவங்களுக்கு முன்னேற்றம் இருக்கு. இரும்பு, எஃகு, எண்ணெய் வகைகள் பிஸினஸ் பண்றவங்களுக்கு ஆதாயம் இருக்கு. குடும்பத்தில் சுபகாரியம் நடக்க சந்தர்ப்பம் கிடைக்கும். கேளிக்கை, உல்லாசம் விளையாட்டு ஆகியவைகளில் அதிகமா ஈடுபட வேண்டாம். ஆடம்பர செலவுகளைத் தவிர்ப்பது நல்லது. எந்தக் காரியத்திலும் நல்லா யோசித்து ஈடுபடுவது பயன்தரும்.

சிம்மம் : கிரக சஞ்சாரம் உங்களுக்குச் சாதகமா இருக்கறதால முக்கியமான காரியங்கள் எளிதில் நிறைவேறும். பயணத்தால் நன்மைகள் உண்டு. அரசியல்வாதிகளுக்கு மதிப்பு அந்தஸ்து உயரும். கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு வெற்றி உண்டு. நண்பர்கள் நெருங்கிய உறவினர்கள் உதவிக்கு வருவாங்க. பொருளாதாரம் திருப்தியாக இருக்கும். பண நடமாட்டம் சீராக இருந்து வரும். எந்தக் காரியத்திலயும் பதற்றம், அவசரம் வேண்டாம். சிலருக்கு நிர்வாகத் திறமை அதிகரிக்கும். இதனால் பாராட்டு மழையில் நனையலாம்.

கன்னி : பண நடமாட்டம் திருப்தியாக இருக்கும். சிலருக்கு அதிர்ஷ்ட வாய்ப்புகள் காத்திருக்கு. வெளிநாட்டுத் தொடர்பு பயன் தரும். கலைத் துறையைச் சேர்ந்தவர்களுக்குப் புகழ், பாராட்டுக் குவியும். சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவங்க, தங்கள் கடமைகளைக் கவனமா செய்தால் பிரச்னைகள்ல இருந்து தப்பிக்கலாம். எல்லாரிடமும் சுமுகமாக பேசிப் பழகுவது நல்லது. உடல் நலன்ல கவனம் வையுங்க. வீண் அலைச்சலைத் தவிர்த்திடுங்க. கணவன் மனைவிக்குள்ளே கருத்து வேறுபாடுகள் வர வாய்ப்பிருக்கு.

ஜனவரி 23 முதல் 29 வரை

துலாம் : மனகல துணிச்சலும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். இதுவரை இருந்து வந்த மனக் குழப்பம் இப்ப மாயமாகும். குடும்பத்துல இதுவரை இருந்து வந்த கருத்து வேறுபாடுகள் நீங்கும். புதிய சொத்து சேர்க்கை அல்லது சொத்துக்கள் மூலம் ஆதாயம் கிடைக்கும். சிலருக்குப் புதுவீடு, வாகனம் போன்ற இனங்களில் ஈடுபாடு கூடும். கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு வெற்றி வாய்ப்புகள் அதிகரிக்கும். கணிதம், எழுத்து, பத்திரிகைத் துறைகளைச் சேர்ந்தவங்களுக்கு முன்னேற்றம் உண்டு. மாணவர்கள் படிப்பில் அக்கறை செலுத்த வேண்டும். விளையாட்டு விநோதங்களில் வெற்றி வாய்ப்பு தேடி வரும்.

விருச்சிகம் : கிரங்கள் 'மக்கர்' பண்ணுவதால் கொஞ்சம் உஷாராவே இருங்க. சின்னச் சின்ன சங்கடங்கள், பிரச்னைகள் வந்து சிம்சை பண்ணும். பேச்சில் இனிமை அவசியம். யாருக்கும் ஜாமீன் போட வேண்டாம். பொருளாதார நிலைமை திருப்தியாக இருக்காது. மன கல குழப்பங்கள் தானாக வரும். வியாபாரிகள் அகல கால் வைக்க வேண்டாம். முன்னேபின்னே தெரியாதவங்ககிட்ட அதிகமா வாய் கொடுக்க வேண்டாம். பயணத்தின்போது எச்சரிக்கை அவசியம். அரசு பணியாளர்கள் மதிப்பு அந்தஸ்து உயரும். முக்கியமானவங்க உங்களுக்கு உதவ முன் வருவாங்க.

தனுசு : உங்களோட புத்திசாலித்தனம், பேச்சாற்றல் வெளிப்படப் போகுது. எதிர்ப்புகள் குறையும். குடும்பத்துல சுபகாரியம் நடக்க சந்தர்ப்பம் வரும். புதிய பொருள்கள் ஆடைகள் நகைகள் வாங்க வாய்ப்பிருக்கு. நண்பர்கள் உறவினர்கள் மூலமா சில திட்டங்கள் நிறைவேறும். இரும்பு, எஃகு, எண்ணெய் வகைகள், தோல் பொருள்கள் ஆகிய பிஸினஸ் பண்றவங்களுக்கு லாபம் கொட்டும். பயணம் தவிர்ப்பது நல்லது. அறிமுகம் இல்லாதவங்ககிட்டே அதிகமா கதையளக்க வேண்டாம். வருமானம் பல வழிகள்ல இருந்து வரும். பேச்சில் கவர்ச்சி அதிகரிக்கும்.


மகரம் : கிரகங்கள் உங்களுக்குச் சாதகமா இருக்கறதால என்னதான் எதிர்ப்புகள் இருந்தாலும் அவற்றைக் கடந்து வாழ்க்கையில் முன்னேற்றம் காணலாம். துணிச்சலும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். வெளிநாட்டிலிருந்து நல்ல தகவல் வந்து சேரும். சட்டம், காவல், இராணுவத் துறைகளைச் சேர்ந்தவங்களுக்குப் புகழ், பாராட்டு தேடி வரும். உடல் நலன்ல கவனம் வைப்பது நல்லது. உஷ்ண சம்பந்தமான நோய்கள் வரலாம். அலைச்சல் அதிகரிக்கும். குடும்பத்தில் மருத்துவச் செலவு கூடும். அரசியல்வாதிகள் எச்சரிக்கையாக இருந்தால் தொல்லைகளுக்கு ஆளாகாமல் தப்பலாம். செலவுகள் எகிறும். பர்ஸைப் பத்திரப்படுத்துவது நல்லது.

கும்பம் : மனதுக்கினிய சம்பவங்கள் நடைபெறப் போகுது. இதனால மனசு சந்தோஷத்துல துள்ளப் போகுது. அரசு விவகாரங்கள்ல அளவோடு அனுகூலம் ஏற்படும். எதிலும் அவசரம், பதற்றம் வேண்டாம். நிதானம் அவசியம். வியாபாரிகள் அகலக் கால் வைக்க வேண்டாம். குடும்ப நலன்ல அக்கறை அவசியம். உடல் ஆரோக்கியத்திலேயும் கண் வையுங்க. எந்த விஷயத்திலயும் விழிப்போடு இருக்கறது நல்லது. பெண்கள் தாங்கள் நினைச்சதை சாதிச்சிடுவீங்க. பக்தி, ஆன்மிக ஈடுபாடு அதிகரிக்கும். புதிய முயற்சிகள், முதலீடுகளில் இறங்க வேண்டாம்.

மீனம் : சூரியன், புதன், கேது, சனி எல்லாருமே உங்களுக்குச் சாதகமா இருக்கறதால உங்க திறமை புத்திசாலித்தனம் வெளிப்படும். பேச்சாற்றல் பளிச்சிடும். எதிர்ப்புகள் குறையும். எதிரிகள் ஓடிப் போயிடுவாங்க. அரசியல்வாதிகள் மதிப்பு, அந்தஸ்து உயரப் பெறுவாங்க. கணிதம், எழுத்து, பத்திரிகை போன்ற துறைகளைச் சேர்ந்தவங்க முன்னேற்றம் காண்பார்கள். அலைச்சல் அதிகரிக்கும். மனசுல ஏதேனும் குழப்பம் இருந்துட்டே இருக்கும். எந்தக் காரியத்தையும் ஒருமுறைக்குப் பல முறை யோசிச்சு செயல்படறது நல்லது. சுப காரியங்களுக்காக செலவுகள் ஏற்படும்.


நடிகை மோனல் கும்ப ராசிக்காரராச்சே! நினைச்சதை சாதிப்பாராம்!





காஞ்சி நகரச் சிறப்பிதழாகப்
பூக்கிறது

ஜபல்பூர்



ம.வே.சிவகுமார்

எழுதும்

நான்கு வாரத்
தொடர்கதை
ஆரம்பம்!

அந்தரங்கம்



சாயங்காலம் ப்ரவீன் தன் அறைக்கு வந்தபோது வேணு, தங்கராஜ், குமார் மூவரும் அரட்டையடித்துக் கொண்டிருந்தார்கள். ப்ரவீன், வெளியே மழையில் நனைந்துவிட்டதால், நனைந்து போயிருந்த சட்டையைக் கழற்றி... உதறி... திறந்திருந்த கதவின் மேல் உலரும்படி படர விட்டான்.

''ரொம்ப நனைஞ்சிட்டியா?'' என்றான் குமார்.

"மழை வந்தவுடனே ஓடி, தையல் கிளாசுக்குள்ளே நின்னுக்கிட்டேன். ஆனாலும் நனைஞ்சிட்டேன்'' என்றான். தையல் கிளாஸில் பெண்கள் கூட்டம். உள்ளேயும் 'மழை'போல் சப்தமாக இருந்தது.

தங்கராஜ் திடீரென்று நினைவு வந்தவனாய், ''ப்ரவீன்... இன்னிக்கு மத்தியானம் ஊர்ல இருந்து உனக்கு லெட்டர் வந்தது. எல்லோரும் சௌக்யமாம். அடுத்த வாரம் ஊர்ல போங்கலாம்'' என்றபடியே இன்லண்ட் லெட்டர் ஒன்றைக் கொடுத்தான். ஏற்கெனவே படிப்பதற்காக ஓரம் கிழிக்கப்பட்டிருந்த அந்தக் கடிதத்தை வாங்கி கையில் வைத்துக் கொண்டு, அதைப் படிக்காமல் தங்கராஜையே இமைக்காமல் பார்த்தான்.

"இது எனக்கு வந்த கடிதம். உன்னை யார் இந்த லெட்டரைப் படிக்கச் சொன்னது?'' அவன் குரலில் இருந்த இறுக்கம், தங்கராஜை ஆடிப் போக வைத்தது. ப்ரவீன் தொடர்ந்தான்.

"அடுத்தவங்களுக்கு வர்ற லெட்டரைப் படிக்கக் கூடாதுங்கற, ஒரு சின்ன மேனர்ஸ் கூட தெரியாதா?'' என்று கேட்டுவிட்டு கடிதத்தைப் படித்தான். முகம் கடுகடுத்தது.

அங்கு நிலவிய இறுக்கமான சூழ்நிலையைக் கலைத்தான் வேணு.

"வெளியே மழை நின்னுடுச்சு. ஜாலியா எங்காவது போயிட்டு வரலாமா?''

அதைக் கேட்டு எல்லோர் முகத்திலும் உற்சாகம்.

...இப்படித்தான். ஏதாவதொரு காரணத்திற்காக அவர்களுக்குள் கருத்து வேறுபாடுகளும் சண்டை சச்சரவுகளும் அடிக்கடி

எஸ்.சி.ஈஸ்வரன்

வரும். ஆனால் சற்று நேரத்திலேயே சிநேகமாகி விடுவார்கள்.

ப்ரவீன் தலை துவட்டி, கண்ணாடி பார்த்து தலை வாரிக் கொண்டான். வேறு சட்டை எடுத்து அணிந்து, அந்த முழுக்கை சட்டையை முழங்கை வரை சுருட்டி விட்டுக் கொண்டான்.

கதவைச் சாத்திவிட்டு வெளியே கிளம்பினார்கள். வெளியே மழை வாசம். இருட்டத் தொடங்கியிருந்தது. ஒரு ஹோட்டலில் நுழைந்து டீ சாப்பிடார்கள். வெளியே வந்து நடந்தார்கள்.

"இன்னிக்குக் கோபப்பட்டதுக்கு ஸாரி..." என்றான் ப்ரவீன்.

"எதுக்கு ஸாரி....? எப்பவோ மறந்துட்டோம்..." என்றார்கள்.

கொடிக் கம்பத்தின் அருகே இருந்த சாயம்போன சிமெண்ட் பெஞ்சில் உட்கார்ந்தார்கள். அருகே இருந்த மரத்திலிருந்து விழுந்திருந்த மஞ்சள் பூக்கள் ஈர அழகோடு பரவிக் கிடந்தன. சுடிதாருக்குப் புது டிசைன் ஐடியா தரும் உத்தேசம் போல்! அவர்கள் பேச ஆரம்பித்தார்கள். இளைஞர்கள் பேச்சில் தலைப்புச் செய்தியாய் சினிமா, அரசியல் மற்றும் அழகான யுவதிகள்.

காதலைப் பற்றிப் பேசும்போது மட்டும் நேரம் போவதே தெரிவதில்லை. நத்தை வேகத்தில் செல்லும் காலம், முயல் வேகம் பெற்று விடுகிறது. குமார் பேச ஆரம்பித்தான்.

"இதே போன்ற ஒரு மழை நாளில்தான் இந்திராணியைச் சந்தித்தேன். ஒரு நாள் கடற்கரைல கூட்டம். திடீர்னு மழை வர, அங்கிருந்து எல்லோரும் ஓட ஆரம்பிச்சாங்க. ஆனா நான் ஓடாமல் மழையில் நனைஞ்சபடி ரசிச்சுக்கிட்டு நின்னேன். என்னை மாதிரியே அங்கே ஒரு பொண்ணும் ரசிச்சுக்கிட்டு நின்னுருச்சு. எல்லோரும் ஓடிவிட நாங்க மட்டும்தான். பயங்கர மழை! அவ கையைக் கட்டிக்கிட்டு அசையாம நின்னா... கீழே மழையில மிதந்த ஒரு மல்லிப் பூவைக் குனிஞ்சு எடுத்தேன். அப்போ அவ மழையில் குளித்த அந்த வெள்ளி கண்களாலே, என்னைத் திரும்பிப் பார்த்ததை மறக்கவே முடியாது."

தங்கராஜ் சொன்னான்:

"எனக்கான காதல் கிராமத்தில்... பேரு, லோகேஸ்வரி. செம்மறி ஆட்டுக்குட்டி மாதிரி, கண்ணாடிக் கண்கள். நந்தியாவட்ட பூ மாதிரி காது. ஸ்கூலுக்குப் போறப்ப அவ கை வலிக்குமேனு அவ புத்தகப் பையையும் நான்தான் தூக்கிட்டுப் போவேன். ரொம்ப வெகுளி... ஞாயிற்றுக் கிழமை அவ ஆடு மேய்க்கப் போறப்ப 'நானும் கூடவே போவேன். எப்பவும் கிண்டலும் கேலியும் தான்."

அன்றிரவு. ப்ரவீனுக்குத் தூக்கமே வரவில்லை.

'எனக்கு மட்டும் ஏன் காதல் அனுபவமே இல்லை'. மனம் வலித்தது. ஏக்கத்தில் கசிந்துருகியது.

'நண்பர்கள் தத்தம் காதல் அனுபவங்களைச் சொல்லும் போது எவ்வளவு ஏக்கமாய் இருக்கிறது. காதல் என்றால் எப்படியிருக்கும்?'

கார்த்திகை தீபம் போன்ற அந்த வசந்தம், அவனுக்கும் சில நாட்களிலேயே வந்தது.

ஒரு நாள் ஒரு சிறுவன் வந்தான்.

"இதை எதிர்வீட்டு ஷண்மதியக்கா உங்க கிட்ட தரச் சொன்னாங்க."

ஒரு கடிதத்தைத் தந்தான். வாங்கிப் படித்தான் ப்ரவீன்.

அவனுக்காக அவள் உருகி உருகி எழுதிய காதல் கடிதம். சந்தோஷ வெளிச்சம் பொங்கியது. உலகம் மறந்தது. நண்பர்களிடம் ஓடி மூச்சு வாங்கச் சொன்னான்.

"இந்த லெட்டரைப் படிச்சுப்பாருங்க... படிச்சுப்பாருங்க..." ○



"கச்சேரிக்குத் தலைமை தாங்க அமைச்சரை அழைத்தது தப்பாப் போச்சா, எப்படி?"

"தமிழிசைக் கச்சேரிக்கு 'மோர்சிங்' என்ற பஞ்சாபிக்காரர் தேவையா? தமிழர் யாரும் கிடைக்கவில்லையா'னு பேசுகிறாரே?"

— நெ. இராமன்



ஸ்ரீ மஹா ப்ரத்யங்கிரா தேவி, ஸ்ரீ நீலசரஸ்வதி தேவி, ஸ்ரீ விரஜா கால பைரவர் திருக்கோவில்

அபராஜிதபுரி, சோழங்கநல்லூர்,
சென்னை - 600 119.
போன்: 4501404



கல்வி அபிவிருத்தி, வெளிநாடு பயணம் மற்றும் உத்யோக கார்ய வெற்றிக்காக வேண்டி 24.1.2002 தசமிதிதி முதல் 7.2.2002 தசமி வரை தொடர்ந்து 15 நாட்கள் நிறைவேறும்.

ஸ்ரீ நீலசரஸ்வதி மஹா பூஜை

'ஏகம் சத் விப்ரா பிருதாவதந்தி' என்ற வேத வாக்குக்கு ஏற்ப, பராசக்தியே சரஸ்வதியாக, ஆய கலைகள் அறுபத்தி நான்குக்கும் தலைவியாக, **மேதா, பிரக்ஞா, பிரயா, வித்யா, த்ருதி, ஸ்ம்ருதி, வித்யேஸ்வரீ வாகீஸ்வரீ** என்ற அஷ்ட வித்யா தேவிகளாக விளங்கி குழந்தைகள், மாணவ மாணவியருக்கு ஞாபக சக்தியை வழங்கி, கல்விகளிலும் வித்தைகளிலும் மேன்மையுற செய்கிறாள்.

சம்சார யாத்திரையை கடப்பதற்கு அருள்பவளும் கடல் பிரயாணங்கள், வெளிநாட்டு பயணம் இவற்றை சுகமாக்கி தருபவளும் லௌகீக வாழ்வில் காம உணர்வை அடக்கி, சிக்கல்களை சுத்தரித்து, அகங்கார குணத்தை விலக்கி, முட்டாள் தனத்தை வெட்டி வீழ்த்தி ஆணவம் கன்மம் மலம் என்ற மூன்று தீய குணங்களை அழித்து சாந்த குணம் சாதுர்யபுத்தி இவற்றை வழங்கி நம்பினோரைக் காப்பாற்றும் மஹாசக்தியாக விளங்குபவள்தான் **ஸ்ரீ நீலசரஸ்வதி.** இவளை உபாசித்து வெற்றிக்கண்டவர் வியாச மகரிஷி. ஆதிசங்கரருக்கு 16 ஆண்டுகள் ஆயுள்பலம் கொடுத்து சனாதான மதத்தை ஸ்தாபிக்க செய்தவளும் இந்த **நீல சரஸ்வதிதான்.**

மூடனையும் வித்வானாக்கும் இவளது மூல மந்திரம் **"ஓம் ஹ்ரீம் ஸ்தீரிம் ஹூம்பட்"** தொடர்ந்து 15 நாட்கள் இம்மஹாவித்யா சக்திக்கு அபிஷேகம், படி பூஜை, புஷ்பாஞ்சலி மூலமந்திர ஜெபம் நிறைவேற்றுவதற்கு ஏற்பாடுகள் உள்ளன. அபிஷேக உபயம் ரூ. 1000- படி பூஜை உபயம் ரூ. 5000 புஷ்பஞ்சாலி ரூ. 600 உபயம் செய்யும் மாணவ மாணவியர் ஜாதகத்தை ஸ்ரீ நீலசரஸ்வதியின் கமலமலர் பாதங்களில் வைத்து சங்கல்ப பூஜைகள் செய்து பிரசாதம் பெற்றுக் கொண்டு கல்வி, பரீக்ஷையில் நல்ல மதிப்பெண் பெறலாம்.

இந்த பூஜையில் கலந்து கொள்ள விரும்பும் மாணவ மாணவியரின் ஜாதக நகலுடன் பெயர் நட்சத்திரம், கோத்திரம், படிக்கும் கல்வி ஸ்தாபனத்தின் பெயர், எழுதப் போகும் பரீக்ஷையின் பெயர் முகவரி இவற்றை எழுதி உபயதொகைக்கான Draftஐ Sri Prathiyangira Ashram Trust என்ற பெயருக்கு எடுத்து பதிவு தபாலில் அனுப்பி, இந்த மஹாபூஜையில் கலந்து கொள்ளலாம். நீலசரஸ்வதி யந்திரம், படம், டாலர், ரக்ஷைகள் பிரசாதமாக அனுப்பப் பெறும்.

குறிப்பு: அன்னபூரணி, வராஹி, சரபேஸ்வரர், அனுமார், முருகன், ஐயப்பன், மஹாலக்ஷ்மி, நாகசக்தி சந்நதிகள் பூர்த்தி செய்வதற்கு உபயதாரர்கள் தேவை.

* காளைமாட்டுச் சண்டை




'உங்கள் மீது காவல் நிலையத்தில் சிறு குற்றம் கூட பதிவாகி இருக்கக் கூடாது. அப்படியும் அதை நீங்கள் மறைத்து உங்கள் கட்சியிடம் தேர்தலில் நிற்பதற்கு சீட் கேட்டு விண்ணப்பம் செய்தால் கட்சியே தீர விசாரித்து உங்களுக்கு சீட் கொடுப்பதை நிறுத்திவிடும்.'

இதெல்லாம் நடக்கிற காரியமா? என்று கேட்பவர்கள் தயவு செய்து ஸ்பெயினுக்கு ஒரு நடை போய்ப் பாருங்கள்.

செலவு செய்து போக முடியாதவர்கள் மேற்கொண்டு படிக்கவும்.

ஸ்பெயினில் குடிபெயர்ந்த, 'தமிழைத்' தாய் மொழியாகக் கொண்ட முதல் தமிழர்





* ஸிபெலஸ் சிலை

என்ற பெருமை பெற்ற மோகன் சங்கர் சமீபத்தில் சென்னை வந்திருந்தார். ஸ்பெயினில் கடந்த 18 வருடங்களாக கன்ஸல்டன்ஸி நிறுவனம் நடத்தி வரும் அவரைச் சந்தித்த போது...

* 1976 வரை 'ப்ரான்சிஸ்கோ ப்ராங்கோ' என்ற சர்வாதிகாரி தான் ஸ்பெயினை ஆண்டார். அதன்பிறகே ஸ்பெயின் ஜனநாயக நாடு ஆயிற்று.

* நான்கு வருடங்களுக்கு ஒரு முறை தேர்தல் நடைபெறும். இந்தியா மாதிரி கட்சிகள் இடையாது. சோஸலிஷ கட்சி,

சர்ச்சில் சாய்பஜன்

பார்கிலோமா புலா: இந்த இரண்டு கட்சிகள்தான் மாறிமாறி தேர்தலில் ஜெயித்து, ஆட்சியைப் பிடித்து வருகின்றன. இதைத் தவிர இரண்டு மூன்று உதிரி கட்சிகள் உள்ளன.

• மொத்த மக்கள் தொகை 35 மில்லியன் - அதாவது மூன்றரை கோடி..

• பள்ளிகளில் ஐந்தாம் வகுப்பு வரை பாஸ்-ஃபெயில் சமாச்சாரம் கிடையாது. ஆறாம் வகுப்பில் இருந்துதான் சீரியஸான கல்வியே ஆரம்பம்.

• சில வருடங்களுக்குமுன் கம்ப்யூட்டர் படிப்புக்குக் கிராக்கி இருந்தது. இப்போது இன்ஜினியரிங், பிசினஸ் மானேஜ்மெண்ட்க்குதான் டிமாண்ட்.

• பள்ளிப் படிப்பு முடிந்ததும் நுழைவுத் தேர்வு எழுதி, தேர்வு பெற்றால்தான் பல்கலைக் கழக சீட். சிபாரிசு, லஞ்சம்.. மூச், கிடையவே கிடையாது.

• படித்தவர்கள் மட்டுமே தேர்தலில் நிற்க மனு செய்வார்கள். காரணம், அரசியல் என்பது இங்கு தொழில் அல்ல. ஒரு ஈடுபாடு, சேவை மட்டுமே.

• முன்னாள் மந்திரியையோ அல்லது முன்னாள் முதலமைச்சரையோ சந்தித்தால் அவர் ஒரு டாக்டராகவோ, வக்கீலாகவோ அல்லது ஒரு கல்லூரி பேராசிரியராகவோ தற்போது வேலை செய்து கொண்டிருப்பதைப் பார்க்கலாம்.

• 33 சதவிகித இட ஒதுக்கீடு பற்றி பிரச்னையே இல்லை. காரணம், எம்.எல்.ஏ. அமைச்சர், மேயர் - இப்படி பல பதவிகளிலும் பெண்கள்.

• தேர்தலின்போது மட்டுமே அரசியல். அந்த சமயத்தில் எதிர்ப்பு கோஷங்கள் இருக்கும். தேர்தல் முடிந்ததும் நாட்டு நலமே கருமமாகக் கருதி எதிர்க்கட்சியினர்கூட அக்கறையுடன் ஆளுங் கட்சிக்கு ஆதரவு காட்டுவார்கள்.

• பிரசாரத்தின்போது தேர்தலில் நிற்கும் கட்சிகள் தங்கள் சின்னம் போட்ட டீ சர்ட், கீ செயின், பேனா என்று வீடு தேடி வந்து கொடுப்பார்கள். அதில் 'உங்கள் ஓட்டு எங்களுக்கே' என இருக்கும்.



• ஸ்பானிஷ் ஃப்ளெமெங்கோ நடனம்



• மேட்ரிட் நகரம்



• மோகன் சங்கர்

• படம் : யோகா

"நடப்பது காங்கிரஸ் கூட்டம்தான்னு எப்படிச் சொல்றே?"

- உ. ராஜாஜி



"ரெண்டு மாசமா பத்திரிகைக்கு எதுவும் எழுதாததுகூட நல்லதாப் போச்சு!"

"எப்படி"

"இதுவரை எதுவும் எழுதியனுப்பாத துக்குச் சன்மானம்னு சொல்லி பத்திரிகை லேருந்து எம்.ஓ. வந்துது."

- அம்பை தேவா



"அந்த ஆபீஸ்ல ஒருத்தரை வெட்டப் போனியாமே, ஏன்?"

"வெட்டினால்தான் வேலை நடக்கும்னு சொன்னாங்க, எசமான்!"

- தேனி முருகேசன்



• ஸ்பெயினில் உள்ள லாஸ் பால் வாஸ் நகரில், ஒரு தெருவுக்கு ரவீந்திரநாத் தாகூரின் பெயரை வைத்திருப்பது பெருமை.

• 95 சதவிகிதம் கிறிஸ்துவர்கள்தான். 'கீதா மந்திர்' என்று கிருஷ்ணர் கோயில் உள்ளது. கிறிஸ்துவர்களில் புட்டபர்த்தி சாய் பக்தர்களும் அதிகம். சர்ச்சுகளில் வாரந் தோறும் சாய் பஜன்கள் நடைபெறும்.

• காளைச் சண்டை (ஃபுல் பைட்) ஸ்பெயின் நாட்டு கலாசாரத்தின் முக்கிய மான அம்சம். இதில் பங்கு கொள்ளும் காளைகள் 550 கிலோ முதல் 625 கிலோ எடை வரை இருக்கும்.

• 'ஹுவான் அந்தோணியா ஸமராஞ்ச்' என்ற ஸ்பெயின் நாட்டவர் கடந்த 20 வருடங்களாக 'இன்டர்நேஷனல் ஒலிம்பிக் கமிட்டி'யின் சேர்மன் பதவியில் இருந்து இந்த ஆண்டின் தொடக்கத்தில்தான் ஓய்வு பெற்றார்.

• செஸ் சாம்பியன் விஸ்வநாதன் ஆனந்த், ஸ்பெயினில் உள்ள மான்ட்ரியல் நகரில் வசிக்கிறார். உலக அளவில் நடைபெறும் செஸ் விளையாட்டில் பங்குகொள்ள விமான போக்குவரத்துக்கு வசதியாக கருதி ஸ்பெயினில் செட்டில் ஆகிவிட்டார்.

• 1999 ஜூலை மாதத்தில் அமரர் கல்கியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கல்கியின் 'சிவகாமியின் சபதம்' நாட்டிய நாடகம் லண்டன் தமிழ் மன்றம் சார்பாக லண்டனின் யுனிவர்சிடி அரங்கில் நடைபெற்றது. புத்தனேரி சுப்ரமணியம் எழுதிய இந்தக் கவிதை நாடகத்தில் இடம் பெற்ற பாடல்களைப் பாடியவர் மோகன் சங்கரின் மனைவி லலிதா. 'டிபிசி'யில் (தமிழ் பிராட்காஸ்டிங் கார்ப்பரேஷன்) ஒளிபரப்பப்பட்டது.

• லண்டனில் நடைபெற்ற இந்தக் கவிதை நாட்டிய நாடகத்தை நடத்திய குழுவை உமா சந்திரன் என்ற பெண்மணி நடத்தி வருகிறார். இவர் கலாக்ஷேத்ரா மாணவி.

• லண்டனில் கிடைத்த வரவேற்பைத் தொடர்ந்து ஸ்பெயினிலும் அமரர் கல்கியின் 'சிவகாமியின் சபதம்' நாட்டிய நாடகத்தை இந்த ஆண்டு இறுதியில் நடத்த திட்டமிட்டிருக்கிறார்கள் மோகன், லலிதா தம்பதி.

பேட்டி : மடிப்பாக்கம் வெங்கட்



கண்ணீர்க் கவிதை!

எங்கள் பிறந்த நாளை
மறந்த போது
வீட்டு முகவரி மறந்த
போது
மாதங்களை, கிழமைகளை
மறந்த போது
வயதாகி விட்டது என்று நினைத்தோம்
ஒருநாள்... எல்லாவற்றையுமே
சுத்தமாக மறந்து போனார் —
வயதால் அல்ல; நோயால் என்பதை
நாங்கள் எப்படி மறந்து போனோம்??

- இந்தக் கவிதையை எழுதியிருப்பவர் பெங்களூர் தீபானிதா போஸ். இதுவரை கதை, கவிதை என எதுவுமே எழுதாத இவர், திடீரென கவிதாயினியாக மாறி ஒரு கவிதைத் தொகுப்பை வெளியிட்டுள்ளார். அத்தனையுமே கண்ணீர்க் கவிதைகள்.

தீபானிதாவின் தந்தை பரிமள் சென்குப்தா 'அல்ஸைமர்' (alzheimer) என்ற கொடிய நோயால் பீடிக்கப்பட்டு நான்கு வருடங்கள் அவதிப்பட்டு இறந்து போனார். தந்தையைக் கவனிக்க யாருமில்லாததால் தீபானிதா அவரைக் கண்ணும் கருத்துமாகப் பார்த்துக் கொண்டுள்ளார். அல்ஸைமர் என்ற நோய் பற்றி, அதன் தீவிரம், அதனால் அவர் தந்தை எந்த மாதிரி அவல நிலைக்குத் தள்ளப்பட்டார் என்பதையெல்லாம் மனத்தை உருக்கும் வகையில் எழுதியிருக்கிறார்.

"அல்ஸைமர் என்பது வந்தால் மூளை சுருங்க ஆரம்பித்து விடும். மறதி வரும். மொழி மறந்து போகும். குளிக்க, சாப்பிட, நடந்து போக என எல்லாமே மறந்து போகும். இது எதனால் வருகிறது என்று இன்று வரை கண்டு பிடிக்க முடியவில்லை. இதைக் குணமாக்குவதற்கும் மருந்துகள் கிடையாது. அல்ஸைமர் நோயால் பாதிக்கப்பட்டவர் எத்தனை வருடங்கள் உயிரோடிருப்பார் என்பது பற்றி சொல்லுவதெல்லாம் ரொம்பக் கஷ்டம்," என்கிறார் தீபானிதா.

"அன்பைப் பொழிந்த எங்கள் அப்பா, கவிதை, நாடகம், இசை, ப்ளேன் ஓட்டுதல் என எல்லாவற்றிலும் சுறுசுறுப்பாக இருந்தவர்... இந்த நோய் தாக்கியதும், ஜடமாக மாறிப் போனார். ஆனால் நான் பாட்டுக்கு அவரிடம் பேசிக் கொண்டேயிருப்பேன். பாடிக் காட்டுவேன். ஜோக் சொல்லுவேன். அவரோ சூன்யமான ஒரு பார்வை பார்த்துக் கொண்டேயிருப்பார். அவருக்குள் ஒரு மௌனப் போராட்டமே நடப்பது எனக்கு நன்றாகத் தெரியும்" என்கிறார் கண்ணீர்த் துளிக்க.

அல்ஸைமர் நோய் வந்தால் அதற்கென ஆகும் வைத்திய செலவு ஏராளம். மருந்துகள் வெளிநாட்டிலிருந்து வருகிறதாம். 'அடல்ட் டயபர்' (இவர்களுக்கு பாத்ரூம் போக வேண்டுமென்பதெல்லாம் மறந்து போவதால் சுகாதாரம் கருதி டயபர் கட்டாயம்) ஏக விலை. ஏழைகளுக்கு இந்த நோய் வந்தால் அவர்கள் என்ன செய்வார்கள் என மாய்ந்து போகிறார் தீபானிதா.

தீபானிதா இப்போது அல்ஸைமர் மற்றும் மரணத்தின் எல்லையில் இருப்பவர்களுக்கு ஆறுதல் அளிக்கும் வகையில் கவுன்ஸெலிங் கோர்ஸ் சேர்ந்திருக்கிறார். 'இனி என் வாழ்நாள் முழுவதும் அல்ஸைமர் நோயால் போராடிக் கொண்டிருக்கும் நோயாளிகள் மற்றும் அவர்கள் குடும்பத்தினருக்கு என்னால் முடிந்த உதவிகளைச் செய்து கொண்டேயிருப்பேன்' என்கிறார்.

பல விஷயங்களை நினைக்காமல் மறந்து போவது நல்லது என்று பெருமூச்சு விடுபவர்கள் இனி 'நினைவு என்பது ஒரு வரம்' என்று ஆறுதல் கொள்ளலாம்.

— லதா சேகர்

பல்லாண்டுகளாக, சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை சுவைத்து மகிழும் 'பெப்பர்மின்ட்' என்பது ஒரு செடியின் பெயர். இந்தச் செடியின் இலைகளைக் கசக்கினால் ஒரு வகை எண்ணெய் உண்டாகிறது. இந்த எண்ணெய் 'கமகம' என்று வாசனையைத் தருவதால் மிட்டாய் தயாரிப்பவர்கள் பெப்பர்மின்ட் எண்ணெயைக் கலந்து மிட்டாய்களைத் தயாரித்தார்கள். பின்னர் எல்லா மிட்டாய்களுக்குமே 'பெப்பர்மின்ட்' என்ற பெயர் வந்துவிட்டது.

- ஜி.கே.எஸ்.மூர்த்தி, கோபிசெட்டிப்பாளையம்

மாவிலைக் கொழுந்துகளில் நீரிழிவைக் கட்டுப்படுத்துகிற சக்தி இருக்கிறது. மாவிலைக் கொழுந்துகளை இரவெல்லாம் தண்ணீரிலே ஊற வைத்து, மறுநாள் அதையே கொதிக்க வைத்துக் குடித்து வந்தால் நாளடைவில் நீரிழிவு நோய் குணமாகும்.

- சி. ஜெயபாலன், பழம்பேட்டை




★ பிறந்த நாள் கேக்கில் மெழுகு வர்த்திகளை ஊதி அணைக்கும் பழக்கம் ஜெர்மானியர் உண்டாக்கியது.

★ இருபது முறை ஆஸ்கார் விருதைப் பெற்றவர் வால்ட் டிஸ்னி.

- ஆர். பிரகாசம், மருதாடு.





முதன் முதலாகச் சாலைப் போக்குவரத்தை ஒழுங்குப்படுத்த சிக்னல் முறை 1868 ஆண்டு அறிமுகமாகியது. அப்போது சிவப்பு, பச்சை என்னும் இரண்டு நிறங்களே இருந்தன. கியாஸ் விளக்குகள் பயன்படுத்தப்பட்டன. முதல் சிக்னல் லண்டன் பார்லிமெண்ட் கட்டடம் அருகேயுள்ள சந்திப்பில் அமைக்கப்பட்டது. சில நாட்களிலேயே அந்த விளக்கு வெடித்து காவலர் ஒருவர் இறந்து விட்டதால் அது நிறுத்தப்பட்டது. தொடர்ந்து செய்யப்பட்ட ஆய்வின் பயனாக 1914ஆம் ஆண்டு அமெ

தந்நே தந்நேட...

ரிக்காவில் தற்போது நடைமுறையில் உள்ள மூவண்ண விளக்குகள் கொண்ட சிக்னல் அமைக்கப்பட்டது.

- மு. செந்தாமரை, புலிவலம்

கபடி விளையாட்டு தெரியும். அதற்கு எந்தெந்த ஊரில் என்னென்ன பெயர் தெரியுமா?

குட்டடி – பாண்டியநாடு

தேன்கூடு









பளிச்சப்பிளான் – சோழ மண்டலம்

சடுகுடு – தென் சோழமண்டலம்

பலிஞ்சப்பளம் – ஆந்திரா

குடுடுடு – மகாராஷ்டிரா

கடுடுடு – வங்காளம்

தேன்கூடு

– அரிச்சந்திரன், சென்னை

ஒரு கால கட்டத்தில் ரமண மகரிஷியின் உடல் நிலையைக் கருத்தில் கொண்டு தரிசனம் நிறுத்தப் பட்டது. ஆனாலும் எப்படியாவது அவரைத் தரிசித்துச் செல்ல கூட்டம் காத்திருந்தது. ''தங்கள் உடல் நலம் கருதி, பொது மக்கள் தங்களைத் தரிசிப்பது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது'' என்றனர் ஆஸ்ரமத்தினர். ''நான் அல்லவா அவர்களைத் தரிசித்துக் கொண்டிருக்கிறேன். ஆகவே நிறுத்த வேண்டாம். தொடர்ந்து அனுப்புங்கள்'' என்றார் ரமணர்.

- இரா திலீப், திருச்சி.

படங்கள் : யோகா

V.V. இலாகா!



''உங்களுக்கு பீஸ் கொடுப்பதற்காகத்தான் பிக்பாக்கெட் அடித்ததாக உங்கள் கட்சிக்காரர் சொல்கிறாரே. அதை நீங்கள் ஏன் ஆட்சேபிக்கிறீர்கள்?''

''அந்தப் பணத்தை என்னிடமே பிக்பாக்கெட் அடித்து விட்டான் யுவர் ஆனர்!''

— நெ. இராமன்

''விலைவாசியை எதிர்த்துப் பேரணி நடத்த முடியாது தலைவரே!''

''ஏன்யா?''

''விலைவாசிகள் ஏறிட்டதால வரலாறு காணாத கூலி கேட்கறாங்க!''

— அம்பை தேவா





''அதென்ன சார் புதுசா 'VV' இலாகா?''

''வாஸ்து வாரியம்!''

— கார்த்திக் அமர்த்யா



''கடைத்திறப்பு விழாவுக்குப் போன தலைவர் ஏன் கோபமா வர்றாரு?''

''ரிப்பனை வெட்டச் சொல் வாங்கன்னு போனா... ஷட்டரை மேலே தூக்கி, கடையை திறக்கச் சொன்னாங்களாம்; கை சுளுக்கிக்கிச்சாம்!''

— பா. ராஜாமுஹம்மது

''பெஞ்ச் கோர்ட்டுலே தன் கேஸை நடத்தறதை தலைவர் கௌரவக் குறைச்சலா நினைக்கிறாரா...ஏன்?''

''குறைஞ்சபட்சம் குஷன் நாற்காலிகள் போடணுமாம்..''

— தஞ்சை தாமு.





சோ எழுதிய

வெறுக்கத்தக்கதா பிராமணீயம்?

ரூ.30-00

நீதித் துறை, கல்வித் துறை, மருத்துவத் துறை, பொறியியல் துறை... என்று பல இடங்களிலிருந்தும் பிராமணர்களை விரட்டிவிட்டதால், இந்தச் சமுதாயம் கண்டிருக்கும் உயர்வு என்ன? மருத்துவம் வியாபாரமாகியிருக்கிறது; நீதி விலை பேசப்படுகிறது; கல்வியின் தரம் தாழ்ந்து விட்டது; நிர்வாகத்திலோ ஊழல் பெருகி விட்டது. பிராமணர்கள் இருந்திருந்தால் இவையெல்லாம் சீராக இருந்திருக்கும் என்பதல்ல என் வாதம். ஆனால் பிராமணர்களை ஒதுக்கி விட்டதால் இவையெல்லாம் தூய்மையாகிவிட்டனவா என்பதுதான் என் கேள்வி. தூய்மையாகா விட்டாலும் பரவாயில்லை. சீர் கெடாமல் இருந்ததா என்றால் அதுவுமில்லை, எவ்வளவு முடியுமோ, அவ்வளவு பாழ்பட்டுக் கிடக்கிறது.

வெறுக்கத்தக்கதுதான் என்ன?

பிராமண எதிர்ப்பு என்ற பெயரில் சுதந்திரப் போராட்டத்தையே கேலி செய்து, நாடு சுதந்திரமடைவதை எதிர்த்து, வெள்ளைக்காரன் ஆட்சியே தொடர வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டதே – **அந்தப் போக்கு வெறுக்கத்தக்கது;**

பிராமண எதிர்ப்பு என்ற பெயரில், கோயில்கள் மற்றும் கோயில் நிதியில் நாத்திகர்களின் பிடி இறுகி இருக்கிறதே – **அது வெறுக்கத்தக்கது;**

பிராமண எதிர்ப்பு என்ற பெயரில், இட ஒதுக்கீட்டில் புதிய புதிய ஜாதிகளைச் சேர்த்துச் சேர்த்து, அதை ஓர் ஓட்டு வேட்டையாக மாற்றி இருக்கிறார்களே – **அது வெறுக்கத்தக்கது;**

பிராமணீய எதிர்ப்பு என்ற பெயரில், நாட்டின் ஒற்றுமையையே குலைக்க முற்படுகிறார்களே – **அது வெறுக்கத்தக்கது;**

பிராமணீய எதிர்ப்பு என்று ஆரம்பித்து, இன்று அதன் பரிணாம வளர்ச்சியாக வெவ்வேறு ஜாதிகளுக்கிடையே மோதல் என்று உருவாகி இருக்கிறதே – **இந்தப் போக்கு வெறுக்கத்தக்கது;**

பிராமணர்களை எதிர்க்கிறோம் என்று சொல்லிக் கொண்டு, தங்களுடைய குடும்ப நலனுக்கு வழி தேடி, தங்கள் கட்சிகளிலும், தங்கள் அமைப்புகளிலும், தங்கள் அரசியல் வர்த்தகங்களிலும், தாழ்த்தப்பட்டவர்களை ஒதுக்கியே வைத்து தங்கள் குடும்பத்தினரை வாரிசுகளாக வளர்க்கிறார்களே – **அது வெறுக்கத்தக்கது;**

பிராமண எதிர்ப்பு என்ற பெயரில் கடவுள் நம்பிக்கையை அகற்றி, அதற்குப் பதிலாக தங்களையே கடவுள்களாக சிருஷ்டித்துக் கொண்டு, சிலைகளை வணங்குவதும், சமாதிகளில் அஞ்சலி செலுத்துவதும் பகுத்தறிவு என்று பறைசாற்றி மக்களை முட்டாள்களாக்கிக் கொண்டிருக்கிறார்களே – **அது வெறுக்கத்தக்கது;**

– இப்படி, வேதங்கள், புராணங்கள், உபநிஷத்துக்கள், தர்ம சாஸ்திரங்கள் இவற்றிலிருந்து ஆதாரங்கள் காட்டி, பல துறைகளிலும் பிராமணர்கள் செய்த தியாகம், சேவை என்பனவற்றையும், இப்படிப்பட்ட பிரிவினையை உண்டாக்கி, வெறுப்பை வளர்த்து, அதன் மூலம் தங்கள் வாழ்விற்கு வளம் தேடிக் கொள்பவர்களையும் வெளிச்சத்துக்குக் கொண்டு வந்துள்ளார்.

அல்லயன்ஸ் கம்பெனி

(நூற்றாண்டு கண்ட முதல் தமிழ்ப் புத்தக நிறுவனம்)
244, ராமகிருஷ்ணா மடம் சாலை, மயிலாப்பூர்,
சென்னை-600 004 போன் : 494 13 14
www.alliancebook.com.

தினந்தோறும் மஞ்சள்...

நெஞ்சுச்சளி, இருமல், வயிற்றுவலி, சேற்றுப்புண், கால் ஆணி, நகச்சுற்று, சிறுநீர்க் கோளாறு என சில பிராண்டட் வியாதிகள் வருவதும் போவதும் வீட்டுக்கு வீடு வாசல் படி. மேற்படி பிரச்னைகளை மஞ்சள் அலேக் செய்து விடும்.

மஞ்சள் அரிய கிருமி நாசினி என்பது அனைவரும் அறிந்த உண்மை. மஞ்சள் பொடியை நீரில் கலந்து, வீடெங்கும் தெளித்து வைத்தால், நோய்க்கிருமிகள் அண்டவே அண்டாது.

பனிக்காலமாச்சே! நெஞ்சுச் சளி பாடாய்ப் படுத்திக் கொண்டிருக்குமே! அதற்கும் கைவசம் மருந்திருக்கு. ஒரு தம்ளர், சூடான பசும்பாலில், சிறிது மஞ்சள் தூள், அரை டீஸ்பூன் மிளகுத் தூள், ஒரு டீஸ்பூன் சர்க்கரை சேர்த்து உட்கொண்டால், நெஞ்சுச் சளி கரைந்து போய்விடும்.

சளியுடன் சரிக்குச் சரியாக இம்சை அளிப்பது இருமல். இந்த வறட்டு இருமலுக்கும் தீர்வு வைத்திருக்கிறது மஞ்சள். மஞ்சள் தூளைத் தேனில் குழைத்து, தினமும் இருவேளை சாப்பிட, 'பெஸ்ட் ஆஃப் லொக்' சொல்லி விடைபெறும்!

சிறுநீர்த் தாரையில் ஏற்படும் எந்தப் பிரச்னைக்கும் மஞ்சளை நாடுவது நல்லது. மஞ்சள் தூள் அரை டீஸ்பூன், பனை வெல்லம் அரை டீஸ்பூன் எடுத்து, வெதுவெதுப்பான நீரில் கலந்து மூன்று வேளையும் அருந்த, அருமையான பலன் தெரியும்.

நகச்சுற்று வந்து அவதிபட்டிருக்கிறீர்களா? ஆட்டோவில் ஒரு ரவுண்டு சென்னை நகரைச் சுற்று வந்தது போல வலி உயிர் போகும். விரல், உரல் போல வீங்கியிருக்க, எரிச்சல் எல்லை மீறும். பச்சரிசி சாதம் சூடாக இருக்கும் போதே, அதில் ஒரு டீஸ்பூன் மஞ்சள் தூள், அரை டீஸ்பூன் சுண்ணாம்பு கலந்து வெதுவெதுப்பாகப் பற்று போட்டு விடவும். நல்ல குணம் தெரிவது நிச்சயம்.

'பொன்னுக்கு வீங்கி' நோய் கண்டால், பசுமஞ்சளையும், வேப்பங்கொழுந்தையும் சம அளவு எடுத்து, மையாக அரைத்து வீக்கத்தின் மீது பற்றுப் போடவும். இந்த நோய் குறைந்தது இரண்டு வாரங்களாவது இருக்கும் என்பதால், ஒரு நாள் விட்டு ஒரு நாள் எனத் தொடர்ந்து பற்று போட, கழுத்து, கன்னம் என வீக்கம் மடமடவென தணியும்.

ஆறாத புண்களையும், விட்டுப் போக அடம்பிடிக்கும் கட்டிகளையும், சமாதானம் சொல்லி சரி கட்டி விடும் மஞ்சள்!

காய வைத்த மஞ்சளை,



மூலிகை கேலரி – 3

நெருப்பில் காட்டி கருக வைக்கவும். அதன் சாம்பலைச் சேகரித்து சம அளவு வசம்புத் தூள் சேர்த்துப் பயன்படுத்தினால், கரப்பான், சீழ் புண்கள், சிலந்தி, வேனல் கட்டி, வீக்கம் குணமாகும்.

பீட்ஸா, சமோஸா, உருளைக்கிழங்கு போண்டா, வாழைக்காய் சிப்ஸ்... என கலந்து கட்டிச் சாப்பிட்டு, உங்கள் வயிற்றை ஒரு வழி ஆக்கிவிட்டீர்களா! 'கடமுடா' என படுத்தி எடுத்து விடும் என்ற பயமா? அரைவிட்டர் நீரில், ஐம்பது கிராம் மஞ்சள் தூளைக் கலந்து, கால் பங்காகச் சுண்டக் காய்ச்சவும். இந்தக் கஷாயம் சாப்பிட்டால், அஜீரணமாவது, வாய்வுத் தொல்லையாவது.



ஆன்டிசெப்டிக் லோஷனை நீங்களே வீட்டில் தயார் செய்யலாம். கஸ்தூரி மஞ்சளைப் பொடி செய்து, தேங்காய் எண்ணெய்விட்டு, காய்ச்சி எடுத்து ஒரு பாட்டிலில் எடுத்து வைக்கவும். குழந்தைகள் அடிபட்டுக் கொண்டு வரும்போது, ஷேவிங் சமயத்தில் பிளேடு பதம் பார்க்கும்போது, சமையலறைக் கத்தியால் ஒரு வெட்டு கிடைக்கும்போது, இந்த எண்ணெய் தடவவும். கிருமி அண்டாது. ரத்த காயமும் விரைவில் ஆறும்.

'மஞ்சள் பூசிக் குளித்தால், முகம் முதிர்ச்சி அடைந்துவிடும். சருமம் உலர்ந்துவிடும்' என்றெல்லாம் பொய்ப் பிரசாரம் செய்யப்பட்டு வருகிறது. நம்ப வேண்டாம் ப்ளீஸ்!

காய வைத்த பசு மஞ்சள், வெள்ளை மிளகு, நெல்லி வித்து, வேப்பம் விதை, கடுக்காய்த் தூள்... மேலே கூறப்பட்ட இந்தப் பொருட்களை, சம அளவு எடுத்து வெயிலில் உலர்த்தவும். மிஷினில் கொடுத்து, பவுடராக அரைத்துக் கொள்ளவும். அருமையான மூலிகை அழகுப்பொடி தயார்!

இந்தத் தூளில், ஒரு தேக் கரண்டி பால் சேர்த்து, குழைத்து, முகம், கழுத்து, கைகால்களில் தடவி, நன்றாக ஊறியதும், வெந்நீரில் குளிக்கவும். பளபளப்பான சருமம் கிடைக்கும். மஞ்சள் அக்மார்க் முத்திரையிடப்பட்ட கிளென்ஸர் என்பதால், சருமம் சுத்தமாகிறது. தினமும் தேய்த்துக் குளித்தால், மேனி, கேட்மியம் பொன்மேனியாகிவிடும்.

'வீடு முழுக்க படம் மாட்டி வைக்கலாம். அந்த அளவுக்குக் காலில் கால் ஆணி' என்று அலுத்துக் கொள்ளும் ஆசாமிகளுக்காகவே இந்த மஞ்சள் வைத்தியம். மஞ்சள், வேப்பங்கொழுந்து, மருதாணி, குப்பைமேனி எல்லாவற்றையும் சம அளவில் எடுத்து, அரைத்து, பூசி வர, கால் ஆணி இருந்த இடம் தெரியாமல் காணாமல் போகும். மாயமில்லை, மந்திரமில்லை. ஜஸ்ட் மஞ்சள்!

படங்கள் : ஸ்ரீஹரி

ராஜம் முரளி

✉ தலையங்கம் ஓர் ஒளிக் கீற்று. கழகங்களின் சுந்தர் கோல ஆட்சியை அகற்ற இளைஞர்களான இரு தலைவர்களால் நிச்சயம் முடியும்.
சென்னை - 61,
ஆர். நாகராஜன்

✉ 'அரசே உருவாக்கும் அநாதைகள்' கட்டுரை உரிய நேரத்தில் எழுதப்பட்டிருந்தது.
திருப்பூர் - 4,
பா. சு. மணிவண்ணன்

✉ புதுவை முதல்வர் உண்மையிலேயே புதுமை முதல்வர் தான்!
மும்பை - 37,
உமரி.பொ. கணேசன்

✉ பாண்டிச்சேரி முதலமைச்சர் ரங்கசாமியைப் பார்த்து தமிழகத்தை ஆண்ட, ஆளுகிற, ஆளப்போகிற முதல்வர்கள் தலைகுனிய வேண்டும். போதைக்குப் பேர் போன மாநிலத்தில் வாக்காளர் பாதை தடுமாறவில்லை. தமிழக வாக்காளர்களோ பேதை நிலையில் இருந்து மீளவில்லை!
தஞ்சாவூர் - 7,
வளர்மதி ஆசைத்தம்பி.

✉ 'வெற்றி கொள்'- சிந்தனையைத் தூண்டும் சிறந்த கவிதை!
மதுரை,
என். பாலகிருஷ்ணன்.

✉ இன்று ஸ்பெஷலிஸ்ட்களிடம் வியாபார நோக்கம் மட்டுமே இருக்கும். குடும்ப டாக்டரிடம் குடும்ப ஆரோக்கியத்தைக் காப்பாற்றும் மனிதாபிமானம் மேலோங்கி இருக்கும் என்பதைக் கட்டுரை உணர வைத்தது!
பள்ளிபாளையம்.
ரஞ்சனி ப்ரியன்



✉ வாய்ப்பு இருந்தும் இலவச இணைப்பின் அட்டையில் மூன்று குழந்தைகளுடன் மாதவன் சிம்ரன் நடித்த மணிரத்னம் படத்தின் ஸ்டில்லைப் போடாமல், ரமணி-பூர்ணா குடும்பப் படத்தைப் போட்டு வித்தியாசப்படுத்திக் கொண்டது கல்கி!
நெய்வேலி -3,
எஸ். ஸ்ரீகாந்த்

✉ 'பாதுகாப்பான குடும்பத்துக்கு' என்ற கட்டுரை மிக மிகப் பயனுள்ளது.
தஞ்சாவூர் - 1,
ஆர். சாவித்திரிபாய்.

✉ வாசன் காங்கிரஸில் இணைவதுதான் நல்லது. இன்னும் காலம் தாழ்த்தினால் இரண்டாம் கட்ட தலைவர்களை இளங்கோவன் இழுத்து விடுவார்! அதன் பிறகு வெறும் ஆளாய் வாசன் போனால் என்ன மரியாதை இருக்கும். வாசன் சிந்திப்பது நல்லது!
நெல்லை - 7,
ஜே. பீமு ஜவகர்.

அதைப் போடாமல் இதைப் போட்டீங்களே!

✉ சி.சு. செல்லப்பாவின் இறுதியாத்திரை புறப்படும்போது கூடியிருந்த அன்பர்கள் 'வந்தே மாதரம்' என்று முழக்கமிட்டார்கள். 'ஜெய்ஹிந்த்' அல்ல. கட்டுரை செல்லப்பாவின் வறுமை பற்றி பேசுகிறது. வேறு சில ஏடுகளும் இது பற்றி குறிப்பாக எழுதி மகிழ்கின்றன. வசதிகள் இருந்தும் எளிமை கருதி அவர் வாழ்ந்தார் என்பதே உண்மை. வங்கியில் வேலை பார்க்கும் மகனோடு மதுரை, பெங்களூர் போன்ற இடங்களில் வசித்த அவர், கடைசி நாட்களில் இலக்கியம் கருதி சென்னை வந்து வசித்தார். தியாகிகள் பென்ஷன் தொகையை வைத்து, அடுத்தவரைச் சாராமல் தன்னளவு தேவைகளைப் பூர்த்தி செய்து கொண்டார். தன்னிறைவோடு வாழ்ந்தார் என்பதே முக்கியம்.
சென்னை - 5,
சு.சங்கரசுப்ரமணியன்

✉ புத்தகக் கண்காட்சி ஆக்ஸ்ஃபோர்ட் அரங்கில், ஜெயகாந்தன் மேடைக்கு வருமுன் எடுத்த படம்தான் காலி நாற்காலிகள் காட்சி. வந்த பிறகு ஒரு நாற்காலிகூடக் காலியிருக்கவில்லை!
சென்னை,
சாருகேசி

வட்டமேஜை



பழம்

விடியலின் சாம்பல் இருட்டு,
ஏரிக்கரைப் பனையைத் தேடி
எங்களின் பயணம்
கருந்தோல் பிளந்து மஞ்சள் காட்
காற்றில் வாசமாய்ப் பேசும்
புதரில் விழுந்த பழங்கள்

வெயிலில் களைத்து
ஈச்சையின் கீழொதுங்கினால்
நாலுபழம் உதிர்த்து
பாசம் காட்டும்

கரம்பில் மாடுகள்
நாவலின் உச்சியில்
அணில்களாய் ஊர்வோம்
தவறிய பழங்கள்
கிணறு 'சப்'புக் கொட்டி ருசிக்கும்.
மீன்கள் குவிந்து
மறுபடி கலையும்

பள்ளிவிட்டு வருகையில்
சடைத்துக் கிடக்கும் களாபழங்கள்
சோமசுந்தர வாத்தியின்
பிரம்படிக்கு மருந்து

கோடை விடுமுறை
ஒவ்வொரு கையிலும் தொட்டு
கொடுக்காபுளி யாவும்
முள்முடியேந்திய வள்ளல்

தோப்புக்குப் போனால் இருப்பை
சாமியார் மலையெனில் இலந்தை
பெரியார் ரோடு முழுக்க புளி.
ஏதுமற்றதொரு பொழுதில் அவிஞ்சிபழமென
அலைந்து திரிந்ததொரு காலம்

மரமேறி பழம்தேடிய வாழ்வு
பூண்டறுந்து போக
மாடியேறி பணம் பொறுக்கவென்று
சபிக்கப்பட்டாயிற்று.

– பச்சியப்பன்

திருப்பூர் கிருஷ்ணன்

ஏ.என்.எஸ். என்ற ஆச்சரியம்!

ஏ.என். சிவராமன் முழுக்க முழுக்க நாளிதழ் சார்ந்தவர். நாளிதழ்த் துறையின் சகல நுணுக்கங்களும் அவருக்கு அத்துபடி. நாளிதழ்ப் பத்திரிகையியலில் அவர் தொடாத துறையில்லை. அவர் தொட்டு வளம் பெறாத பகுதி இல்லை. வாழும் போதே நாளிதழ் இயலின் வரலாறாக வாழ்ந்த பெருமைக்குரியவர்.

நான் வார இதழ் சார்ந்தவன். கதை, கவிதை, என என் ஆர்வங்கள் படைப்பிலக்கியம் தொடர்பானவை. ஏ.என்.எஸ். ஸுக்குப் படைப்பிலக்கியத்தில் மரியாதை உண்டு. ஆனால் ஈடுபாடு கிடையாது.

நான் பணிபுரிந்த வார இதழ்ப் பகுதிக்கு எப்போதாவது அவர் வருவார்; " நீங்களெல்லாம் வீக்லி!" என்பார். "ஆமாம்" என் பேன் நான் பவ்யமாய். "ஆனால் நாங்களெல்லாம் ஸ்ட்ராங்லி!" என்பார் குறும்பாய். "இருக்கட்டும், நீங்கள் ஒரு நூறு வருஷமாவது ஸ்ட்ராங்காக இருக்க வேண்டுமென்பதுதான் என் ஆசை. வீக்காக இருப்பவர்களெல்லாம் உங்களோடு சேர்ந்து ஸ்ட்ராங்காகி விட்டுப் போகிறோம்!" என்று சிரிப்பேன் நான். நகைத்துக் கொண்டே போய்விடுவார்.

நாள் முழுவதும் இருபத்து நான்கு மணி நேரமும் வற்றாத உற்சாகத்தோடு இருக்கும் மனபலம் நிரம்பியவர். ஏ.என்.எஸ் போல ஒரு துறைக்கு முழுமையாகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட இன்னொருவர் அபூர்வம்.

அவருக்கு எப்போதும் என்னிடம் பேச எங்களிடையே பொதுவான சில ஆர்வங்கள் இருந்து கொண்டே இருந்தன. கதர், இயற்கை வைத்தியம், மகாத்மா காந்தி, காஞ்சிப் பரமாச்சாரியார், நாமக்கல் ராமலிங்கம் பிள்ளை... இப்படி...

அவரைப் போலவே நானும் கதர் அணிபவன் என்பதில் அவருக்கு ஒரு மகிழ்ச்சி உண்டு. "கதர் எங்கு வாங்குகிறாய் - திருப்பூரிலா, மெட்ராஸிலா? ரெடிமேடா, துணியெடுத்துத் தைப்பாயா? உன் வீட்டில் யாராவது நாள்தோறும் ராட்டை நூற்பவர்கள் உண்டா...?"

உரிமையோடும் சொந்தத்தோடும் இப்படியெல்லாம் கேள்வி கேட்க அவர் இல்லையே என்று மனம் ஏங்குகிறது.



• ஏ.என்.எஸ். (படம் க்ளிக் ரவி)

'கொய்யாப் பழத்தின் விதையைக் கடித்துச் சாப்பிட்டால், இதயம் வலிமை பெறும்' என்று காந்தி எழுதியுள்ளதைப் பற்றி ஒரு நாள் சொல்வார். காந்தியைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்தால் பற்பல சுதந்திர நினைவுகளில் தோய்ந்து விடுவார்.

காஞ்சிப் பரமாச்சாரியாரைத் தாம் சந்தித்ததைப் பற்றிப் பேசிக் கொண்டிருப்பார். ரமண மகரிஷி பற்றியும் சொல்வதுண்டு.

என் பெரியப்பா கரூர் பண்டிட் பி.எஸ். ராமசர்மா நாமக்கல் ராமலிங்கம் பிள்ளைக்கு நெருங்கிய நண்பராக இருந்தவர். வைத்தியர். என் பெரியப்பாவிடம் வைத்தியம் பார்த்துக் கொண்டார் கவிஞர். இருவருமே தேசியச் சிந்தனைகள் உடையவர்கள். வைத்தியத்துக்காகக் கவிஞரிடம் பணம் பெற்றுக் கொள்ள மறுத்துவிட்டார் என் பெரியப்பா. அதனால் கவிஞர் தாமே வரைந்த அழகிய பெரிய முருகர் வண்ண ஓவியம் ஒன்றை என் பெரியப்பாவுக்கு அன்போடு அளித்தார்.

"அந்த ஓவியம் இன்னும் கரூரில் உங்கள் பெரியப்பாவின் சக்தி விலாச வைத்ய சாலையில் இருக்கிறது அல்லவா?" என்று விசாரிப்பார். அந்த ஓவியத்தை ஒருமுறை வந்து பார்க்க வேண்டும் என்றும் சொல்லிக் கொண்டிருந்தார்.

என் அப்பா பி.எஸ். சுப்பிரமணியம் ஒருமுறை ஜவஹர்லால் நேருவின் ஆங்கிலப் பேச்சை அவர் மேடையில் பேசப் பேச மலையாளத்தில் மொழி பெயர்த்திருக்கிறார். அதைப் பற்றி நான் சொல்லும்போது ஏ.என்.எஸ். நேரு பற்றிய நினைவுகளில் மூழ்கிவிடுவார். நேரு பற்றி விமர்சன பூர்வமாகப் பற்பல கருத்துகளைச் சொல்வார்.

ஏ.என்.எஸ்.ஸின் புதல்வர் நாராயணனிடம் அவருக்கு எவ்வளவு அன்பும் பாசமும் இருந்ததோ, அந்த அளவுக்கு எல்லா இளைஞர்களிடமுமே அவருக்கு இருந்தது. தேச பக்தி, தேசத்தில் வாழும் மக்களிடம் பக்தி என்பதையெல்லாம் ஏ.என்.எஸ்.ஸிடம் தான் கற்றுக் கொள்ள வேண்டும்.

ஒருநாள் அவர் என் அருகே வந்து நின்றபோது, நான் ஒரு கட்டுரைக்கு எப்படித் தலைப்பு வைப்பது என்று யோசித்து மண்டையைக் குடைந்து கொண்டிருந்தேன். "என்ன கட்டுரை அது?" என்று கேட்டார். "பெர்னாட்ஷாவின் நகைச்சுவை பற்றி ஒருவர் கட்டுரை எழுதியிருக்கிறார். அதற்குத்தான் தலைப்பு யோசித்துக் கொண்டிருக்கிறேன்" என்றேன். "இப்படி வையேன்" என்று சொல்லி என்னிடம் இருந்த கட்டுரையை வாங்கி 'தமாஷா!' என்று எழுதிக் கொடுத்துவிட்டுப் போனார் அவர். சடாரென்று முடிவெடுக்கும் திறமையும் அந்த முடிவை எல்லோரும் வியக்கிற மாதிரி பளிச் என்று எடுத்துவிடும் சாதுரியமும் அவரிடம் இயல்பாகவே இருந்தன.

தமது பத்திரிகையை மட்டுமல்லாமல் மற்ற பத்திரிகைகளையும் கூர்மையாக வாசிப்பார். அவற்றில் ஏதாவது சிறப்பாக இருந்தால் சிலாகிக்கத் தயங்க மாட்டார். சென்னையில் உஸ்மான் சாலையைக் கொஞ்ச காலம் ஒருவழிப் பாதை ஆக்கினார்கள். அதனால் நேர்ந்த சிரமங்களைச் சில பத்திரிகைகள் கண்டித்து எழுதின. மறுபடி அதை முன்போலவே மாற்றிவிட்டார்கள். பனகல் பூங்கா அருகே உள்ள அந்த சாலையை ஒருவழிப் பாதை ஆக்கியதைக் கண்டித்து ஒரு பத்திரிகை கட்டுரை வெளியிட்டிருந்தது. அந்தக் கட்டுரைக்குக் கொடுக்கப்பட்டிருந்த தலைப்பு ஏ.என்.எஸ்.ஸுக்கு மிகவும் பிடித்தது. "பார்! தலைப்பு என்றால் இப்படி இருக்க வேண்டும்!" என்று என்னிடம் காண்பித்தார். அந்தத் தலைப்பு: 'உஸ்மான் ரோடு ஒரு வழி ஆகியது!'

"எங்க ஆபீசுல வரவர மனித உரிமை மீறல் ரொம்ப அதிகமாயிடுச்சு..."

"எப்படி?"

"நேரத்தோட பஸ் பிடிச்சு வீடு திரும்பவேணாமா? தூங்கி எழுந்திருக்க டைம்பீசுல அலாரம் வைக்கலாம்னா மானேஜர் சம்மதிக்க மாட்டேன்றாரு!"

- அம்பை தேவா



● பா. க. மணிவண்ணன், திருப்பூர்.

? ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் விரைவில் தமிழக அரசியலிலிருந்து காணாமல் போகப் போகிறார் என்று நினைக்கிறேன்... நீங்கள்?

! இப்படி அடிக்கடி தமிழக காங்கிரஸ் தலைவர்களைக் காணாமல் போகச் செய்து கொண்டிருந்தால் தமிழக காங்கிரஸே காணாமல் போய் விடும் என்பதை சோனியா உணர ஆரம்பித்திருக்கிறார் என்று நினைக்கிறேன்.

● ஆர். அப்துல் சலாம், திருச்சி - 20.

? 'நான் ஜான்ஸி ராணியைப் பார்த்ததில்லை; வேலு நாச்சியாரைப் பார்த்ததில்லை; ஆனால் அவர்களை ஒரே நபராக ஜெயலலிதாவிடம் பார்க்கிறேன்' என்று தமிழ்க்குடிமகன் பேசியிருப்பது எதைக் காட்டுகிறது?

! தமிழ்க்குடிமகன் என்றொருவர் இருப்பதை... அவர் இன்னும் அ.தி.மு.கவில் இருப்பதை நினைவூட்டுகிறது.



• உள்ளேன் ஐயா!



* ஆளுனர் இலக்கணம்...!

● டி. செல்வன், நெல்லையப்பபுரம்.

? செக்ஸ் சமாசாரங்களை அலசினால்தான் பத்திரிகைகளை விற்க முடியும் என்பதால் தான் அண்ணாச்சி மேட்டரும் டாக்டர் பிரகாஷ் மேட்டரும் அதிக அளவில் எக்ஸ் போஸ் பண்ணப்படுகிறது என்கிறார்களே...?

! இரண்டுமே வெளியிட்டு உலகறியச் செய்யப்படவேண்டிய செய்திகள்தான். ஆனால், சமூக அக்கறையும் தார்மிகக் கோபமும் கலந்த அணுகுமுறைக்குப் பதிலாக, கிளுகிளுப்பூட்டி, வக்கிரத்துக்குத் தீனிபோட்டு, வியாபாரம் பெருக்குவது மட்டுமே நோக்கமாகிறபோதுதான் அசிங்கமாகிறது. மனித பலவீனத்தைப் பயன்படுத்தும் வியாபாரம் ஆரோக்கியமான வளர்ச்சி தராது. எல்லாவற்றையும்விட கேவலம் இதிலும் அரசியலை வலுக்கட்டாயமாக நுழைப்பது!

● இரா. ஆறுமுகம், திருச்சி - 9.

? 'உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி எஸ்.வி.பருச்சா, 'சில

கமல் Vs ரோஜா எப்படி?

உயர்நீதிமன்ற நீதிபதிகளே ஊழல் செய்கிறார்கள்; அவர்களைக் கண்டுபிடித்து பதவி நீக்கம் செய்யவேண்டும்' என்று பேசியிருப்பது பற்றி...?

! நீதிபதியே சொல்வதால் நீதிமன்ற அவமதிப்பு ஆகாது. உண்மை என்றும் நம்பலாம். அவர் பேச்சோடு நில்லாமல் செயலிலும் இறங்க வேண்டும்.

● எஸ். இராஜேந்திரன், கபிஸ்தலம்.

? முதலமைச்சர் பன்னீர்செல்வத்திடம் உள்ள சிறப்பாக 'தராசு' கருதுவது எதை...?

! அவரது அடக்கமும் அமைதியும்.

● வே. முருகேசன், சென்னை - 88.

? தமிழக அரசின் மலிவு விலை மது விற்பனை எப்படி இருக்கிறது?

! பெயர்தான் மினி. மக்கள் ஆரோக்கியத்துக்கும் பர்ஸுக்கும் பிடித்தது சனி!

● வசந்தாகாந்த், கருப்பம்புலம்.

? கமல் Vs ரோஜா எப்படி...?

! கமலும் ரோஜாவும் பூக்கள் பெயரைக் கொண்டிருப்பதாலும் சேற்றிலும் முள்ளிலும்

☐ ரூ. 100/- பரிசு பெறுபவர்:
எல். மீனாட்சிசுந்தரம்,
54A, அய்யங்குளத் தெரு,
திருவண்ணாமலை - 606 601.

* ரூ. 50/- பரிசு பெறுபவர்:
கண்ணம்மா இராமசாமி,
A/84, தீரன் நகர்,
திருச்சி - 620 009.

மலர்ந்திருப்பதாலும் இப்படித்தான் அடிக்கடி சண்டை வரும். இருவரும் பெயரை மாற்றிக் கொள்வது நல்லது என்று கோலிவுட் வாஸ்து ஜோதிடர் சொல்லியிருக்கிறார். சம்பந்தப்பட்டவர்கள் கவனிக்க.

● **கண்ணம்மா இராமசாமி, திருச்சி - 9.** ✱

? தமிழ்நாட்டில் தமிழ், ஆங்கில நாளிதழ்களில் 7.1.2002 அன்று, முற்றிலுமாக ஹிந்தியிலேயே ஒரு விளம்பரம் வெளியிட்டதே மத்திய அரசு...? மத்திய அரசில் அங்கம் வகிக்கும் தி.மு.க. இதற்கு என்ன சொல்கிறது?

! தி.மு.க. என்ன சொல்கிறது என்பது தராசுக்குத் தெரியாது. ஆனால் இந்தப் பணவிரயம் தி.மு.கவினால் கண்டிக்கப்படவேண்டும் என்பது தெரியும். மேலும், ஒரிசா தொடர்பான விளம்பரம் தமிழகத்துக்கு எதற்கு?

● **கா.மு.ஜக்கரியா, எலந்தங்குடி.**

? 'ஐந்தாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை அரசு பொதுத் தேர்வு உண்டு; மாற்றம் கிடையாது' என்று தமிழக அரசு மார் தட்டிவிட்டு, ஒரு வாரத்துக்குள்ளாகவே பல்டி அடிப்பது எதைக் காட்டுகிறது...?

! இந்த அரசு யோசித்து முடிவுகள் எடுப்பதில்லை என்பதை மீண்டும் நிரூபிக்கிறது.

● **உமரி பொ. கணேசன், மும்பை - 37.**

? புதிய தமிழக கவர்னர் எப்படி இருக்க வேண்டும்...?

! எந்தத் தரப்புக்கும் ஜால்ரா அடிக்காதவராக..! தமது பதவிக்கு உரிய அதிகாரங்களை உணர்ந்து அறிந்த தைரியசாலியாக..

● **எல். மீனாட்சி சுந்தரம், திருவண்ணாமலை.** ❒

? முன்னோர் சிலைகள் நாட்டுக்கு அவசியமா...?

! அழகுக்காகவும் நாட்டுக்கு அரும் பணியாற்றியவர்களுக்கு மரியாதை செய்யும் விதத்திலும் சிலைகள் வடிப்பது தொன்று தொட்டு பல நாடுகளிலும் இருந்து வரும் பழக்கம்தான். ஆனால், தமிழகத்தில் அது மலினப்பட்டுப் போனதுபோல் உலகில் வேறு எங்கும் கிடையாது. அதனால் மதிப்பிழக்கிறது. தேவையா அவசியமா என்ற கேள்விகளும் எழுகின்றன. ○






• முன்னும்...



• சிறப்பும் செல்வமும்...



• காணக்கிடைக்குமா!

"ஸாரி, மன்னிச்சுடுங்க!"

"உங்களுக்கு நேர்ந்துவிட்ட அவமானத்துக்காக நான் மிகவும் வருந்துகிறேன். தயவு செய்து மன்னித்து விடுங்கள். இனி, ஒரு போதும் இது போன்ற தவறு நடக்காது" என்று பாரத ரத்னா விருது பெற்ற பிரபல ஷெனாய் கலைஞர் உஸ்தாத் பிஸ்மில்லாகானின் கைகளைப் பிடித்துக் கொண்டு, மன்னிப்புக் கோரினார் சந்திரபாபு நாயுடு.

"நான் அதை ஏற்கெனவே மறந்து விட்டேன். நேரில் நீங்களே வந்திருப்பது என்னை மிகவும் நெகிழச் செய்து விட்டது" என்று கண் கலங்கிவிட்டார் உஸ்தாத்.

"இனி நீங்கள் எப்போது ஹைதராபாத் வந்தாலும், நீங்கள் மாநில அரசின் சிறப்புக்குரிய விருந்தினர். உங்களுக்குத் தேவையான அனைத்து சௌகரியங்களையும் அரசாங்கம் செய்து தரும்" என்று கூறி விடைபெற்றார் ஆந்திர முதலமைச்சர் நாயுடு.

இந்தியாவின் முதுபெரும் இசைக் கலைஞரான உஸ்தாத் பிஸ்மில்லாகானுக்கு அண்மையில் ஹைதராபாத்தில் கசப்பான அனுபவம் ஏற்பட்டது. இதில் விசித்திரம் என்னவென்றால், அவரை ஹைதராபாத் கச்சேரிக்கு அழைத்த இரண்டு அமைப்புகளும் தத்தம் செயலுக்கு வருத்தம் தெரிவிக்காமல், ஒருவர் மீது ஒருவர் குற்றம் சாட்டிக் கொண்டிருப்பதுதான்.

"உஸ்தாத் ஹைதராபாத் வந்தவுடன் மாநில அரசின் விருந்தினர் மாளிகைக்குக் காரில் அழைத்துச் செல்லப்பட்டார். ஆனால், அங்கே அவருக்குத் தங்குவதற்கு இடமளிக்கப்படவில்லை. காரிலேயே சுமார் இரண்டு மணி நேரம் காத்திருக்க நேர்ந்தது. அதன் பின் செகந்திராபாத்தில் உள்ள ஒரு ஓட்டலில் தங்க வைக்கப்பட்டார். இதுதான் பிள்ளையார் சுழி.

பிஸ்மில்லாகானை ஹைதராபாத்துக்கு கச்சேரிக்கு அழைத்து, அவரை கௌரவிக்க விரும்பியது 'லலிதகலாவேதிகா' என்கிற ஹைதராபாத்தில் இருக்கும் கலாசார அமைப்பு. அந்த சமயத்தில் ஆந்திரமாநில சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஆந்திரப் பிரதேச திருவிழா' நடத்தத் திட்டமிட்டிருந்தது. ஆகவே, லலித கலாவேதிகாவும், சுற்றுலா வளர்ச்சிக்கழகமும் இணைந்து பிஸ்மில்லாகானின் நிகழ்ச்சியை நடத்த முடிவு செய்தன. இவர்களது பிரத்யேக வேண்டுகோளின்படி, பிஸ்மில்லாகான், தாம் வழக்கமாக வாங்கும் சன்மானத் தொகையான ஐந்து லட்சத்தை மூன்று லட்சமாகக் குறைத்துக் கொண்டார். சுற்றுலாக் கழகம் இரண்டு லட்சமும், லலித கலா வேதிகா ஒரு லட்சமும் சன்மானமாக வழங்க ஒப்புக் கொண்டன.

"ஆனால், ஏனோ தெரியவில்லை, சுற்றுலாக் கழகம் இரண்டு லட்சம் தர இயலாது; ஒரு லட்சம் தருகிறோம்' என்று பல்டி அடித்து விட்டது. பிஸ்மில்லாகான் கச்சேரி நடத்தட்டும், அவரைப் பாராட்டி கௌரவிக்க வேண்டிய அவசியமில்லை என்று தடைபோட்டனர். இதற்கெல்லாம் பின்னணி என்ன என்றே புரியவில்லை!" என்று ஆதங்கப்படுகிறார் லலித கலா வேதிகா நிர்வாகி ராமமூர்த்தி.

"அரசு செலவில், லலித கலாவேதிகா பப்ளிஸிடி தேடிக் கொள்ளப் பார்த்தது" என்று குற்றம் சாட்டுகிறார் சுற்றுலா கழகத் தலைவர் கிருஷ்ணராவ்.

'இவர்கள் மோதலில், ஒரு பாரத ரத்னா கலைஞர் அவமானப்படுத்தப்பட்டது மிகவும் வேதனைக்குரியது' என்று மனம் நொந்து கூறுகிறார்கள் ஹைதராபாத் ரசிகர்கள்.

— மௌலி







சிவகாமியின் சபதம்

இரண்டாம் பாகம்
காஞ்சி முற்றுகை

முதல் அத்தியாயம்

வடக்கு வாசல்

கார் காலத்தில் ஒருநாள் மாலை காஞ்சி மாநகரின் கோட்டை கொத்தளங்களுக்குப் பின்னால் சூரியன் இறங்க, வட கிழக்குத் திசையில் குமுறிக் கொண்டிருந்த மேகங்களின் தங்க விளிம்புகள் வர வர ஒளி குன்றி வந்தன. செங்கதிர்த் தேவன் தன் கடைசித் தங்கக் கிரணத்தையும் சுருக்கிக்கொண்டு மறையவே, வான முகில்கள் நீல நிறத்தை அடைந்து, திருமாலின் மேனி வண்ணத்தை நினைவூட்டின.

வடகிழக்குத் திசையிலிருந்து விர்ரென்று அடித்துக்கொண்டிருந்த வாடைக் காற்றின் சிலுசிலுப்பினால் மரங்களும் கொடிகளுங்கூட நடுங்குவதாகத் தோன்றியது.

காஞ்சிமா நகரத்துக் கோட்டை மதில்களிலும், கோயில் கோபுரங்களிலும், அரண்மனை விமானங்களிலும், கலை மண்டபங்களிலும் குடியேறி வாழ்ந்த பலவகைப் பறவைகள் சடசடவென்று இறக்கைகளை அடித்துக்கொண்டு தத்தம் வாசஸ்தலத்தை நோக்கிப் பறந்து கொண்டிருந்தன.

அந்த மனோரம்யமான அந்திப் பொழுதில் காஞ்சிக் கோட்டையின் விசாலமான வடக்கு வாசல் அமைதி குடி கொண்டு விளங்கிற்று.

எட்டு மாதத்துக்கு முன்னால் மகேந்திர சக்கரவர்த்தி அந்தக் கோட்டை வாசல் வழியாகப் போர்க்களத்துக்குப் பிரயாணமான பின்னர், அவ்வாசலின் பெருங்கதவுகள் திறக்கப்படவில்லை. உட்புறத்தில் கனமான எஃகுச் சட்டங்களினால் அவை தாழிடப்பட்டுப் பெரிய பூட்டுகளினால் பூட்டப்பட்

அமரர் கல்கி

டிருந்தன.

வாசலின் வெளிப்புறத்தில் காவலர்கள் இருவர் கையில் வேலுடனும் இடையில் வாளுடனும் நின்று காவல் புரிந்தார்கள். ஒவ்வொருவருடைய கழுத்திலும் ஊதும் கொம்பு ஒன்று தொங்கியது. கோட்டை வாசலிலிருந்து புறப்பட்ட விசாலமான இராஜபாட்டையானது அங்கிருந்து வெகுதூரம் வரையில் வளைந்தும் நெளிந்தும் ஊர்ந்தும் செல்லும் பாம்பைப் போல் காணப்பட்டது.

அந்தப் பாதையில் கண்ணுக்கெட்டிய தூரத்துக்கு ஒருவரும் காணப்படவில்லையாயினும் காவலர்கள் இருவரும் சாலையைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருப்பதைப் பார்த்தால், யாரையோ அவர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தது போல் தோன்றியது.

திடீரென்று வெகு தூரத்தில் புகைப்படலம் போன்ற புழுதி எழுந்தது. குதிரைகளின் பாய்ச்சல் சப்தம் கேட்டது. காவலர்கள் இருவரும் ஜாக்கிரதையாக நின்றார்கள்.

கோட்டை வாசலின் மேல் மாடத்தில் எச்சரிக்கை முரசு 'திண்திண்' என்று சப்திக்கத் தொடங்கியது.

புழுதிப் படலமும், குதிரைகள் வரும் சப்தமும் அதிவிரைவில் நெருங்கி வந்துவிட்டன. மங்கலான மாலை வெளிச்சத்தில் குதிரைகளும் கண்ணுக்குப் புலனாயின.

முன்னால் வந்த இரண்டு குதிரைகளின் மேலிருந்த வீரர்கள் கையில் ரிஷபக் கொடி பிடித்துக்கொண்டிருந்தார்கள்.

அவர்களுக்கு அடுத்தாற்போல் தனித்து வந்த உயர்ந்த சாதிக் குதிரைகளின் மீது போர்க்கோலம் பூண்ட கம்பீரத் தோற்றமுடைய ஒரு யௌவன புருஷன் வீற்றிருந்தான். இன்னும் சில குதிரைகள் கொஞ்சம் தள்ளிப் பின்னால் வந்தன.

கோட்டை வாசலுக்குச் சற்று அப்பால், அகழிப் பாலத்தின் அக்கரையில் எல்லாக் குதிரைகளும் நின்றன.

முன்னால் கொடி பிடித்து வந்த இருவரில் ஒருவன், "காஞ்சிமா நகர்க் கோட்டையின் வீர தளபதி பரஞ்சோதியார் வருகிறார்! கோட்டைக் கதவைத் திறவுங்கள்!" என்று கூவினான். இன்னொருவனும் அவ்வாறே திரும்பக் கூவினான்.

"தளபதி பரஞ்சோதி வாழ்க! வாழ்க!" என்று பற்பல குரல்கள் சேர்ந்து கோஷித்தன.

கோட்டைக் காவலர் இருவரும் விரைவாக நடந்து முன்னால் வந்தார்கள். தனித்து நின்ற உயர்சாதிக் குதிரை மீதிருந்த வீரனை அவர்கள் அணுகி வணக்கத்துடன் நின்றார்கள்.


ஆம்; அந்தக் கம்பீரமான கறுத்த குதிரை மீது வீற்றிருந்த வீரன் நம் பழைய நண்பனான பரஞ்சோதிதான்!

எட்டு மாத காலத்திற்குள்ளே அவனிடம் காணப்பட்ட மாறுதலானது மிக்க அதிசயமாயிருந்தது.

காஞ்சியில் பிரவேசிக்கும்போது அவன் உலகமறியாத பாலகனாயிருந்தான். அவனுடைய முகமானது பால் வடியும் குழந்தை முகமாயிருந்தது. இப்போதோ அந்த முகத்தில் எத்தனையோ போர்முனைகளில் முன்னணியில் நின்று போரிட்டதன் அடையாளங்களான பல காயங்களுடன், உலக அனுபவத்தினால் ஏற்படும் முதிர்ச்சியும் காணப்பட்டது. எனவே நாமும் தளபதி பரஞ்சோதிக்குரிய கௌரவத்தை அளித்து அவரை மரியாதையுடன் குறிப்பிட வேண்டியவர்களாகிறோம்.

கோட்டைக் காவலர்கள் தளபதியை அணுகிப் பயபக்தியுடன் நின்ற போது அவர் மிக்க பெருமிதத்துடனே கையில் ஆயத்தமாய் வைத்திருந்த சிங்க இலச்சினையை எடுத்துக் காட்டினார்...

மூன்று சாம்ராஜ்யங்கள்



'சிவகாமியின் சபதம்' நிகழ்ந்த காலத்தில் பாரத நாட்டின் அரசியல் நிலைமை...

அதைப் பார்த்த வீரர்கள் மறுபடியும் தளபதி பரஞ்சோதிக்கு வணக்கம் செலுத்திவிட்டுத் திரும்பிச் சென்று, அகழியின் பாலத்தை நெருங்கியதும், தங்கள் தோளில் தொங்கிய கொம்பு எடுத்து, 'பூம்' 'பூம்' என்று ஊதினார்கள்.

உடனே, கோட்டைக் கதவிற்குள் அமைக்கப்பட்டிருந்த ஒரு சிறிய துவாரக் கதவு திறந்தது. உள்ளிருந்து ஒரு முகம் எட்டிப் பார்த்தது. வாயிற் காவலர்களை அந்த முகத்துக்குடையவன் ஏதோ கேட்க, அவர்கள் மறுமொழி சொன்னார்கள்.

அடுத்தகணம் உட்புறத்தில் இரும்புத் தாள்களும் பூட்டுகளும் திறக்கப்படும் சப்தம் கேட்டது. பின்னர் அந்த பிரம்மாண்டமான கோட்டைக் கதவுகள், கட கடவென்றும் மடமடவென்றும் சப்தம் செய்துகொண்டு திறந்து, வந்தவர்களுக்கு வழி விட்டன.

கொடி பிடித்த இரு வீரர்களையும் பின்னால் விட்டு விட்டு, தளபதி பரஞ்சோதி அகழியின் பாலத்தைக் கடந்து கோட்டை வாசலுக்குள் முன்னதாகப் பிரவேசித்தார்.

முன்கோட்டை வாசலுக்கு ஏறக்குறைய இருநூறு அடி தூரத்துக்கப்பால், இரண்டாவது சிறுவாசல் ஒன்று காணப்பட்டது.

இரண்டு வாசல்களுக்கும் நடுவில் கீழே கருங்கல் தளவரிசை அமைந்திருந்த வட்ட வடிவமான முற்றத்தில் வேல் பிடித்த வீரர்கள் பலர் அணிவகுத்து நின்றார்கள். இடையிடையே சில வீரர்கள் சுடர் விட்டெரிந்த தீவர்த்திகளைப் பிடித்துக் கொண்டிருந்தார்கள்.

அவர்களுக்கு நடுவில், இரட்டைக் குதிரை பூட்டிய அலங்கார ரதம் ஒன்று காணப்பட்டது. ரதத்திற்குச் சமீபமாகப் பல வீரர்கள் சேர்ந்து பிடித்துக் கொண்டு நின்ற ரிஷபக் கொடியானது வானளாவிப் பறந்தது. திறந்த கோட்டை வாசல் வழியாகக் குபுகுபுவென்று புகுந்து அடித்த வாடைக் காற்றில் அந்தக் கொடி சட சட வென்று சப்தித்துக் கொண்டு ஆடியதானது, புதிய கோட்டைத் தளபதிக்கு உற்சாகமாக வரவேற்புக் கூறுவது போலிருந்தது.

ரதத்தில் குமார சக்கரவர்த்தி மாமல்ல நரசிம்மர் வீற்றிருந்தார். ரதசாரதி கண்ணபிரான் குதிரைகளின் கடிவாளங்களை இழுத்துப் பிடித்துக் கொண்டு கீழே பூமியில் நின்றான்.

கதவு திறந்து தளபதி பரஞ்சோதி உள்ளே பிரவேசித்தாரோ இல்லையோ, மாமல்ல நரசிம்மர் ரதத்திலிருந்து கீழே குதித்தார். அவர் கையினால் சமிக்ஞை செய்யவும், அருகில் நின்ற வீரர்களில் ஒருவன், இடி முழக்கம் போன்ற குரலில், "சளுக்கப் புலிகேசியின் அரக்கர் படைகளைக் கதி கலங்க அடித்த அசகாயசூரர் வீராதி வீரர் தளபதி பரஞ்சோதி வருக! வருக!" என்று கூவினான்.

அவனுடைய குரலின் பிரதித்வனியே போல், "தளபதி பரஞ்சோதி வருக! வருக!" என்று நூற்றுக்கணக்கான வீரர்களின் குரல்கள் கோஷித்த சப்தம் வானை அளாவிற்று.

அந்தக் கோஷத்துடன் கலந்து, சங்குகளும் கொம்புகளும் தாரைகளும் தப்பட்டைகளும் முரசங்களும் பேரிகைகளும் ஏக காலத்தில் முழங்க, அந்தப் பெரு முழக்கமானது கோட்டை வாசலிலே எதிரொலியை உண்டாக்க இந்தப் பலவகைச் சப்தங்களும் சேர்ந்து அங்கே நின்ற வீரர்களுக்கு உற்சாக வெறியை உண்டாக்கின.


இத்தகைய வரவேற்பைப் பரஞ்சோதி சற்றும் எதிர்பார்க்கவில்லை என்பது அவருடைய முகபாவத்திலிருந்து நன்கு தெரிந்தது. சட்டென்று குதிரை மீதிருந்து அவர் தரையில் குதித்து, ரதத்தின் அருகில் குமார சக்கரவர்த்தி நின்ற இடத்தை அணுகினார்.

தரையிலே விழுந்து நமஸ்கரித்துக் குமார சக்கரவர்த்திக்கு வணக்கம் செலுத்த விரும்பிய பரஞ்சோதியை மாமல்ல நரசிம்மர் தடுத்து இரு கரங்களாலும் அணைத்துக்கொண்டார்.

சற்று நேரம் வரையில் இருவராலும் ஒன்றுமே பேச முடியவில்லை. முதலில்

குமார சக்கரவர்த்திதான் பேசி னார்.

"தளபதி! நாளெல்லாம் நிற் காமல் பிரயாணம் செய்து வந் தீர் போலும்! களைப்புக் காரணமாக உம்



மால் பேசவே முடிய வில்லை!"

"பிரபு! நான் பேச முடியாமலிருப்பதற்குக் காரணம் களைப்பு அல்ல; தங்களுடைய அளவில்லா

“சளுக்கப் புலிகேசியின் அரககர்
படைகளைக் கதி கலங்க அடித்த
அசகாயசூரர் வீராதி வீரர் தளபதி
பரஞ்சோதி வருக! வருக!”



அன்புதான் காரணம்! கோட்டை வாசலுக்கு வந்து என்னை எதிர் கொள்வீர்களென்று நினைக்கவில்லை...!''

"மகா வீரரே! கோட்டைக்கு வெளியிலே கிளம்பக் கூடாதென்று மட்டும் சக்கரவர்த்தி எனக்குக் கட்டளையிடாமலிருந்திருந்தால் ஒரு காத தூரம் உம்மை எதிர் கொள்வதற்கு வந்திருப்பேன்! சென்ற எட்டு மாத காலமாக உம்மைப் பார்க்க வேணுமென்ற ஆவல் என் உள்ளத்திலே எப்படிப் பொங்கிக் கொண்டிருந்தது என்பது உமக்கு எவ்விதம் தெரியும்?'' என்று குமார சக்கரவர்த்தி கூறி, முதலில் தாம் ரதத்தில் ஏறிக்கொண்டு, பரஞ்சோதியையும் தம் பக்கத்தில் உட்கார வைத்துக்கொண்டார். சாரதி கண்ணபிரானும் முன் தட்டில் ஏறி உட்கார்ந்தான்.

''தளபதி! நேரே அரண்மனைக்குப் போகலாமா?





உமது விருப்பம் என்ன?" என்று மாமல்லர் கேட்க, பரஞ்சோதி, "பிரபு! போகும்போதே காஞ்சி நகரைச் சுற்றிப் பார்த்துக் கொண்டு போக விரும்புகிறேன். கொஞ்சங்கூடக் காலத்தை வீண் போக்குவதற்கில்லை. இந்த வீரர்களையெல்லாம் முன்னதாக அனுப்பி விடலாம்" என்றார்.

குமார சக்கரவர்த்தி கட்டளையிட்டதன் பேரில், அங்கிருந்த வீரர்கள் பரஞ்சோதியுடன் வந்தவர்



களையும் அழைத்துக்கொண்டு, முன்னால் விரைந்து சென்றார்கள்.

சாரதி கண்ணபிரான் குதிரைகளின் தலைக்கயிற்றை லாகவமாக ஒரு குலுக்குக் குலுக்கியதும், ரதமும் அங்கிருந்து நகர்ந்தது.

கோட்டை வாசலின் கதவுகள் மீண்டும் சாத்தப்பட்டன. சிறிது நேரம் ஒரே கலகலப்பாயிருந்த வடக்குக் கோட்டை வாசலில் பழையபடி நிசப்தம் குடிகொண்டது.

இரண்டாம் அத்தியாயம்

பழைய நண்பர்கள்

ரதம் கோட்டையின் உள் வாசலைக் கடந்து காஞ்சிமாநகரின் அழகிய விசாலமான வீதிகளில் போகத் தொடங்கியபோது, பரஞ்சோதிக்குப் பழைய நினைவு வந்தது. எட்டு மாதங்களுக்கு முன்னால் ஒரு நாள் இதே அந்தி நேரத்தில், இதே விதமாகப் பூரணச் சந்திரன் கீழ்வானத்தில் உதயமாகிக் கொண்டருந்த சமயத்தில், தாம் தெற்குக் கோட்டை வாசல் வழியாகக் காஞ்சி நகருக்குள் பிரவேசித்ததும், அன்றிரவு நிகழ்ந்த சம்பவங்களும் அவர் உள்ளத்தில் விரைவாகத் தோன்றின. அன்று அவர் காஞ்சியில் பிரவேசித்ததற்கும் இன்று பிரவேசித்ததற்கும் எவ்வளவு வித்தியாசம்?

"தளபதி! என்ன ஒரேயடியாக மௌனத்தில் ஆழ்ந்துவிட்டீர்?" என்று மாமல்லர் கேட்டதும், பரஞ்சோதி சிந்தனை உலகிலிருந்து வெளி உலகத்துக்கு வந்தார்.

"மன்னிக்க வேண்டும், பிரபு! தங்களுடைய அன்பானது அப்படி என்னை மெய் மறக்கச் செய்துவிட்டது. தென்னாட்டிலுள்ள மல்லர்களையெல்லாம் வென்று மகாமல்லர் என்று பட்டம் பெற்ற பல்லவ குமாரனின் பக்கத்தில் சமமாக உட்கார்ந்து போவது நான்தானா என்று எனக்கே சந்தேகமாயிருக்கிறது!"

"நல்ல சந்தேகம்! உமக்குப் பக்கத்தில் உட்கார்ந்து செல்வது எனக்கல்லவா கௌரவம்! ராட்சசப் புலிகேசியின் சேனா சமுத்திரத்தை மந்திரகிரியை போல் கடைந்து கலக்கிய மகாவீரனல்லவா நீர்? வாதாபி யானைப் படையாகிய மேகத் திரளைச் சிதற அடித்த பெரும் புயற் காற்று அல்லவா நீர்?"

"பல்லவக் குதிரைப் படையின் சாகசச் செயல்களின் புகழ் காஞ்சி வரையில் வந்து எட்டியிருக்கிறதா?" என்று தம் முடைய புகழைப் படையின் புகழாக மாற்றிக் கூறினார் தளபதி.

"ஏன் எட்டவில்லை? வாரந்தோறும் சக்கரவர்த்தி அனுப்பிய ஓலைகளிலிருந்து நீர் தலைமை வகித்த குதிரைப் படையின் வீரச் செயல்களையெல்லாம் அவ்வப்போது தெரிந்துகொண்டோம். தெரிந்த விவரங்களைப் பறையறைந்து நாடு நகரமெல்லாம் தெரியப்படுத்தினோம்!" என்றார் மாமல்லர்.

"ஆஹா! தங்களுடைய அன்பினால் எப்படி மெய்ம்மறந்து போனேன், பார்த்தீர்களா? சக்கரவர்த்தி கொடுத்த ஓலையைத் தங்களிடம் கொடுக்க மறந்துவிட்டேன்!" என்று கூறிக்கொண்டே பரஞ்சோதி இடுப்பில் பத்திரமாகச் செருகியிருந்த ஓலைக்குழாயை எடுத்துக் கொடுத்தார்.

"தளபதி! இது சக்கரவர்த்தி கொடுத்த ஓலைதானே? எங்கேயாவது வழி நடுவில் ஓலை மாறிவிடவில்லையே?" என்று மாமல்லர் சிரித்துக்கொண்டே கேட்டார்.

"அந்த வரலாறு கூட தங்களுக்குத் தெரியுமா?" என்று பரஞ்சோதி கூறிய போது அவருடைய முகத்தில் மலர்ந்த புன்னகையில் நாணமும் கலந்திருந்தது.

"ஆமாம். தெரியும்! நீர் இங்கிருந்து போகும் வழியில், வஜ்ரபாஹுவைச் சிநேகம் செய்துகொண்டது முதற்கொண்டு, எல்லாம் எனக்குத் தெரியும்...!" என்றதும், இரண்டு பேருமே கலகலவென்று நகைத்தார்கள்.

மாமல்லர் மேலும் தொடர்ந்து கூறினார்: "சக்கரவர்த்தி எட்டு மாதத்துக்கு முன்பு இங்கிருந்து கிளம்பியபோது,

'நானும் வருவேன்' என்று எவ்வளவோ பிடிவாதம் பிடித்தேன். சக்கரவர்த்தி அதை உறுதியாக மறுத்துவிட்டார். அப்படியானால் வாரா வாரம் போர்க்களத்தில் நடப்பதையெல்லாம் விவரமாக எழுதியனுப்ப வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன். அந்தப் படியே சக்கரவர்த்தி எழுதி அனுப்பி வருகிறார். தளபதி! இன்றைக்குத்தான் நான் உம்மை முதன் முதலில் பார்க்கிறேன். ஆனாலும், நீர் எனக்குப் புதியவர் அல்ல; சக்கரவர்த்தி அனுப்பி வந்த ஓலைகளின் மூலமாக உம்முடன் சென்ற எட்டு மாதமும் பழகி வந்திருக்கிறேன். உம்மை இன்று பார்த்ததும், புதிய மனிதராகவே எனக்குத் தோன்றவில்லை. வெகு காலம் பழகிய சிநேகிதராகவே தோன்றியது...!"

"பிரபு எனக்கும் அப்படியேதான் தோன்றுகிறது. கிளிப் பிள்ளையைப் போல் தாங்கள் சொன்னதையே திருப்பிச் சொல்வதாக நினைக்க வேண்டாம். உண்மையில் அப்படித்தான். ஏனென்றால், சென்ற எட்டு மாதத்தில் சக்கரவர்த்தி தங்களைப் பற்றி ஏதாவது பேசாத நாளே கிடையாது. அதனால், எனக்கும் தாங்கள் புதியவராகவே தோன்றவில்லை."

குமார சக்கரவர்த்தி பரஞ்சோதியின் கரங்களை இறுகப் பிடித்துக்கொண்டு, "தளபதி! அப்படியானால் நாம் இருவரும் பாக்கியசாலிகள்தான். தெய்வப் புலமைத் திருவள்ளுவரின் வாக்கு நம் விஷயத்தில் முற்றும் உண்மையாயிற்று.

புணர்ச்சி பழகுதல் வேண்டா
உணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும் *

என்று தமிழ்மறை சொல்லுகிறதல்லவா? திருக்குறள் ஆசிரியருக்குப் பொய்யாமொழிப் புலவர் என்ற பட்டம் முற்றும் பொருத்தமானது!" என்று உற்சாகமாகக் கூறினார்.

அதற்குப் பரஞ்சோதி, "பல்லவ குமாரரே! மன்னிக்க வேண்டும். நான் கல்வி அறிவு என்பதே இல்லாதவன். பள்ளிக்கூடத்தின் நிழலில் கூட ஒதுங்காதவன். திருவள்ளுவரையும் அறியேன்; அவருடைய திருக்குறளையும் அறியேன். எனக்குக் கல்வி புகட்டும் பொறுப்பைச் சக்கரவர்த்தி தங்களுக்கு அளித்திருக்கிறார். ஓலையைப் படித்துப் பார்த்தால் தெரியும்" என்றார்.

இந்த வார்த்தைகள் குமார சக்கரவர்த்திக்குச் சிறிது கூச்சத்தை உண்டாக்கின. "அதற்கென்ன, தளபதி! சக்கரவர்த்தியின் கட்டளை எதுவானாலும் சந்தோஷமாக நிறைவேற்றி வைக்க நான் கடமைப்பட்டவன்..." என்று அவர் சொல்லி முடிப்பதற்குள், தளபதி பரஞ்சோதி, "ஆனால், எனக்குக் கல்வி கற்பிக்கும்படி சக்கரவர்த்தி தங்களுக்கு ஆக்ஞை இட்டிருப்பது என்னுடைய நன்மைக்காக அல்ல; தங்களுடைய நன்மைக்காகத்தான்!" என்றார்.

மாமல்லர் ஒன்றும் விளங்காமல் பரஞ்சோதியின் முகத்தை ஏறிட்டுப் பார்க்க, அவர் மேலும் கூறுவார்; "ஆம்! பிரபு! தங்களிடத்தில் எல்லா நல்ல குணங்களும் இருக்கின்றனவாம்; ஆனால், பொறுமையும் நிதானமும் மட்டும் குறைவாம். எனக்குக் கல்வி புகட்ட ஆரம்பித்தீர்களானால், உங்களுக்கும் பொறுமை வந்து விடுமாம்! என்னுடைய அறிவுக் கூர்மையில் சக்கரவர்த்திக்கு அவ்வளவு நம்பிக்கை!" என்றதும், மாமல்லர் குபீரென்று சிரிக்க, அதைப் பார்த்துப் பரஞ்சோதி சிரிக்க, இருவரும் சிரிப்பதைப் பார்த்து, அடக்கி அடக்கிப் பார்த்தும் முடியாமல் சாரதி கண்ணபிரானும் சிரிக்க, இந்தக் கோலாகலம் என்னத்திற்கு என்று தெரியாமல் ரதத்தை இழுத்துச் சென்ற குதிரைகளும் கனைத்தன.

குதிரைகள் தங்களுக்குச் சுபாவமான இனிய குரலில் கனைப்பதைக் கேட்டு, மறுபடியும் ஓர் ஆவர்த்தம் மூவரும் சிரித்தார்கள்.

(தொடரும்)

*** சாதாரணமாக ஒருவரையொருவர் அடிக்கடி சந்தித்துக் கலந்து பழகுவதனால் நட்பு உண்டாகி வளருகிறது. ஆனால், இரண்டு பேருக்குள் ஒத்த உணர்ச்சி இருக்கும் பட்சத்தில், மேற்சொன்னவாறு கலந்து பழகுதல் இல்லாமலே நட்பாகிய தலைசிறந்த உறவு ஏற்பட்டு விடும்.**

தஞ்சாவூர் குந்தவை நாச்சியார் அரசினர் மகளிர் கல்லூரியின், இறுதியாண்டு வேதியியல் மாணவி மு. ஜரினா பேகம்தான் இந்த வாரக் கல்லூரி வைரம்! வெகுஜனப் பத்திரிகைகளில் கவிதை, சிறுகதை, ஜோக்ஸ், துணுக்குகள் எழுதி, அடிக்கடி கல்லூரியின் அறிவிப்புப் பலகையில் இடம் பிடிக்கும் ஜரினாவுக்கு மூன்று பக்கங்களை ஒதுக்கித் தந்ததுதான் தாமதம்.. விறுவிறுவென்று பேனா மையைக் காலி செய்துவிட்டார்!



''படு பிஸியான ஹீரோ, டைரக்டருக்குப் பேரீச்சம் பழம் வாங்கித் தர்றாரே...ஏன்?''


''புதுப்படத்துக்கு டைரக்டர் 'டேட்ஸ்' கேட்டார்!''



ஹையா... ஹைகூ!

காதல் கடிதங்கள் விழுவதால்
வெட்கிச் சிவந்தது
அஞ்சல் பெட்டி!

திருமணத் தகவல் மையம்
வேலைபார்க்கிறாள் நீண்ட காலமாய்
முதிர்கன்னி!



"நம்ம கஜலட்சுமி எல்லார்கிட்டேயும் நல்லா பழகுவா!"

"அப்ப அவளை சகஜலட்சுமின்னு சொல்லு!"

கல்கி-60

கல்லூரி வைரம்



ஜரினா சொன்னா சரி!

மாவட்ட அளவில் கல்லூரி
மாணவ மாணவிகளுக்கான
கவிதைப் போட்டியில் முதல்
பரிசு பெற்ற கவிதை!

ரத்த தானம்

• விசால இதயத்தின்
விலாசம்;
மொட்டவிழ்ந்த நேசத்தின்
முகவரி;
மரணத்தைத் தள்ளிப்போடும்
மந்திரம்;
மதபேதம் பார்க்காத
மகத்துவம்!

• சங்கரின் ரத்தம்
சலீமுக்குப் பொருந்தலாம்;
சாமுவேல் ரத்தத்தை
சர்தார்ஜி ஏற்கலாம்!

• 'ஓ' பிரிவு
ஒத்துவரும்
அனைவருக்கும்;
'ஏபி' பிரிவோ
ஏற்றுக் கொள்ளும்
எவர் கொடுத்தாலும்!

• மழையும் காற்றும் மரசேவை;
வானவில் ஜாலம் நிறசேவை;
ஸரிகம பதநி ஸ்வரசேவை;
ரத்த தானமோ உயிர்சேவை!





ஜரினாவின் தலையங்கம் அடுத்தப் பக்கத்தில்...

கல்லூரி வைரம்

ஜரினாவின் தலையங்கம்

குருவித் தலையில் பனம்பழம்

நிதிப்பற்றாக்குறைதான் என்றில்லை. கொள்கை முடிவுகள் எடுப்பதிலும் கூட அ.தி.மு.க. அரசுக்கு அறிவுப் பற்றாக்குறையும் ஒரு பிரச்னை. இதற்கு சமீபத்திய உதாரணம் ஐந்தாம் வகுப்பு முதலே அரசுத் தேர்வு என்ற அறிவிப்பு! போதிய ஆசிரியர் நியமனங்கள் இல்லாததால், அறுபதுமுதல் எண்பது மாணவர்களை ஒரே வகுப்பில் கட்டி மேய்க்கிறார்கள் நமது பாவப்பட்ட ஆசிரியர்கள். வறுமை நிமித்தமாக மதிய உணவுக்காகவே கூட பள்ளிக்கூடம் வரும் ஏழை மாணவர்கள் இன்றும் நிறைந்திருக்கும் கிராமங்கள் நம் தமிழகத்தில் அதிகம். வறுமையை முதலில் ஒழிப்பதைவிட்டுவிட்டு, கல்வித் தரத்தை உயர்த்துகிறேன் பேர்வழி என்று ஐந்தாம் வகுப்புமுதல் அரசுத் தேர்வு என்பது, குருவித் தலையில் பனம் பழம் மாதிரி அபத்தமோ அபத்தம். கவிஞர் வைரமுத்து சொல்வதைப் போல உயர்நிலைப் பள்ளிவரை தேர்வுகளற்ற கல்விமுறைதான் இப்போதைய தேவை!



ஓவியங்கள் : செல்வா 2K

"இங்கே நான் கழுதை மாதிரி கத்தறேன்... கிச்சன்லே நீ என்ன பண்றே?"
'உங்களுக்காக ஸ்பெஷலா பேப்பர் ரோஸ்ட் செஞ்சுக்கிட்டிருக்கேன்!"





"அந்த 'மெகா சீரியல்' டைரக்டர் சீரியஸா இருக்கார்னு சொன்னாங்களே... இப்ப எப்படி இருக்கு?"
"இன்னும் 'இழுத்துகிட்டே'தான் இருக்கு!"

"மாற்றமில்லை; ஏமாற்றமில்லை!"

ஹரிப்ரியா ரங்கராஜன். இதுநாள்வரை தமிழக கவர்னராக கூடுதல் பொறுப்பு வகித்து வந்த ஆந்திரா கவர்னரான டாக்டர் ரங்கராஜனின் துணைவியார். பேச ஆரம்பித்த சில நிமிடங்களிலேயே, வெகு காலம் பழகியது போன்ற நெருக்கத்தை உணர வைத்து விடுகிற சுபாவம். ஹைதராபாத்தில், ராஜ்பவனில் அவரைச் சந்தித்தோம்.

கணவர் ரங்கராஜன், உலகறிந்த பொருளாதார நிபுணர். அவரது துணைவியாரோ, ஆன்மிக ஆராய்ச்சியாளர். பல்கலைக் கழகங்களிலும், ஆன்மிக அமைப்புகளிலும் வைணவம் பற்றி சொற்பொழிவுகள் ஆற்றுகிறார். இவரது புத்தகம், மிகச் சிறந்த ஆராய்ச்சி நூலாக விருது பெற்றிருக்கிறது.

"எனக்கு சொந்த ஊர் வேலூர். அப்பா பிரபல வக்கீல் என்பதால், ஜட்ஜ் குடும்பம் ஒன்றிலிருந்து வரனை எனக்குப் பிடித்தார். எங்கள் திருமணத்தின்போது ரங்கராஜன் அமெரிக்காவில் படிப்பை முடித்துவிட்டு வந்திருந்தார். திருமணத்துக்குப் பின் இரண்டு வருட அமெரிக்கா வாசம். அதன்பின் இந்தியாவில் செட்டிலாகி விட்டோம்.



"அவர், அகமதாபாத் இண்டியன் இன்ஸ்டிடியூட் ஆப் மேனேஜ்மெண்ட்டில் புரொபஸராகச் சேர்ந்தார். எனக்கு, சிறு வயது முதலே வரலாறு பிடித்த பாடம். எனவே குஜராத்தில் முதுகலை (வரலாறு) படித்தேன். ஆசிரியை வேலை பார்க்கும் எண்ணத்துடன் அதற்கும் பயிற்சி பெற்றேன். அந்தக் காலகட்டத்தில், நான் குஜராத் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் பயணம் செய்தேன். ஒவ்வொரு இடத்திலும், மிகவும் வித்தியாசமான மகாவிஷ்ணுவின் உருவங்களைக் கண்டு அதிசயித்துப் போனேன். 'ஜுனாகட்' என்ற இடத்தில் நான்கு முகங்களும், இருபது கரங்களும் கொண்ட சௌம்ய சொரூபத்தில் மகாவிஷ்ணுவைப் பார்த்தபோது, மெய்சிலிர்த்துப் போனேன்.

மகாவிஷ்ணு குறித்து நான் திரட்டிய தகவல்களின் அடிப்படையில் என் முதல் புத்தகத்தை எழுதினேன். எனது இரண்டாவது புத்தகம் ராமானுஜரைப் பற்றியது. மூன்றாவது புத்தகம் மகாவிஷ்ணுவின் வராக அவதாரம் குறித்தது.

வழக்கமாக தெற்கே, வராக அவதாரத்தை மனித உடலும், பன்றி முகமும் கொண்டுதான் சித்திரித்திருக்கிறார்கள். ஆனால், குஜராத், மத்தியப் பிரதேசம் போன்ற பகுதிகளில், முழுமையாக பன்றி உருவிலேயே மகாவிஷ்ணுவின் உருவத்தைச் செதுக்கியிருக்கிறார்கள். அந்த வராக உருவத்தின் முதுகிலும் மற்ற பகுதிகளிலும் காணக் கிடைக்கும் தெய்வீக சிற்பங்களும், சிந்தனைகளும் அற்புதமானவை'' என்று ஆர்வமாய் விவரித்தார் ஹரிப்ரியா ரங்கராஜன்.

கணவர் அடைந்த பெரிய பதவிகள், பட்டங்கள், இதனால் எல்லாம் சிறிதும் பாதிப்படையாத நிறைவான வாழ்க்கை வாழ்வதைக் குறிப்பிட்டார்.

"பதவி, பேர், புகழ், அதிகாரம் எல்லாமே புற வாழ்க்கை சம்பந்தப்பட்டவை. அவை எதுவும் நம்மோடு வரப்போவது இடையாது. இருக்கிறவரை நல்ல ஆத்மாக்களாக இருக்க வேண்டும் என்பதுதான் ரொம்ப முக்கியம். நாளைக்கே, இவரை ஜனாதிபதியாக நியமித்தாலும் நாங்கள் சந்தோஷப் பட மாட்டோம்; 'உங்கள் கவர்னர் பதவி இன்றோடு முடிந்தது' என்று சொல்லி அனுப்பி வைத்தாலும் நாங்கள் வருத்தப் பட மாட்டோம். அந்த அளவு மனப் பக்குவத்தை ஆண்டவன் எங்களுக்குக் கொடுத்திருக்கிறான்!"

படம், சந்திப்பு: மானஸா

'நான், நீ' என்று போட்டி போட்டுக் கொண்டு, திடீரென்று மும்பைக்குச் சேவை செய்ய ஒரு படையே திரண்டு நிற்கிறது. பி.எம்.சியின் வருடாந்தர பட்ஜெட் 5000 கோடி என்றால் சும்மாவா? அதில் நகர சேவகர்களாய்ப் பணி புரிந்தே, 'க்ரோர்பதி' ஆகிவிட முடியாதா என்ன? சிவசேனைக்குள் தடாலடி போட்டி; தில்லியிலிருந்து முன்னாள் முதல்வர் மனோகர் ஜோஷி, பறந்து வந்து சமரசம் செய்யுமளவுக்குப் போய்விட்டது. உதவ் தாக்கரே, (பால்தாக்கரே மகன்) வாய் கொள்ளா சர்க்கரையுடன் நைச்சியமாகப் பேசியும், ஒரு சிலரைத்தான் அவிழ்த்துக்கொண்டு ஓடாமல் கட்சியுடன் கட்டிப் போட முடிந்தது! பலரை, 'போனால் போகட்டும் போடா' பாடி வழியனுப்ப வேண்டிய நிர்ப்பந்தம். காங்கிரஸ், சமாஜ்வாதி போன்ற கட்சிகளுக்கு, போலீஸ் ரெகார்ட் இல்லாத, இரண்டு குழந்தைகளுக்கு மேல் பெறாத, வேட்பாளர்களைத் தேடுவதிலேயே பாதி உயிர் போய்விட்டது. ஆனால் 'லோக் தாந்த்ரிக்' கட்சியைப் பாருங்கள் - (பேரையே கேட்டதில்லையே என்கிறீர்களா?) - 'தில்'லாக இரண்டு அலிகளைத் தேர்தல் களத்தில் இறக்கி விட்டது. அந்தேரி தொகுதியிலிருந்து தேர்வாகியுள்ள அன்சாரி முன்னி,



ஏதாவது வித்தியாசமாகச் செய்வார் என்று எல்லோரும் எதிர்பார்க்கிறார்களாம்! மலாடில் நிற்கும் ருக்ஸானா பானு, தம்மை 'பயங்கரப் பாப்புலர்' என்று சொல்லிக் கொள்கிறார். "இந்தப் பகுதியிலுள்ள கடைக்காரர்களெல்லாம், இதுநாள் வரை நான் சாப்பிட்ட டீ, பான், வகையறாக்களுக்கு ஒரு பைசா கூட வாங்கியதில்லை தெரியுமா?" என்று மார் தட்டுகிறார்! ஆஹா... அரசியலில் இறங்க, போதாதா இந்த ஒரு தகுதி?

தகுதி அடிப்படையில் முடிவு செய்யத்தான் நேர்முகத் தேர்வு என்பது உண்மைதான். ஆனாலும், எல்.கே.ஜி அட்மிஷனுக்கேவா இந்தப் பாடு படுத்துவார்கள்? "சிங்கத்தின் பிடரிக்கு என்ன பெயர்? 'ஜூ'வில் ஏன் விலங்குகளைக் கூண்டில் அடைத்து வைக்கிறார்கள்? எந்த வகை ஆடைகளை, வெயிற்காலம், மழைக் காலம், குளிர்காலம் போன்ற பருவங்களில் அணிய வேண்டும்? இந்தியப் பிரதமர் யார்? ரோட் சிக்னல்கள் நமக்கு எதைத் தெரிவிக்கின்றன?" -இவை எல்லாம், மூன்று வயது நிரம்பாத சில மும்பை வாண்டுகளிடம், பள்ளிகளில் கேட்கப்படும் கேள்விகள். அதிகாரிகள் இது பற்றி என்ன சொல்கிறார்கள் தெரியுமா? "இரு நூறு ஸீட்டுகளுக்கு ஈராயிரம் அப்ளிகேஷன்கள் வந்தால், நாங்கள் எப்படித்தான் தேர்வு செய்வதாம்?"

தேர்வு செய்வதற்குப் புதிதாக ஒரு வழியைக் கண்டு பிடித்திருக்கிறார்கள், நாக்பூரின் காங்கிரஸ் பெருந்தலைகள். "பள்ளியறைக்கு வந்தால், மாநகராட்சி அறையில் உங்களை உட்கார வைப்போம்" என்கிறார்கள், வேட்புமனு தாக்கல் செய்த பெண் வேட்பாளர்களிடம் தொலைபேசியில் வரும் இந்தக் கன்றாவி மிரட்டல்களை எல்லாம் மீடியாக்காரர்களிடம் போட்டு உடைத்து விட்டார் மஹிளா காங்

நடிப்புத் திலகம் வாஜ்பாய்

கிரஸ் தலைவியான கல்பனா பூல்பந்தி. இது காங்கிரஸ் வட்டாரத்தில் பெரும் புழுதியைக் கிளப்பியிருக்கிறது. வழக்கு, மராத்திய மகளிர் கமிஷன் தலைவியான நிர்மலா சாமந்திடம் வந்திருக்கிறது. 'இரு தரப்பினரையும் அழைத்து, தீர விசாரிப்போம்' என்கிறார். எப்படி இருக்கப் போகிறதோ முடிவு?

முடிவேயில்லாதது என்று நினைத்ததுகூட முடிந்துவிட்டதே? கேபிசி ஷோவைத்தான் சொல்கிறோம். தமக்குப் புத்துயிர் ஊட்டிய 'க்ரோர்பதி 'ஷோ'வுக்கு 'சுபம்' போட்டு விட்டாலும் நிகழ்ச்சியின் மத்தியில் தாம் உதிர்த்த பொன்மொழிகள், அறிவுரைகள், பிரத்யேகச் சொற்றொடர்கள் எல்லாவற்றையுமே தொகுத்து, 'அமிதாப் கா கஜானா' என்றொரு புத்தகத்தை வெளியிட்டிருக்கிறார் பச்சன்; அதைத் தன் 'அச்சனு'க்கே அர்ப்பணித்

திருக்கிறார். ஆனால், ஸ்டாரின் சமீர் நாயர், "டோண்ட் ஒர்ரி, ஜுலையிலிருந்து, புதுமையான ரூபத்தில் கேபிசி ஷோ வரும்" என்கிறார். எதிர் பார்த்திருப்போம்...



எதிர்பார்த்திருப் போமா என்ன? நம் பிரதமர், ஒரு மியூசிக் வீடியோவில் நடிக் கப் போகிறார் என் பதை? ப்ரியதர்ஷன் இயக்கத்தில், நௌ ஷாத் இயற்றி, ஹரி ஹரன் குரலில் ஒலிக் கப் போகும் இந்தப் பாட்டு, 'உன்கி யாத் கரேன்' என்ற பிரத மரின் கவிதையை அடிப்படையாகக் கொண்டது. மஹா ராஷ்ட்ராவிலுள்ள ஜல்கானைச் சேர்ந்த 'கேசவ் கம்யூனி கேஷன்ஸ்' என்ற கம் பெனி, அவர் கவிதை களின் உரிமையை வாங்கி யிருக்கிறது. பிரதமரிடம் பேசி, ஒரு நாளில் இரண்டு மணி நேரத்தை இவர்களுக்கென்று ஒதுக் கவும் அனுமதி வாங்கிவிட்டார்களாம். பாடல் முழுவதும், பிரதமர் எழுதிக் கொண் டிருப்பதையும், இடை இடையே, தேசியக் கொடியை விற்றுக் கொண்டிருக்கும் ஒரு சிறு மியின் சுக துக்கங்களையும், மாறி மாறிக் காட்டுவார்களாம். கடைசியில் ஒரு கொடியைப் பிரதமரிடமே சிறுமி கொண்டு நீட்டுவதாக காட்சி முடிகிறதாம். நயமான கற்பனை!

கற்பனை அல்ல; நிஜம்... சாதாரணமாக நாட்டியமெல்லாம் இளங் குமரிகள் ஆடினால்தானே சுவாரஸ்யம் தட் டும்? செம்பூர் ஃபைன் ஆர்ட்ஸ்காரர்கள் நடத் திய பொங்கல் விழாவில், கனகசபா நாட்டிய அமைப்பிலிருந்து பல கிராமிய நாட்டியங்கள் அரங்கேறின. இளம் பெண்கள், கோலாட்டம், காவடி ஆட்டம், குறவஞ்சி என்று அழகாகத் தான் ஆடினர். ஆனால் எக்கச்சக்கமான கைபொலி கிடைத்தது இரண்டுக்குத்தான் - முதலாவது, நான்கு வயதுக்கும் குறைந்த சிறு மியர் ஆர்வத்துடன் ஆடிய அறுவடை நடனம் (ஒன்றின் கரும்பை மற்றொரு வாண்டு தவறு தலாக எடுத்துக் கொள்ள, இது அதைப் பற்றி இழுக்க, ஒரே தமாஷ்தான்) இரண்டாவது - குறைந்த பட்சம் நாற்பது ப்ளஸ் வயசில் ஆரம் பித்து, எவ்வளவோவில் முடிந்த பெண்கள் ஆடிய கும்மி! திருமதி புஷ்பாவின் கோரியோ கிராஃபியை மெச்சத்தான் வேண்டும் - ஆட்டத்துக்கு வயசு ஒரு தடையில்லை தான்!

- ஜெயஸ்ரீ ராஜ்




அமரர் கல்கி 'ஏட்டிக்குப் போட்டி' கட்டுரைத் தொகுப்பில் இப்படி எழுதினார்.

''ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது' என்பது பழமொழி. ஐந்தில் வளைப்பவர் - ஆரம்பப் பள்ளி ஆசிரியர். அவர் கோணலாய் வளைத்து விட்டால் வாழ்க்கை பூராவும் கோணல் தான். நாட்டின் வருங்காலப் பிரஜைகள் வளருமிடம் ஆரம்பப் பள்ளிகள். தேச மக்கள் தீரம் மிகுந்த ஆண் சிங்கங்களாய் விளங்குவதும், கோழைத்தனம் வாய்ந்த அடிமைகளாயிருப்பதும் ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களின் கை வேலையே ஆகும். நான் இத்தனை சக்கர வட்டமாக எழுதுவதெல்லாம் ஓர் ஆரம்பப்பள்ளி ஆசிரியரின் அருளினால் தான். அவர் இருக்கும் திக்கு நோக்கி தண்டம் சமர்ப்பிக்கிறேன்!''

அவர் மானசிகமாய் தண்டம் சமர்ப்பித்துக் கொண்டிருந்த திக்கு வேறெதுவுமில்லை. அவர் பிறந்த கிராமமான புத்தமங்கலம் - மணல்மேடு திண்ணைப் பள்ளியும், மாயூரம் நகரசபைப் பள்ளியுமே ஆகும். எழுத்துலகில் கல்கியின் பன்முகச் சிறப்புக்கு பால காலப் பருவத்தில் அஸ்திவாரம் போட்டவர் ஆசிரியர் அய்யாசாமி அய்யர். மாயூரம் நகரசபைப் பள்ளியில் மூன்று ஆண்டுகள் கல்வி பயின்றுள்ளார் கல்கி. அவரது நினைவைப் போற்றும் வகையில் 'அமரர் கல்கி நூற்றாண்டு விழா' கட்டடம் கட்டப்பட்டுள்ளது.





மயிலாடுதுறை தியாகி ஜி. நாராயணசாமி நகராட்சி மேனிலைப்பள்ளிக்கு வயது நூற்று இருபத்து ஐந்து!

நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு

முன்பு தலைமை ஆசிரியராக இருந்த எஸ். சேஷகிரி அய்யர் என்பவர், மாணவர்களைச் சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்வதில் அலாதியான ஆர்வம் உள்ளவராம்.

முப்பது மாணவர்களை, சில ஆசிரியர்களுடன் தாமே தலைமையேற்று சுற்றுலாவுக்கென அழைத்துச் சென்று காட்டிவிட்டுத் திரும்பிய தேசம் இலங்கை. அவர்கள் கொழும்பில் கால் பதித்தபோது, அங்கு மிக மோசமான வெள்ளப் பெருக்கு. இங்கு மயிலாடுதுறையில் இருக்கும் பிள்ளைகளின் பெற்றோர்களோ, இலங்கையின் வெள்ள அபாயச் செய்தி கேள்விப்பட்டு, துடி துடித்துப் போயிருந்தனர். தலைமை ஆசிரியர் சேஷகிரி அய்யர் சமயோசிதமாய் ஒரு காரியம் செய்தார். கொழும்பு வானொலி நிலையம் சென்று தங்களது நிலைமையை விளக்கி, மாயவரத்து மாணவர்கள், இலங்கையில் பத்திரமாக இருக்கும் தகவலை, சிலோன் வானொலிச் செய்தியில் இடம் பெறச் செய்து விட்டாராம். அதைக் கேட்டதும் பெற்றோர்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டனராம்.

பெருமைமிகு பள்ளி!

இப்பள்ளியில் படித்த வி.ஐ.பிகளின் பட்டியல் நீள்கிறது. தமிலன், பகீரதன், சா. கந்தசாமி, கே.எஸ்.வெங்கட்ரமணி போன்ற எழுத்தாளர்களும் டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி, பேராசிரியர் க. அன்பழகன், முன்னாள் தலைமைச் செயலர்களான சொக்கலிங்கம், எம்.எம். ராஜேந்திரன் மற்றும் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளான எஸ். நடராஜன், கே. வெங்கட்ராமன், ஆர். நடராஜன் ஆகியோரும் இப்பள்ளியில் பயின்ற மாணவர்களே.

மகாத்மா காந்தி தமிழக வருகையின்போது மாயூரம் நகரசபைப் பள்ளிக்கு வந்து தங்கிவிட்டுச் சென்றதை இப்பொழுதும் பெருமையுடன் நினைவு கூர்கிறது பள்ளி நிர்வாகம்.

— ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

தமிழ்த்தாய் வாழ்த்தா... அப்படீன்னா?



✱ அமைச்சர் தம்பிதுரை

சமீபத்தில் கரூர் வந்திருந்த கல்வி அமைச்சர் தம்பிதுரை, 'பொது நிகழ்ச்சிகளில் தமிழ்த்தாய் வாழ்த்து மற்றும் நாட்டுப்பண் ஆகியவற்றை டேப் மூலம் ஒலிபரப்பக் கூடாது; நிகழ்ச்சியில் கலந்து கொள்பவர்களே பாட வேண்டும்' என்று வாய்மொழி உத்தரவாகக் கூறியிருந்தார். தற்போது இது எழுத்து வழி உத்தரவாக அரசு அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இந்த உத்தரவு நடைமுறையில் எவ்வளவு பெரிய சிரமமான காரியம் என்பது திருச்சி மாநகர காவல்துறையினர் நடத்திய 'சாலை பாதுகாப்பு வார விழா'வில் வெட்ட வெளிச்சமாகியது.

கல்லூரி மாணவர்கள் பலரும் கலந்து கொண்ட அவ்விழாவில், 'தமிழ்த்தாய் வாழ்த்து' என நிகழ்ச்சி அறிவிப்பாளர் கூறியதும் பேராசிரியர்கள் இருவர் எழுந்து சென்று "நீராடுங் கடலுடுத்த .... ' எனத் துவங்கி மூன்று வரிகள் மட்டுமே பாடி விட்டு அடுத்த வரிகள் நினைவுக்கு வராமல் தடுமாறி நின்றனர். மாணவர்கள் மத்தியில் சிரிப்பலை எழுந்தது.

தமிழ்த்தாய் வாழ்த்து 'சொதப்பப்பட்டதாலோ' என்னவோ, நகரின் மிக முக்கிய அதிகாரிகள் கலந்து கொண்ட இவ்விழாவின் இறுதியில் நாட்டுப் பண் பாடப்படவே இல்லை!


— இருள் நீக்கியான்

ஒத்திகை

காஞ்சனா தாமோதரன்

வானவில் தாங்கிய சோப்புநுரைக் குமிழ் மிதந்து மேலேறியது. துரத்திப் பிடிக்கலாமா? வேண்டாம். சோப்பு நீர் தோய்ந்த 'ஸ்பாஞ்ச்'சினால் கார் தேய்ப்பதைத் தொடர்ந்தாள் 'அனுகா. கார் ரேடியோ கத்திப் பாடிக் கொண்டிருந்தது.

ஒரு டாலர் கொடுத்தால் தானியங்கி இயந்திரம் ஐந்தே நிமிடத்தில் காரைக் கழுவி விடும். மனமில்லை. ''வெளியே குளிரவில்லை. என் காரை நானே கழுவப் போகிறேன்'' என்று ஆரம்பித்த வேலை. வாளியில் சோப்பு நீர். முழங்கை வரை இழுத்து விட்ட ப்ளாஸ்டிக் கையுறைகள். வீட்டு முன் நிறுத்திய குட்டிக் காரைக் கழுவும் போது ஒரு பெருமிதம். 'என் உழைப்பில் வாங்கியது'. செல்லமாய்க்



காரைத் தட்டிக் கொடுத்தாள். இன்னும் கொஞ்சம் குமிழ்கள் மேலே பறந்தன.

மனமும் அப்படியே மிதப்பது போலிருந்தது. ஆலன் பற்றி அம்மாவிடம் சொல்ல வேண்டும். எப்படிச் சொல்வது. 'மாம், எனக்கு ஆலனைப் பிடிக்கிறது. அவனுக்கும் என்னைப் பிடிக்கிறது. நாங்கள் இரண்டு பேரும் சேர்ந்து வெளியே போகலாமா?' இப்படிக் கேட்க முடியுமா என்ன.

ஆலனைப் பற்றி நினைத்துப் பார்த்தாள். ஆஸ்பெனில் ஆலனுடன் பனிச்சறுக்கும்போது ஏற்பட்ட படபடப்பு. அதற்குப் பின் வந்த தொலைபேசித் தொடர்புகள். கலாச்சார விழா பாட்டுத் தயாரிப்பின்போது, ஆலன், மின்னி, பவனுடன் கழித்த உற்சாக நாட்கள். ப்ரெய்ரீ புல்வெளியின் காற்றோடு காற்றாக அவன் சொன்ன 'நீ முக்கியமானவள்'. ஆலனை நினைக்கும்போது மனதுக்குள் பொங்கி வழியும் நிறைவின் சிலிர்ப்பு. எல்லாவற்றையும் கூட்டிப் பார்த்தால், ஆலனுக்கும் அவளுக்கும் இருப்பது என்ன உறவு.

இதை எப்படி அம்மாவிடம் சொல்வது. அம்மாவுக்கு முறையான 'டேட்டிங்' அனுபவம் கிடையாது. அப்பாவைக் காதலித்தாள். அப்பாவைக் கல்யாணம் பண்ணிக் கொண்டாள்.

காதலுக்கும் நட்புக்கும் இடையே ஓர் இரண்டுங்கெட்டானை அம்மாவால் ஏற்றுக் கொள்ள முடியுமா? அப்பா பற்றிக் கவலை இல்லை.. இல்லை, இல்லை, அப்படியும் சொல்லிவிட முடியாது. அலிஸ்ஸா தன் பாய்ஃப்ரெண்ட் பற்றிச் சொன்னதும் அவன் அப்பா கோபப்பட்டுக் கத்தினாராமே. ஒருவேளை, இது கலாசாரம் பற்றிய விஷயமே இல்லையோ? கடவுளே, என்னைக் காப்பாற்று.

முழங்காலிட்டபடி, கார் டயரைத் தேய்க்கத் துவங்கினாள். நடுத் தகட்டின் மேல் வழிந்த சோப்பு நுரையை வழித்துப் போட்டதும், அதில் அம்மாவின் பிம்பம் தெரிந்தது. அகன்ற வாசல் படிகளில் உட்கார்ந்திருந்தாள் அம்மா.

''ஹாய், மாம்.'' கார் ரேடியோவை

றல்



17

அணைத்துவிட்டு, கையுறைகளைக் கழற்றிய படி அம்மா பக்கத்தில் வந்து உட்கார்ந்தாள் அனுகா. வாசல் படிகளின் மேல் ஜன வரிக்குப் பழக்கமில்லாத இளஞ்சூட்டு வெயில். ஞாயிற்றுக் கிழமையின் ஓய்வு. அம்மா குளிர்ச்சியான எலுமிச்சஞ்சாறு பிழிந்து எடுத்து வந்திருந்தாள். அப்பா தொலைபேசியில் கதையளந்து கொண் டிருக்கிறார். இப்போது வந்து விடுவார்.

"மாம், உன்னிடம் ஒன்று சொல்லலாமா?"

அம்மா மெல்லத் தலையசைத்தாள்.

"ஆலன் சேர்ந்து வெளியே போக அனுமதி கேட்டான்."

"நீ என்ன சொன்னாய்?"

"ஒன்றும் சொல்லவில்லை. உன்னிடம் பேசாமல் எப்படி...?"

"அனுகா, உங்கிட்டே இது பத்தி எப்படி பேசறதுன்னு தெரியலை. நீயா பேசட்டும்னு இருந்தேன்." அம்மா தமிழுக்கு மாறியிருந்தாள்.

"மாம், எப்படிச் சொல்றதுன்னு தெரியலை..."

காரின் மேலுள்ள சோப்பு நுரையை ஊதிக் குமிழியாக்கிப் பறத்தும் காற்று விளையாட்டைப் பார்த்துக் கொண்டிருந்தாள் அம்மா.

தமிழில் சரியாகச் சொல்லத் தெரியவில்லை. ஆங்கிலத்தில் தொடர்ந்தாள் அனுகா : "மாம், இதைக் காதல் என்று சொல்வது பைத்தியக்காரத்தனம். தெரியும். ஆனால், என் வயதில் வரும் வழக்கமான 'ஹார்மோன்' ஈர்ப்பு என்று ஒதுக்கவும் என்னால் முடியவில்லை. இப்போதைக்கு இது மிகவும் உண்மையானதாய், மிகவும் உணர்வுபூர்வமானதாய், மிகவும் இனிமையானதாய்த் தெரிகிறது."

அனுகா நிறுத்தினாள். எப்படியோ, அம்மாவிடம் சொல்லியாயிற்று. பெரிய நிம்மதி. அம்மா இன்னும் சோப்புக் குமிழிகளைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அனுகா பேச்சை மாற்றினாள். "மாம், கம்பெனி பிரெசிடெண்ட் வேலைக்குச் 'சரி' சொல்லியா?"

அம்மா முகத்தின் சிறு புன்னகை, 'கள்ளி, பேச்சை மாத்துறயா?' என்றது. "யோசிச்சுப் பாக்கணும், அனுகா. சின்ன வயசிலேருந்து நான் படிச்சதும் உழைச்சதும் இதுக்குத்தானான்னு சரியாப் புரியணும். வெளி உலகத்தைப் பாக்கணும், என் தனிப்பட்ட உலகத்தை விரிக்கணும்னு பறந்த வயசு அது. பாத்தாச்சு. வளர்ந்தாச்சு. வளர்த்தாச்சு. என்னால் உலகத்துக்கு இதுவரை ஆனது என்ன? இனி என்ன?"

அனுகா ஆச்சரியப்பட்டாள். இதுபற்றி இவ்வளவு யோசிக்கிறாளே அம்மா, ஏன்? "மாம், உன் கம்பெனிக்குப் பிரெசிடெண்ட்டாகி உனக்குச் சரின்னு படுற வழியிலே நடத்து. அதுவே உலகத்துக்குப் பெரிய வித்தியாசமாத்தான் இருக்கும். உலக பாலிட்டிக்ஸும் எகனாமிக்ஸும் புரிஞ்சுதான் சொல்றேன்." சிரித்தாள். "நானும்கூட யு.எஸ்.ஸின் முதல் பெண் ஜனாதிபதியாகி, உலகத்தை மாற்றப் போகிறேன்!"

அம்மாவும் சிரித்தாள். வெள்ளை மாளிகை விருந்துக்கு மறக்காமல் கூப்பிடச் சொன்னாள். பிறகு அவளைக் கூர்ந்து பார்த்தாள். "புரிஞ்சுதான் எதையும் நீ சொல்வேங்கிறது தெரியும், அனுகா."

அம்மா எதை நினைத்து இப்படிச் சொல்கிறாள். ஆலன் பற்றிச் சொன்னதையா.

மீண்டும் கார் சோப்பு நுரையைப் பார்க்க ஆரம்பித்தாள் அம்மா. புசுபுசுவென்று பொங்கி நின்ற நுரை மெல்லக் கரைந்து கொண்டிருந்தது. நுரைக் கூட்டத்தின் சிறு குமிழிகள் வெடித்து வெடித்துப் பல பொத்தல்கள் விழுந்திருந்தன.

"அனுகா, நானுமே உங்கிட்டே ஒண்ணு சொல்லணும். விது ஆண்ட்டியும் ரமேஷ் அங்க்கிளும் தனித்தனியா இருக்கப் போறாங்க..."

அனுகா அதிர்ந்து போனாள். விது ஆண்ட்டி அம்மாவுடனும் ராஜி



"ஒரு காரியம் நடக்கணும்னு ஆளும் கட்சி எம்.எல்.ஏ, எம்.பி, மந்திரினு பல பேர்கிட்டே சிபாரிசு கடிதம் வாங்கிப் போனேன். ஒண்ணும் நடக்கலே."

"ஆளும் கட்சிக்கு வேண்டிய ஒரு ஜோசியர்கிட்டேயிருந்து கடிதம் வாங்கிப் போ, உடனே வேலை முடிஞ்சுடும்!"

-கபிஸ்தலம். எஸ். இரா

ஆண்ட்டியுடனும் ரகசியமாகப் பேசிக் கொண்டிருந்தது இது பற்றித்தானா? "இந்தியன் அங்க்கிள், ஆண்ட்டி எல்லாம்கூட டிவோர்ஸ் பண்ணுவாங்களா?"

அம்மா கொஞ்ச நேரம் பேசவில்லை. "நூறு கோடி இந்தியர்களும் ஒரே அச்சிலே இருக்கணும்னு நினைக்கிறியா, அனுகா? இருபது கோடி அமெரிக்கர்களும் ஒண்ணு போலவா இருக்காங்க? இது அங்க்கிள், ஆண்ட்டியோட தனிப்பட்ட விஷயம். ஏதோ, மனசு ஒத்துப் போகலை போலிருக்கு..."

"இத்தனை வருஷம் கழிச்சா, மாம்? பாவம், அருணாவும் அம்பிகாக் குட்டியும்..."

அம்மா சிறிது நேர மௌனத்துக்குப்பின் பேசினாள்.

"அனுகா, நமக்கு முழு விவரமும் தெரியாது. அவசரப்படாதே. இடையிலே எத்தனையோ நிறங்கள், நிழல்கள். உறவுன்னு வந்தா சிக்கல்களும் வரலாம். எந்த வயசிலேயும்..."

அம்மா யாரை நினைத்துப் பேசுகிறாள். ஆலனையும் அவளையும் பற்றியா.

"மாம், ட்ரக்ஸ், செக்ஸ், ஆல்கஹால் இப்படி ஒரு பழங்காலத்துக் கூட்டம் என் 'ஜெனரேஷ'னிலும் இருக்கு. ஆனா, இதெல்லாம் இப்போ 'கூல்' இல்லைன்னு என்னை மாதிரி நிறையப் பேர் நினைக்கிறோம், மாம். என்னோட சில ஃப்ரெண்ட்ஸ் இதெல்லாம் இப்போ தேவையில்லைன்னு உறுதிமொழி கூட எடுத்திருக்காங்க பையன்கள், பொண்ணுங்க எல்லாருமே..."

"எங்க 'மார்க்கெடிங் டிப்பார்ட்மெண்ட்' நடத்தின பெரிய 'லைஃப் ஸ்டைல் சர்வே'யில் இதையேதான் நாங்களும் பார்த்தோம், அனுகா. உன் தலைமுறை முந்தின இரண்டு மூன்று தலைமுறைகள் கிட்டேயிருந்து வித்தியாசமாத்தான் இருக்கும். ஒரு முனைக்கு வேகமாப் போன 'பெண்டுலம்' அடுத்த முனைக்கு மெதுவாத் திரும்புதோ, என்னமோ. அதுசரி, இப்போ நாம பேச வேண்டியது உன்னைப் பத்தி..."

அனுகா மௌனமாயிருந்தாள். சொல்வதைச் சொல்லி முடித்தாயிற்று. இதற்கு மேலும் தன் சொந்த உணர்ச்சிகளை அம்மாவுடன் கூடப் பகிர்ந்து கொள்ள முடியாது.

சிறிது நேர மௌனத்துக்குப் பின் அம்மாவே தொடர்ந்தாள். "அனுகா,



"நம்ம மானேஜர், நாம தூங்கறதைக் கண்டுபிடிச்சுட்டாருன்னு எப்படிச் சொல்ற?"

"நேத்து ஸ்டாஃப் மீட்டிங்குல 'ஆபீஸை தாங்கும் தூண்களே'ன்னு பேசறதுக்கு பதிலா, 'ஆபீஸில் தூங்கும் தூண்களே'ன்னு சொல்றாரு."

- தஞ்சை மகா.

ஆலனைப் பத்தி வெளிப்படையா எங்கிட்டே பேசணும்னு நீ நினைச்சதே எனக்குப் பெரிய ஆறுதல்தான். உன் மேலே எனக்கும் அப்பாவுக்கும் உள்ள நம்பிக்கை இன்னும் அதிகமாகியிருக்கு..."

நம்பிக்கை. அப்பா - அம்மாக்களுக்குப் பிள்ளைகள் மேல் உள்ள நம்பிக்கை. அனுகாவுக்கு ஆலனின் அக்கா கதை ஞாபகம் வந்தது. நம்பிக்கை மோசடியும் சில சமயம் நடக்கத்தான் செய்கிறது.

அம்மா தொடர்ந்தாள்.

"அனுகா, உங்களுக்குப் பள்ளிக்கூடத்திலேயே உடம்பு மாற்றத்திலிருந்து எல்லாத்தையும் பத்தி முறையாச் சொல்லித் தந்திட்டாங்க. அதனால், உன் வயசிலே 'ஹார்மோன்' உண்டாக்குகிற மேலோட்டமான ஈர்ப்பா இருக்கலாமோன்னு கூட உன்னால அலச முடியுது. 'இப்போதைக்கு இது உண்மையானதா தெரியுது'ன்னு சொன்னியே..."

அனுகாவின் வார்த்தைகளை வைத்தே அவளுக்கு மறுப்புச் சொல்லப் போகிறாள் அம்மா. அவளுள் ஏமாற்றம் பரவ ஆரம்பித்தது.

அம்மா தொடர்ந்தாள் : "நீ 'இப்போதைக்கு இது உண்மை'ன்னு சொன்னது முக்கியம். அதிலே தெரிகிற தற்காலிகத்தைப் புரிஞ்சுக்கிறது முக்கியம். தீவிரமான உறவுகளுக்குள்ள புகுந்து... வெளியேறி... புகுந்து... வெளியேறி... இப்பவே இப்படி மனசு கசங்கிப் போகணுமா...? இன்னும் கொஞ்சம் மனமுதிர்ச்சி வரட்டுமே."

"மாம், ஆலன்...நான்..." அனுகாவின் குரல் விளிம்பில் அழுகை எட்டிப் பார்த்தது. அடக்கிக் கொண்டாள். "இது உனக்



"அரசியல்வாதிக்குப் பெண்ணை நிச்சயம் செய்தது தப்பாப் போச்சு?"

"இப்ப என்ன நடந்து விட்டது?"

"நிச்சயதார்த்தம் ஆவதற்கு முன்பே ஆண்டிசிபேடரி டைவர்ஸ் கேட்கிறார்!"

- கொடநகர் து. பூவராகன்

கும் எனக்கும் நடுவே உள்ள கலாசார இடைவெளியா, மாம்?" உணர்ச்சி மிகுந்ததும் ஆங்கிலம்தான் இயல்பாக வந்தது.

அம்மாவின் முகத்தில் ஏதோ ஓர் உணர்வு மின்னி மறைந்தது. "அந்தக் காலத்து அமெரிக்கன் டேட்டிங் இப்படிச் சின்ன வயசிலே தொடங்குறதில் அர்த்தம் இருந்தது. எல்லாரும் சின்ன வயசிலேயே கல்யாணம் பண்ணிக்கிட்ட காலம் அது. படிப்பு, வேலை உயர்ந்தப்புறம்தான் எல்லாம்னு இருக்கிறது இந்தக் காலம். ஒரு பையனும் ஒரு பொண்ணும் சின்ன வயசிலேயே தீவிரமா 'டேட்' பண்ண ஆரம்பிக்க வேண்டிய அவசியம் என்ன? இப்படிச் சொன்னது யார் தெரியுமா? அலிஸ்ஸாவின் அம்மா. இங்கேயே பிறந்து வளர்ந்து 'டேட்டிங்' அனுபவமும் உள்ளவர். மெகன், ஷார்லட், கேதரின் எல்லாரின் அம்மாக்களும்கூட இதையே தான் சொல்கிறார்கள். ஆச்சரியப்படாதே."

ஆக, அம்மாக்கள் மாநாடு ஒன்று அனுகாவுக்கும் அவள் சினேகிதிகளுக்கும் தெரியாமல் நடந்திருக்கிறது. இந்த அப்பா - அம்மாக்கள் தங்கள் காலத்தில் செய்த தப்புகளை எல்லாம் நினைவில் வைத்துக் கொள்கிறார்கள். பிறகு, தங்கள் பிள்ளைகள் மூலம் அவற்றைச் சரி செய்யப் பார்க்கிறார்கள்.

"அனுகா, உனக்கும் ஆலனுக்கும் உள்ள நட்பு பற்றித் துருவிக் கேட்டு, உன் தனிப்பட்ட உணர்வுகளை அவமரியாதை பண்ண மாட்டேன். ஆனா, இந்த வயசில், 'டேட்டிங்'னு ஒரு பையனோட தனியா நீ வெளியே போக ஆரம்பிக்கிறதில் எனக்கும் அப்பாவுக்கும் சம்மதம் இல்லை...!"

அவ்வளவுதான். இனி ஆலன் இல்லை. பொங்கி வரும் கண்ணீரை அடக்கிக் கொண்டு கார்ப் பக்கம் பார்த்தாள் அனுகா. நாட்டின் சாலைகளில் பொறுப்பாகக் கார் ஓட்டக் கூடியவள் என்று பதினாறே கால் வயதில் அரசாங்கம் அனுமதி கொடுக்கிறது. இந்த அப்பா - அம்மாவோ அவளைக் குழந்தையாகவே நினைக்கிறார்கள்.

வாசல் கதவு திறந்து மூடும் சத்தம். அப்பாவும் வாசற்படியில் உட்கார்ந்து கொண்டார். அனுகாவிடம், "ஹாய், பம்ப்கின்! ஆலனுடன் தனியாக வெளியே போகாமல், நண்பர் கூட்டத்துடன் போகலாம் என்பதைக் காரணங்களோடு அம்மா விளக்குவதற்குப் போதிய நேரம் கொடுத்தேனா?" என்றார்.

அனுகாவின் மூச்சு ஒரு நிமிடம் நின்றது. ஆலனை இன்னும் சந்திக்கலாம். படியிலிருந்து குதித்து எழுந்தாள். அம்மா - அப்பா கன்னங்களில் முத்தங்கள். நன்றி. நன்றி. நன்றி. நன்றி.

சுதந்திரங்களும் பொறுப்புகளும் ஒரே நாணயத்தின் வெவ்வேறு பக்கங்கள்தான் என்றாள் அம்மா. வரிசையாய் விதிகளைப் பட்டியலிட்டாள். நண்பர் குழுவாகத்தான் போக வேண்டும். போதை மருந்துப் பழக்கம், பதினெட்டு வயது வரை குடிப்பழக்கம் இரண்டுமே சட்டரீதியான தவறுகள். குழுவில் இந்தப் பழக்கம் உள்ளவர்கள் கூடாது. பள்ளி நாட்களிலும், பரீட்சைக் காலத்து வார இறுதிகளிலும் வெளியே போகக் கூடாது. எங்கு, யாரெல்லாம், எப்போது போகிறார்கள், யார் கார் ஓட்டுவது, எப்போது திரும்பி வருவார்கள் என்ற விவரங்களை முன்கூட்டியே அப்பா, அம்மாக்களிடம் சொல்லிவிட வேண்டும். ஏதாவது மாற்றம் இருந்தால் உடனே செல்ஃபோன் மூலம் அப்பா, அம்மாக்களுக்குத் தெரிவிக்க வேண்டும். இரவு ஒன்பது மணிக்குள் வீட்டில் இருந்தாக வேண்டும். மற்றதெல்லாம் அனுகாவுக்கே புரிந்த விஷயங்கள். ஏதாவது ஒரு விதிமுறை தவறினாலும், வெளியே போவதற்கான அனுமதி பறிமுதல். இப்போது அவளுக்கு அனுமதிக்கப்பட்ட அரைமணி நேரத் தொலைக் காட்சியும்கூட ஒரு மாதத்திற்காவது தடை. இதற்கெல்லாம் அனுகாவும் அவள் சினேகித, சினேகிதிக் குழுவினரும் சம்மதிப்பார்களா?

ஆலனைத் தொலைபேசியில் கூப்பிட உற்சாகத்துடன் வீட்டுக்குள் ஓடினாள் அனுகா. அப்பா தோள் மேல் தலை சாய்த்து, "நம் குழந்தை..." என்ற அம்மாவின் பெருமூச்சு தொலைவில் கேட்டது.

(தொடரும்)

"தமிழ்நாடு முழுவதும் அவரைத் தெரிஞ்சுருக்கு. புகழ் பரவியிருக்கு. சந்தோஷமான விஷயம்தான். ஆனால் எங்களுக்கு அவர் பிள்ளை இல்லையே. இழப்பு இழப்புதானே. பிறந்த குழந்தையின் பிரிவைக்கூட யாரும் தாங்க மாட்டாங்க. அப்படியிருக்கும்போது இருபத்து ஒன்பது வயது ஆண் பிள்ளையைக் காவி உடைகட்டிப் பார்க்க எந்தத் தாய்க்குத் தான் மனசு வரும்."

எட்டு ஆண்டுகளுக்கு முன் நடந்த சம்பவத்தைத் திரண்டு நிற்கும் கண்ணீருக்குள் தேடிப் பிடித்து விவரிக்கிறார் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளாரின் பூர்வாசிரமத் தாயார் முத்துலெட்சுமி.

"குன்றக்குடி ஆதீனத்தின் மதுரைக் கிளையின் மேலாளராக நான் இருந்தேன். 1993ம் வருஷத்தில் ஒரு நாள் டீ.வி. சேல்ஸ் சென்டர் ஆரம்பித்தோம். அந்தக் கடை திறப்பு விழாவுக்கு மறைந்த அடிகளார் வந்திருந்தார். வரவேற்புரையில் என் மகன் கணேசன் பேசிய பேச்சு அடி



* பொன்னம்பல அடிகளார்

* துறவியாகும் முன்

"எந்தத் தாய்க்குத்தான் மனசு வரும்?"

களாரை மிகவும் கவர்ந்துவிட... அதுவே அவர் மனத்தில் குன்றக்குடி ஆதீனத்துக்கான அடுத்த பட்டத்துக்குத் தேர்ந்தெடுக்க அடித்தளமாகிப் போனது.

"ஒருநாள் என்னை அழைத்து 'உன்னுடைய மூன்று ஆண் பிள்ளைகளில் ஒருவனை, ஆதீனத்துக்குத் தா' என்றார். என்னால் சரி என்றும், இல்லை என்றும் சொல்ல இயலாத நிலை. மௌனமாக வந்து விட்டேன். அதற்குப் பிறகு பல தடவை கணேசனை அழைத்துப் பேசி பக்குவப்படுத்தியிருக்கிறார்கள்.

"1993ஆம் ஆண்டு ஜூலையில் தவத்திரு அடிகளார் பட்டத்துக்கு வந்த நாள் விழாவாகக் கொண்டாடப்பட்டது. அந்த நாளில் வேறு ஓர் அலுவலக வேலையாகப் போன இடத்தில் என் மகன் கணேசனுக்குக் காவி ஆடை வழங்கி துறவியாக்கினார்கள். கடைசி வரை என் மகன் துறவறம்



* அந்த மேடைப் பேச்சு



* பூர்வாசிரம குடும்பம்

"இப்போது கூட அந்தத் துறவி எங்கள் குடும்பத்தைச் சேர்ந்தவராக இருந்தவர்தான் என்பதை நினைவூட்டிக் கொண்டிருப்பவை அந்த உடைகளும், காலணிகளும்தான். அதை அப்படியே பாதுகாத்து வருகிறோம்" என்கிறார்.

போகும் செய்தி எங்களுக்குத் தெரியாது. என் மகன் பிஎஸ்ஸி. முடித்திருந்ததால் எம்எஸ்ஸி. படிக்க வைக்க மதுரை சரசுவதி நாராயணன் கல்லூரியில் 'சீட்' கேட்டு நான் அலைந்து கொண்டிருந்த நேரத்தில் நடந்து விட்டது" என்றார் பொன்னம்பல அடிகளாரின் பூர்வாசிரமத் தந்தை சுப்பிரமணியன்.

"துறவியாயிட்டாங்க. காவி உடை கட்டியிருக்காங்க என்று குன்றக்குடியிலிருந்து போன் வந்தது. அலறி அடித்துக் கொண்டு வேன் பிடிச்சு எல்லோரும் குன்றக்குடிக்குப் போனோம். துறவறம் வேண்டாம்னு சொன்னோம். அவங்க சொன்ன முதல் வார்த்தை 'எண்ணித்துணிக கருமம்..' என்ற குறள்தான். "என்னைப் பார்க்கப் பார்வையாளராக வருவதாக இருந்தால் வாருங்கள். உறவுகளாகவோ, அல்லது என்னைத் திரும்ப அழைத்துப் போகும் எண்ணத்துடனோ இங்கு வரவேண்டாம்" என்று சொல்லி விட்டார். நாங்க எல்லோரும் அழுதோம். ஆனால் அவங்க கலங்கவே இல்லை. துறவறத்தில் உறுதியா இருந்தாங்க. இந்த வலிமை எப்படி வந்ததுன்னுதான் தெரியலை. எல்லாம் ஆண்டவன் கட்டளைதான்.


"கல்லூரியில் படிக்கிற காலத்தில் ஒரு நாளைக்கு மூணு டிரஸ் போடுவாங்க. டிரஸ் போடுவதில் அவ்வளவு பிரியம். அதையெல்லாம் சொன்னோம். அப்பொழுதுகூட "இந்த காவி உடை கட்டுவதற்காகத்தான் அப்படியெல்லாம் அனுபவிக்க வைத்திருக்கிறார் ஆண்டவன்.." என்று சொல்லிவிட்டார்கள்.

ஒரு புறம் பெருமிதம் இன்னொரு புறம் பிரிவு தரும் ஆற்றாமை என குடும்பத்தினர் தவித்துப் போயிருக்கின்றனர்.

"வீட்டில் உள்ள அனைவரின் மீதும் அளவுகடந்து பாசம். வீட்டு வேலைகளை எல்லாம் அவரேதான் பார்ப்பார். அவ்வளவையும் விட்டு விட்டு துறவியாகிவிட்டார். பெரிய புகழை அடைந்திருந்தாலும், தீபாவளி, பொங்கல்னு விசேஷம் வருகிற போதெல்லாம் அவர் மட்டும் இல்லாதது ஒவ்வொரு முறையும் வருத்தத்தைத் தான் அள்ளிக் கொண்டு வருகிறது. துறவியான செய்தி கேட்டதிலிருந்து ஒரு மாதம் வீட்டில் சமைக்கவே இல்லை. சாப்பாடோ, தூக்கமோ இல்லை. கொஞ்சம் கொஞ்சமாக மனத்தைத் தேற்றிக் கொண்டுவிட்டோம்" என்கிறார் அவரது அண்ணன்.

"யாராவது மறைந்துவிட்டால், கொஞ்ச நாளில் மறந்து விடலாம். எங்காவது ஒரு இடத்தில் இருந்தாலும் என்றாவது ஒரு நாள் நம்மைத் தேடி வருவார் என்ற நினைவுகளில் வாழலாம். கண் எதிரில், அம்மா மகன் என்ற உறவை ஒதுக்கி, வாழ்ந்து கொண்டே கடந்து போகின்றபோது ஏற்படுகின்ற மன வருத்தம் வார்த்தைகளால் சொல்ல முடியாது. அனுபவித்தால்தான் தெரியும்" என்கிறார் முத்துலெட்சுமி.

- சந்திப்பு, படங்கள் :
கி. சிங்காரவடிவேல்



நல்ல தூக்கத்தில் இருந்த பொன்னையாவை யாரோ "நயினா... நயினா..." என்று வாசல் கதவைத் தட்டி எழுப்பினார்கள்.

"மெதுவா தட்டுங்கப்பா... இந்தா வர்றேன்..." என்றவாறு போர்வையை விலக்கினார். காமாட்சிக்கு விழிப்பு வரவில்லை. கண்ணை மூடிவிட்டால் இலேசில் எழுந்திருக்கமாட்டாள். கால் பக்கம் சடங்கான இரண்டு பெண்களும் தூங்கிக் கொண்டிருந்தனர். பொன்னையா எழுந்தார். ஜன்னல் வழியாக வெளிச்சம் தெரிந்தது. விடிந்துதான் விட்டது. சுவரில், ஆணியில் தொங்கிக் கொண்டிருந்த கைக்கடிகாரத்தை எடுத்து மணி பார்த்தார்.

"ஈஸ்வரா...!" என்று கூவியவாறு கதவைத் திறந்தார். தட்டார சந்து கணேசன் நின்றிருந்தான். நல்ல வசதியானவன்.

"என்ன நயினா... நல்ல தூக்கமா...?" என்றான்.

"ஆமாய்யா... என்ன விஷயம்? இந்த விடியல்லே வந்துட்டே?"

"என் தம்பி ராகவன் பொண்டாட்டி தவறிடுச்சு நயினா. பல இடத்துக்குப் போய் தகவல் சொல்லணும். அதான் வந்தேன். உங்களுக்கு வேறே வேலை ஏதாச்சும் இருக்கா...?" என்றவன், பேண்ட் பைக்குள் கையை விட்டு கத்தை, கத்தையாய் வைத்திருந்த ரூபாயில், நாலைந்து நூறு ரூபாய் நோட்டு, இரண்டு ஐம்பது ரூபாய் நோட்டு, சில பத்து ரூபாய் நோட்டுக்களை எடுத்தான்.

"ராகவன் பொண்டாட்டியா...? போன வருஷம்தானேப்பா கல்யாணம் ஆச்சு... பேரு என்ன? கலாதானே? என்னாச்சு உடம்புக்கு?"

"புற்றுநோய். பெரிய பெரிய ஆஸ்பத்திரிக்கெல்லாம் கூட்டிப்போயும் காப்பாத்த முடியலை நயினா. இந்தாங்க. இந்த ரூபாயை வைச்சுக்கங்க" என்றான். அறு நூற்று ஐம்பது ரூபாய் இருக்கும் என்று பொன்னையா மனக்கணக்கு போட்டார். போக வர, சாப்பாட்டுச் செலவு போக நூறு, நூற்று ஐம்பது ரூபாய் மிச்சமாகும் என்று நினைத்தார். இப்போது அலைய கிளம்பினால், சாயங்காலம் பிணத்தைத் தூக்கும் வரை அலைய வேண்டும். நூற்று ஐம்பது ரூபாயாவது வேண்டாமா ஒரு நாள் அலைச்சலுக்கு?

"டவுனுக்குள்ள நாங்க சொல்லிக்கிறோம் நயினா. நீங்க உசிலம்பட்டி பக்கம் போங்க. நம்மாளுங்க எல்லாம் தெரியும்ல... உங்களுக்

குத் தெரியாதவங்க யாரு? எல்லார் கிட்டேயும் சொல்லிடுங்க. அப்புறம் டி. கல்லுப்பட்டி, எம். கல்லுப்பட்டி போங்க. அந்தப் பக்கத்து கிராமத்துல நம்ம சொந்தக்காரங்க யாரெல்லாம் ஞாபகத்துல இருக்கோ, எல்லாத்துக்கும் சொல்லிடுங்க. சாயங்காலத்துக்குள்ளே வந்துருங்க. ரூபாய் போதும்ல?''

"போதும்ப்பா'' என்றார்.

"இப்பவே கிளம்புங்க நயினா. அப்பத்தான் தூக்கறதுக்குள்ள எல்லாத்துக்கும் தகவல் போக சரியா இருக்கும்.''

சப்தம் கேட்டு காமாட்சி எழுந்து விட்டாள். காமாட்சி, பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டிருப்பாள் போலும். விவரம் சொல்லிவிட்டு, ஐம்பது ரூபாயை எடுத்து, காமாட்சி கையில் கொடுத்தார். இன்றைய செலவுக்குப் போதும்!

"நான் சாயங்காலம்தான் வருவேன். யாராவது வந்தால் விவரம் சொல்லு. வேலைக்குக் கூப்பிட வந்தா நாளைக்கு வர்றேன்னு சொல்லு'' என்று வெறுங் காலோடு வெளியே வந்தார். செருப்பு இல்லை. ஒரு மாதமாக செருப்பு வாங்க நினைக்கிறார். பணமில்லை. பத்து, பதினைந்து ரூபாய்க்கு செருப்பு விற்ற காலம் மலையேறி விட்டது. எழுபது, எண்பது ரூபாய்க்குக் குறைந்து நல்ல செருப்பில்லை. 'காலில் போடுற கழுதை என்ன விலை விற்கிறது' என்று நினைத்துக் கொள்வார். காமாட்சிதான் கிண்டலடிப்பாள். "உங்களுக்கு எல்லாம் ஓசியிலேதான் கொடுக்கணும்.''

என்ன செய்வது... சம்பாதிப்பது சாப்பாட்டுக்கே சரியாக இருக்கே.

யார் சொல்வார்கள்?

யோகி

பொன்னையாவுக்கு இந்த ஆடி வந்தால் ஐம்பது வயசு முடியும். சின்ன வயசிலேயே பெற்றோரை இழந்தார். கொஞ்சநஞ்ச கஷ்டமல்ல. நிறையவே பட்டு விட்டார். இந்த ஐம்பது வயசுக்கு எதையும் சம்பாதித்து மூட்டை கட்டி வைத்து விடவில்லை. என்னவோ ஓடுகிறது. 'ஆண்டவன் அன்றாடம் தனக்குப் படியளக்க மாட்டானா என்ன?' என்ற நம்பிக்கையில் வாழ்க்கையும், நாட்களும் ஓடுகின்றன.

பொன்னையா தங்க நகை ஆசாரி... முப்பது வயசில் சொந்தமாய்ப் பட்டறை வைத்து நன்றாகத்தான் இருந்தார். முப்பத்து ஐந்து வயசில், நொடித்துப் போய் சம்பளத்துக்கு வேலைக்குப் போனார். வயசாயிற்று. காலத்துக்குத் தகுந்தாற்போல் மாறும் தொழிலுக்கு ஏற்ப அவரால் மாறவோ, ஈடு கொடுக்கவோ முடியவில்லை. இந்த நாலைந்து வருஷமாய் வேறுவிதமாய் வாழ்க்கை ஓடுகிறது. பொன்னையா அவர் சமூகத்தில் அதிகமாய் அறியப்பட்டவர். அதனாலேயே பலருக்கும் அவர் தேவைப்பட்டார். யாராவது ஒருவரைப் பற்றித் தெரிய வேண்டும் என்றால், பொன்னையாவிடம் கேட்டால் சரியாகச் சொல்லி விடுவார்.

பொன்னையா போகாத ஊர் இல்லை. சின்ன வயசில் ஆசாரிமார்கள் எந்த ஊரில் எல்லாம் இருக்கிறார்களோ அந்த ஊரில் எல்லாம் வேலை பார்த்து இருக்கிறார். பத்து நாள், இருபது நாள் என்று தொடங்கி ஒரு வருஷம், ரெண்டு வருஷம் என்று இருந்திருக்கிறார். "அப்ப எல்லாம் என் கால்ல சக்கரம் இருந்துச்சய்யா. ஒரு இடத்துல உருப்படியா இருக்க மாட்டேன்'' என்பார். அவருக்கு நல்ல ஞாபகசக்தி. கல்யாணத்துக்குப் பத்திரிகை வைக்க வேண்டும் என்றால் எல்லோரும் இவரை அழைப்பது வாடிக்கையானது.

"அடுத்த வீட்டுக்காரர் ஏற்கெனவே ஜெயிலில் இருந்திருக்கணும்னு எதனால் அவ்வளவு உறுதியாச் சொல்றீங்க?"

"செல் நம்பர் என்னன்னு கேட்டதற்கு 12, பாளையங்கோட்டை என்கிறாரே!"

- நெல்லை எம்.வெங்கடேஸ்வரன்

"பொன்னையாவுக்குத் தெரியாத ஆளு, தமிழ்நாட்டுலேயே கிடையாதுப்பா" என்பார்கள். மனுஷனுக்கு ஆள் பழக்கம் ஜாஸ்தி. கடவுளின் பழக்கம்தான் தனக்கு இல்லாமல் போனது. அதுதான் தன் தலையெழுத்து இப்படியாகி விட்டது என்று நினைத்துக் கொள்வார். எங்கு எந்த ஜோலியாகப் போனாலும், அன்றாடம் அம்பது, நூறு கிடைத்து விடும். சாப்பாட்டுக்கு ஓடி அடைந்து விடும்.

எவராவது செத்துப் போனாலும், பொன்னையா தேவைப்பட்டார். "பொன்னையா கிட்ட போய்ச் சொல்லு. எல்லார்கிட்டேயும் சொல்லிடுவார்" என்பார்கள். நாலைஞ்சு வருஷத்துக்கு முன் கண் ஆபரேஷன் செய்த தோடு வாழ்க்கையே இருண்டு விட்டதாய் நினைத்தார்.

அந்தச் சமயத்தில்தான் கல்யாணத்துக்கு, இழவுக்கு இன்ன பிற விசேஷங்களுக்கு ஓடியாடி, கூடமாட வேலை செய்ய வாய்ப்பு கிடைத்தது. நல்ல முகூர்த்த சமயங்களில், மாசத்தில் பாதி நாட்கள் பத்திரிகை வைக்கப் போக நேரும். யாராவது இறந்தால் இழவு சொல்ல, பத்தாவது நாள் காரியம் சொல்ல என்று இரண்டு தினங்கள் ஓடி விடும்.

"பொன்னைய்யா நைனா இல்லேன்னா, நமக்கெல்லாம் ஒரு கை உடைஞ்ச மாதிரி" என்று சொல்லும் போது பெருமையாய் இருக்கும். சில சமயம் 'என்ன பிழைப்பு' என்று சலிப்பாய் கூட இருக்கும். ஆனால் நாலு காசு பார்க்க முடியுதே என்று தேற்றிக் கொள்வார்.



பஸ் ஸ்டாண்டுக்கு வந்தார். பசித்தது. 'வசந்தம்' ஹோட்டலில் நாலு இட்லி, ஒரு தோசை சாப்பிட்டார். உசிலம்பட்டி பஸ்ஸில் ஏறினார். அவருக்குச் சொந்த ஊர் உசிலம்பட்டிதான். ஏழெட்டு வயசான போது மதுரைக்கு லாரியில் வந்து சேர்ந்தார். உசிலம்பட்டி முழுக்க ராகவன் சொந்தக்காரர்கள் இருந்தார்கள். உசிலம்பட்டியைச் சுற்றி தகவல் சொல்லிவிட்டு பஸ் ஸ்டாண்ட் வந்த போது, மணி பன்னிரண்டாகி விட்டது. எம். கல்லுப்பட்டி பஸ்ஸில் ஏறினார். பி. கல்லுப்பட்டி பஸ் ஸ்டாப்பில் இருந்த சின்ன ஹோட்டலில் மதிய சாப்பாடு சாப்பிட்டார்.

எம். கல்லுப்பட்டியில் மூன்று வீடுகளில் சொல்ல வேண்டியிருந்தது. சொல்லிவிட்டு பாரப்பட்டி போகும் பஸ்ஸில் ஏறினார். அங்கு ராகவனின் பாட்டி இருந்தாள். அவளுக்குக் கண் சரியாகத் தெரியாது. தன்னந்தனியாக இருந்து சோறு பொங்கிச் சாப்பிட்டுக் கொண்டு அனாதை போல் இருந்தாள். புருஷன் மிலிட்டரியில் இருந்த தால் பணம் வருகிறது. பிள்ளைகள் கோயம்புத்தூரில் இருக்கிறார்கள். "நானும் கூட வர்றேன் பொன்னையா" என்றாள்.

எல்லோருக்கும் தகவல் சொல்லியாயிற்று. சரி... கிழவியையும் அழைத்துக் கொண்டு போக வேண்டியதுதான். புண்ணியமாய்ப் போகும்.

பஸ்ஸில் ஏறி அமர்ந்தார். கால் இரண்டும் கடுகடுவென்று உளைச்சலாய் இருந்தது. வெயிலில் சரியான அலைச்சல்... கண்ணெல்லாம் எரிந்தது.

ஜன்னலில் சாய்ந்து கொண்டார். கிழவி பெண்கள் பக்கம் அமர்ந்து கொண்டாள். பஸ் கிளம்பியது. காற்று இலேசாய் வீச, கண்களில் தூக்கம்... அப்போது பொன்னையாவுக்குச் சட்டென்று தோன்றியது.

'எல்லோருடைய சாவுக்கும் போய் நாம் தகவல் சொல்கிறோம். நம் சாவுக்கு யார் போய்த் தகவல் சொல்வார்கள்?'

● 'இளங்கோவனை மாற்றுங்கள்' என்று தில்லிக்குப் போன அருணாசலம், தங்கபாலு, யசோதா கோஷ்டி மூக்கறுபட்டுத் திரும்பியவுடன், 'காமராஜர் பிறந்த நாள் விழா' என்ற பேனரில் சென்னையில் ஒரு கூட்டம் நடத்தியது. அந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்தவர் கட்சியிலிருந்து இடை நீக்கம் செய்யப்பட்ட கத்திபாரா ஜனார்த்தனன். அதில் பேசும்போது அருணாசலம், இளங்கோவன் மீது நடவடிக்கை எடுக்கவிருப்பதாக சோனியா உறுதியளித்திருப்பதாகவும் அதுவரை இளங்கோவன் தான் நமக்குத் தலைவர் என்றும் வேண்டா வெறுப்பாகச் சொன்னார். இதற்கிடையில் கூட்டத்தை நடத்த கத்திபாரா பல இடங்களில் வசூல் வேட்டை நடத்தியதாக, ஆதாரபூர்வமாக இளங்கோவனுக்குப் புகார்கள் வந்துள்ளன.

● த.மா.கா.விலிருக்கும் அந்த முன்னாள் அமைச்சருக்கு நூற்றுக்கணக்கான ஏக்கரில் முந்திரிக் காடுகள் உள்ளன. அதை ஒருவரிடம் இரண்டு லட்சம் ரூபாய் முன் பணம் வாங்கிக்கொண்டு குத்தகைக்கு விட்டு விட்டார். அந்தக் குத்தகைக் காலம் முடியும் முன்னரே, மற்றொருவரிடமும் குத்தகைக்கு விட்டிருக்கிறார். இரண்டாவதாக பணம் கொடுத்தவர், முந்திரிக் காட்டுக்குச் சென்றபோது, அங்கே ஏற்கெனவே ஒருவர் அறுவடை செய்து கொண்டு போய்விட்டது தெரிய வந்தது. இப்போது ஏமாந்தவர் நடையாய் நடந்து கொண்டிருக்கிறார்.

● 'லஞ்சம் தவிர்; நெஞ்சம் நிமிர்!' என்ற சிறிய ஸ்டிக்கரை மாநகர பஸ்களில் ஒட்ட நிர்வாகத்திடம் அனுமதி கேட்டது 'ஊழல் எதிர்ப்பு இயக்கம்' என்ற அமைப்பு. உடனே நிர்வாகம் 'வர்த்தக ரீதியான இது போன்ற ஸ்டிக்கரை ஒட்ட ஒரு பஸ்ஸுக்கு ஒரு மாதத்துக்கு நானூறு ரூபாய் செலுத்த வேண்டும்' என்று சொல்லி விட்டதாம். "இது எய்ட்ஸ் ஒழிப்பு, தொழுநோய் ஒழிப்பு' போன்று மக்களை விழிப்படையச் செய்யும் ஸ்டிக்கர் தான்" என்று கடிதம் மேல் கடிதம் எழுதியும் அசையவில்லை போக்குவரத்து நிர்வாகம். "இதற்கும் லஞ்சம் கொடுத்தால்தான் நடக்கும் போலிருக்கிறது" என்று நொந்து போய் சொல்கிறார்கள் ஊழல் எதிர்ப்பு இயக்க நிர்வாகிகள்.

● சென்னையில், அங்கீகாரம் பெறாமல் கட்டப்பட்ட கட்டுமானங்களை நெறிப்படுத்த ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்தியது சி.எம்.டி.ஏ. மற்ற மாநிலங்களைப் போலல்லாமல், நெறிப்படுத்துவதற்கான கட்டணத்தை, சதுர அடிக்கு, மிக அதிக பட்சமாக நிர்ணயித்து விட்டதால், இந்த திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட 800 கோடி ரூபாய் வசூலாகவில்லை. பதினேழு கோடிதான் வசூலாகியிருக்கிறது. இது தவிர, அதிகாரிகள், இந்த 'எடுபடாத' திட்டத்திலேயே குறியாக இருப்பதால், 'மாமூலாக' கொடுக்கக்கூடிய கட்டட அனுமதி ஆணைகள், கடந்த ஒரு வருட காலமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாம். இதையெல்லாம் சம்பந்தப்பட்ட அமைச்சரான வேலுச்சாமியின் கவனத்



லஞ்சம் தவிர்! நெஞ்சம் நிமிர்!

துக்குக் கொண்டு சென்றபோது "தான் தோன்றித்தனமாகச் செயல்படும் அதிகாரிகளை என்னால் ஒன்றும் செய்ய முடியவில்லை. மேலிடம் ஏதாவது செய்தால் தான் உண்டு" என்று கையை விரித்து விட்டாராம்!

• ஜெயும் - சசிகலாவும், திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயிலுக்கு ஒரு பசுமாட்டை காணிக்கையாகக் கொடுத்தார்கள் அல்லவா! அந்த மாட்டுக்கு இந்தமுறை பொங்கலின் போது கோயிலில் ஸ்பெஷல் அலங்காரிப்பு + கவனிப்பாம்.

— சஞ்சயன்

படம்: சௌரா

அடிச்ச ஐம்பது லட்சத்தில் வருமான வரி இருபது லட்சமாம். சே! வாழ்க்கையோட முதல் வருமானத்திற்கே இந்த கதி என புழுங்கியபடி, படபடப்போடு கஜானா பிரிவில் பரிசு வென்ற தன் லாட்டரி சீட்டை நீட்டினார். மலர்ந்த முகத்தோடு அவரை வரவேற்று "ப்ளீஸ் வெய்ட்" என்று அதிகாரி சொன்னது அரசாங்க ஆபிசுக்கு அன்னியமாகத் தென்பட்டது.

கம்ப்யூட்டரில் சீட்டைச் சரிபார்த்துவிட்டு, "கரெக்ட். உங்க சீட்டுக்குத்தான் ஐம்பது லட்சம் ரூபாய் பரிசு" மீண்டும் முகமலர்ந்த அதிகாரி.

"உங்க பேர்?" எனக் கேட்டார்.

"குபேரநாதன்..." சொல்லும்போது பணத்துடன் திரும்பிப் போக செக்யூரிட்டி ஏற்பாடு செய்து கொண்டிருக்க வேண்டுமோ என்ற எண்ணம் அவருள் ஆடியது.

"இப்பெல்லாம் பேர் ராசியில்லாம பரிசு விழறதில்லே."

"சார் செக்கா, கேஷா? எப்படி கொடுப்பீங்க?"

"வெய்ட்!" என்று கம்ப்யூட்டருக்குள் தலையை விட்டார் அதிகாரி.

எப்படி இருந்தாலும் வெய்ட்டாகத் திரும்பிப் போகப் போறோம். சுதா அதிர்ச்சியில் மயக்கமாக விழாமல் இருந்தால் சரி. தன் இருபது வருட தோல்விகளைத் தாங்கிக் கொண்டவங்களுக்குச் சரியான பரிசு.

"மிஸ்டர் குபேரநாதன்?" தலை நிமிர்ந்தான் அதிகாரி.

"யெஸ் சார்."

"ட்ரஷரி காலி. அதை டீசன்டா சொல்றோம்."

"இதுதான் ஒவ்வொரு ஆட்சி மாறும் போதும் வழக்கமா நடக்கிறதே. என் பரிசுப் பணத்துக்கு வழி சொல்லுங்க."

"க்ளீனிங் முடிஞ்சு ஃபில்லிங் ஆரம்பிச்சதும் நிச்சயம் கிடைக்கும்."

"ஃபில்லிங்கா?"

"ஆமா. பஸ் கட்டணம் ஏத்தியிருக்கோம், மின்சாரம் கூடியிருக்கு, இதர வரிகள்..."

"இதெல்லாம் வந்தா தருவீங்களா?"

"...ம்"

"அப்புறம் வெய்ட் லிஸ்ட்லேயிருந்து ஆர்.ஏ.ஸிக்குப் போவேனா?"

"நீங்க ரொம்ப தமாஷ் மிஸ்டர் குபேர்!"

தமாஷா? வயிறெரிந்தது அவருக்கு. சாமி வரம் கொடுத்தாலும்... கல்யாணமாகியும் பிரம்மசாரி... என்று பல சோக பழமொழிகள் மனத்தை ஹவுஸ்ஃபுல்லாக்கியது.

சுதாவை நினைத்தார். வெறுங்கையோடு போக மனம் மறுத்தது. உத்வேகம் கூடியது.

"சார், நான் இருபது பர்சன்ட் டிஸ்கவுன்ட் வேணாலும் தந்துடறேன்."

"ஓ. நோ!"

"இது தள்ளுபடி சீசன். முப்பதுகூட ஓ.கே. ஆனா பரிசோட அனுப்புங்க ப்ளீஸ்."

"புரியாம பேசறீங்க."

"அதுவும் முடியலேன்னா, மாதத் தவணை, இன்ஸ்டால்மென்ட்ல கொடுங்க. குடுக்க நினைச்சிட்டா எத்தனையோ வழி இருக்கு."

நொந்து போனார் அதிகாரி.

"அரசாங்கத்துக்கிட்ட சுத்தமா பணம்

XXX 111222

"நீங்க வெய்ட் லிஸ்ட் 92."

"வெய்ட் லிஸ்டா?" அதிர்ந்து போனார். "என்ன சார் ஏதோ ட்ரெயின் டிக்கெட் மாதிரி சொல்றீங்க. இது லாட்டரி டிக்கெட் சார்!"

"யெஸ்."

வெய்ட்டாகப் போக நினைத்தவர் வெய்ட் லிஸ்டாகப் போவோமென்று கனவிலும் எதிர்பார்க்கவில்லை.

"கஜானா க்ளீனிங். உங்களுக்குத் தெரிஞ்சிருக்கும்னு நினைச்சேன்."

"கஜானா க்ளீனிங்கா? புதுசு புதுசா சொல்றீங்களே சார்."

இல்லை, மிஸ்டர் குபேர்."

"எங்கிட்ட மட்டும் இருக்குமா? லாட்டரி அடிக்கிறான்னு சொல்லுவாங்களே, அது இதானா சார்?"

அதிகாரி பதில் பேச முடியாமல் விழித்தார். பஞ்ச பாண்டவர் ஐந்து ஊர், ஐந்து வீடு... என கேட்ட புராணம் அவர் நினைவுக்கு வந்தது.

சட்டென குபேரநாதன், "சார், பணம் இல்லேன்னா பொருளா கொடுத்திடலாமே?"

"எப்படி?"

"ஒரு ஹவுசிங் போர்ட் ப்ளாட், இரண்டு

மெடிகல் காலேஜ் சீட், இப்படி நாங்க பணமா அதை மாத்திக்கறோம்."

"நீங்க ஒரு ஐடியா பேங்க் மிஸ்டர் குபேர்."

"பின்னே, பணம் இல்லேன்னு சும்மா இருந்தா எப்படி சார்? ஏதாவது அதிரடி ஆக்ஷன் எடுக்கணும். இல்லையா?"

"ரொம்ப சரி."

"சார் இன்னொரு ஐடியா! பேசாம உலக வங்கிகிட்ட கடனுக்குப் போகலாமே. லாட்டரி என்னவோ லாபகரமான வியாபாரம். போருக்கே ஃபைனான்ஸ் பண்றவங்க இதுக்கா தரமாட்டாங்க."

"மந்திரி போயிருக்கார்."

"அதானே, அரசாங்கத்துக்குக் கடன் வாங்கச் சொல்லியா தரணும். ஏதாவது தும்மாதூண்டு காரணம் கிடைக்காதான்னு ஏங்கறவங்களாச்சே."

"அதுவும் அவ்வளவு சுலபமில்லை. நாம வட்டியைக் கூட சரியா கட்டறதில்ல. சோ, வெரி பேட் நேம்."

"அப்ப என்னதான் சார் வழி? எதுக்கு சார் எனக்குப் பரிசு விழவைச்சீங்க? நான் பாட்டுக்கு என் கஷ்டத்தோடு இருந்திருப்பேன். இப்ப..."

"வெய்ட் மிஸ்டர் குபேர். நாங்க ஒண்ணும் சும்மா இல்லை. அந்த நாலு பேரைப் பாருங்க." என்று தூரத்தில் கம்ப்யூட்டருக்கு முன் அமர்ந்திருந்த நால்வரைக் காட்டினார்.


"ஆமா, நாலு பேரும் வேலையில்லாமல் கம்ப்யூட்டர் கேம்ஸ் ஆடறாங்களா?"

"நோ! ஆன்லைன் லாட்டரி ஆடறாங்க. யு.எஸ். லாட்டரி, யு.கே. லாட்டரி, ப்ரெஞ்ச் லாட்டரி..."

"அதுக்கு நம்ம நாட்டுல தடை ஆச்சே?"

"மக்களுக்குத்தான் தடை. அரசாங்கத்துக்கு இல்லை. அரசாங்கம் இதிலே பத்து மில்லியன் டாலர் பரிசு அடிச்சா...?"

"ஆ... ஐம்பது கோடி ரூபா!" கேட்கும்



போதே கிக் ஏறியது குபேரநாத்துக்கு.

"குட் ஐடியா சார்! அதை வைச்சு இந்த வெய்ட் லிஸ்ட்டை க்ளியர் பண்ணிடுவீங்க."

"பின்னே? சும்மா இருந்தா எப்படி?"

இறுமாந்தார் அதிகாரி.

குபேரநாதன் அந்த நால்வரையும் பார்த்தார். அந்த நாலு பேருக்கு நன்றி சொல்ல வேண்டுமென்றால் அவர்களுக்கு அதிர்ஷ்டம் இருக்க வேண்டும். அதிகாரி பக்கம் திரும்பினார்.

"ஆக, அரசாங்கம் சும்மா இல்லை. லாட்டரி அடிக்கிற நீங்க லாட்டரி அடிச்சு, லாட்டரி அடிச்சு, லாட்டரி அடிக்கிற எங்களைக் கரை சேர்க்கப் போறீங்க" என்று வெதும்பி கிளம்பினார்.

"மிஸ்டர் குபேர், வெயிட் ப்ளீஸ். வெய்ட் லிஸ்ட் நிலவரம் ரயில்வே டிக்கெட் மாதிரி ஆட்டோமேடிக்கா போன் மூலமா தெரிஞ்சுக்கலாம். தொலைபேசி எண் 111222!"

"ஆ.. XXX அதுலே கிடையாதா?"

மாதுரி

அது ஒரு வி.ஐ.பி. கிராமம். திரைப்பட நடிகர்கள் படையெடுப்பினாலோ அல்லது படப்பிடிப்புகள் நடப்பதனாலோ அல்ல. தியாகத்தைச் சுமந்த மகாத்மா காந்தி, சுப்பிரமணிய சிவா, ராஜாஜி, பெரியார், காமராஜர் போன்ற தேசத் தலைவர்கள் தங்கள் காலடித் தடங்களைப் பதித்துவிட்டுச் சென்ற கிராமம். சிவகங்கை மாவட்டம் பிள்ளையார்பட்டிக்கு அருகில் உள்ள சிராவயல் கிராமம். அப்படியொரு வி.ஐ.பி. அந்தஸ்து வரக் காரணம் அமரர் ஜீவா நடத்திவந்த 'காந்தி ஆசிரமம்'தான்...

மகாத்மா 1927ஆம் ஆண்டு சிராவயலுக்கு வந்தபோது மகாத்மாவைச் சந்தித்தவர்களும், அழைத்து வந்த தலைவர்களும், ஜீவா நடத்திவந்த ஆசிரமுமே இன்று மறைந்து போயிருக்க, காந்தியைக் கண்ட இரண்டு பேர் மட்டுமே அந்த கிராமத்தில் இருக்கிறார்கள். அந்த நினைவுகளை நம்முடன் பகிர்ந்து கொண்டார்கள்.

"ஆசிரமத்திலே நான் ஆறாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தேன். ராட்டையில் ரொம்ப நைஸா நூல் நூற்பேன். அதனாலே காந்தி வந்தபோது, என்னைத்தான் கதர் மாலை போடச் சொல்லி ஆசிரியர்கள் சொன்னார்கள். நானே நூல் நூற்று, எண்பது குஞ்சம் கட்டி, அந்த மாலையை காந்திக்குப் போட்டேன். காந்தி என் தோளைத் தட்டி கை குலுக்கினார். பக்கத்திலே இருந்த ராஜாஜியும் கை குலுக்கினாங்க. அப்போது காந்தி ராஜாஜிகிட்டே இங்கிலீஷிலே ஏதோ கேட்க, ராஜாஜி என்கிட்டே எந்த வகுப்பு படிக்கிறேன்னு கேட்டார். ஆறாம் வகுப்புன்னேன். அதற்கு காந்தி என்னமோ சொன்னாங்க. உடனே ராஜாஜி நல்லா படின்னு காந்தி சொல்றாங்கன்னு சொன்னாரு. காந்தி ஒரு பூ மாலையை எனக்குப் பரிசா கொடுத்தார். நான் அதைத் தவறவிட்டுட்டேன் சாமி. அந்த மாலையில் ஒரே ஒரு நூலை பத்திரப்படுத்தி வச்சிருந்தா இன்னைக்கு எவ்வளவு மதிப்பு!" என்று வருத்தப்பட்டார் எண்பத்தைந்து



• கண்ணாயி

வயது கண்ணாயி.

அந்தக் கிராமத்தில் இருக்கும் பெண்களிலேயே நன்றாகத் தமிழ் பேசவும், எழுதவும் தெரிந்த கண்ணாயி தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்.

"இன்று இருக்கிற சலுகைகள் அன்று இருந்திருந்தா நானெல்லாம் நல்லா இருந்திருப்பேன்..." என்று சொல்லும் கண்ணாயிக்கு, பத்தாம் வகுப்புவரை ஆசிரியராக இருந்தவர் ஜீவா.

"காந்தி வர்றார்ன்னு சொன்னவுடனேயே, அவரைப் பார்ப்பதற்காக நானும் என் சிநேகிதர்களும் போனோம். காந்தியைப் பார்த்தோம். இடுப்பில் ஒரு துண்டும் தோளில் ஒரு துண்டும்தான் போட்டிருந்தாரு. உடனே நாங்களும் காந்தி மாதிரிதான் உடுத்தணும்னு முடிவெடுத்தோம். நான், குப்பு ஆசாரி,

சையது ராவுத்தர் மூன்று பேரும் இரண்டு நாள் கழித்து உடையை மாற்றினோம். அவங்கள் இரண்டு பேரும் சாகிறவரை கதர்தான் கட்டினாங்க. நான் மட்டும் காந்தி மாதிரி இடுப்புக்கு ஒரு துண்டும், தோளுக்கு ஒரு துண்டும் மட்டுமே போட்டிருக்கேன் என்று சொல்லும் முதியவர் அருணாசலத்துக்கு இப்போது தொண்ணூறு வயது.

பெரியவர் அருணாசலம் தம்முடைய திருமணத்தின் போதுகூட துண்டிலிருந்து மாற்று உடை அணிந்து கொள்ளவில்லை. இவருடைய இரண்டு மகள்களுக்குத் திருமணம் முடிந்து, மூத்த மருமகன் மலேசியா சென்று வந்தபோது இவர் மருமகனிடம் விரும்பிக் கேட்டு வாங்கிக் கொண்டது, இடுப்பில் தொங்கவிட்டுக் கொள்ளும் காந்தி ஸ்டைல் கடிகாரம் மட்டும்தான்!

அன்றிலிருந்து இன்றுவரை காங்கிரஸ் தவிர வேறு எந்தக் கட்சிக்கும் இவர்

* அருணாசலம்



காந்தி கொடுத்த மாலை!

வாக்களித்ததில்லையாம். காங்கிரஸின் கூட்டணிக் கட்சிகள் நின்றால்கூட வாக்களிக்க மாட்டாராம். கிராமமே ஒன்று சேர்ந்து, ப. சிதம்பரத்துக்கு சைக்கிள் சின்னத்தில் வாக்களிக்க முடிவெடுத்தபோது, இவர் சுதர்சன நாச்சியப்பனுக்காக கைச் சின்னத்தில் வாக்களித்தாராம்!

முதுமையின் காரணமாக வீட்டிலிருக்கும் இவருக்கு மாடு மேய்ப்பதும், மாட்டு வண்டி ஓட்டுவதும்தான் தொழில்.

காந்தியைப் போன்று ஒரு கம்பு. கையில் ஒரு துணிப்பை. அதற்குள் சில சில்லறை நாணயங்கள், பாக்கு உரல், வெற்றிலைப் பாக்கு. இவைதான் அருணாசலத்தின் சொத்து.

கட்டுரை, படங்கள்: சிங்கனார்

“நான் அதைத் தவற விட்டுட்டேன் சாமி. அந்த மாலையில் ஒரே ஒரு நூலை, பத்திரப் படுத்தி வைச்சிருந்தா இன்னைக்கு எவ்வளவு மதிப்பு..!”



பூவரசம் வீடு

காற்று சற்று மிகுதியாக வீசியது. உலர்ந்த புழுதியைப் புகை போலெழுப்பிக் கொண்டுபோய் வீடுகளிலும், மரங்களிலும் அப்பியது. பூவரச மரத்தின் இலைகளிலும் புழுதி படர்ந்து அவற்றின் பச்சை நிறப் பிரகாசம் மட்டுப்பட்டு சோகையாய்த் தோற்றம் தந்தது.

வீட்டிலிருந்து சாமான்கள் ஒவ்வொன்றாய் வெளியே வந்து கொண்டிருந்தன. அழகுவுக்கு உதவியாக சரவணனும், பாலாவும் சாமான்களை எடுத்து வெளியே வைத்துக் கொண்டிருந்தனர்.

அவ்வப்போது கண்ணில் திரளும் நீரைத் துடைத்தபடி கிருஷ்ணவேணியும் சிறிது நேரம் வேலை செய்து பார்த்தாள். அவளால் கொஞ்சநேரத்துக்கு மேல் எதிலும் கவனம் செலுத்த முடியவில்லை. நேராகச் சென்று பூவரச மரத்தடியின் கீழிருந்த கல்லில் அமர்ந்து கொண்டாள்.

எது செய்தாலும் துயர் மிகுதியாகவே செய்கிறது. கண்ணை விழித்துக் கீழே பார்த்தாள். இந்த இடம்... இங்கே தான் அம்சவேணி கருகிப் போய் விழுந்து கிடந்தாள். நெருப்பில் சுடப்பட்ட அம்சவேணியின் கரிய தோற்றம் கிருஷ்ணவேணியை உலுக்கியது. அம்சவேணியின் முக லட்சணம்... உடல் வனப்பு யாவும் புகையாய்க் கரிந்தோட, மனம் பதறி அதனைக் கண்ட நொடியில் கிருஷ்ணவேணியைத் தாக்கிய அந்தப் பொசுங்கிய மாமிசநெடி... நினைக்கையில் இப்போதும் கிருஷ்ணவேணியின் மனதிலந்த வாசனை அடிக்கிறது. கண்ணீர் 'குபுக்'கெனப் பொங்கி... உடலெங்கும் சிறைப்பட்ட சோகம் வெளியே வரவியலாது உள்ளே புரள்கிறது.

அதன்பின் எப்படி இந்த வீட்டில் தங்க? போலீஸ் வந்ததும், போஸ்ட்மார்டம் நடத்ததும்... எரிந்து போன அம்சவேணியை மீண்டும் ஒருமுறை எரியூட்டியதும் நடந்தது.



அன்றிலிருந்து இந்த வீட்டில் யாரும் தங்கவில்லை... சரவணன் வீட்டுத் திண்ணையிலேயே முடங்கிக் கிடந்தனர். சரவணனின் வீட்டார் மட்டுமில்லையென்றால்... கிருஷ்ணவேணிக்கு கற்பனை செய்து பார்க்கக் கூட கஷ்டமாக இருந்தது.

சோறு போட்டு, தங்க வைத்து, ஆறுதல் சொல்லி இவர்களை மேலும் சிதற விடாமல் பார்த்துக் கொண்டது சரவணனின் குடும்பம்.

"இப்படியே இருந்தால் எப்படி? அடுத்தது என்ன?" என்ற கேள்வி ஒருநாள் வந்தபோது லீலா வறண்ட குரலில் சொன்னாள்.

"என்னைப் பத்தி எனக்கே பெருமையா இருந்துச்சு... புருசனைப் பறி கொடுத்த பிறகு ஒத்தச் சொல்லு இல்லாம... புள்ளைகளைச் சிந்தாமச் சிதறாம கட்டிக் காப்பாத்திப் புட்டோம்னு பெருமையா இருந்துச்சு. 'இல்லடி முட்டாச் சிறுக்கி'னு தன்னைப் பத்த வச்சிக்கிட்டு எம் மூஞ்சில கரியைப் பூசிட்டுப் போயிட்டா எம்மக அம்சவேணி!'

"சரி, போனதை விடுங்க.. இருக்கிறதுகளைப் பாருங்க" என்றாள் சரவணனின் அம்மா.

"நான் தப்புப் பண்ணிட்டேங்க. அவளை அம்புட்டுத் தூரம் நான் பேசியிருக்கக் கூடாது. அடிச்சிருக்கக் கூடாது. அது செத்தது என்னாலதான். நாந்தான் அவளைக் கொன்னுட்டேன்... காலம் பூரா இதை நெனைச்சு நெனைச்சு மருகிச் சாகப் போறேன்... எனக்குப் பொட்டைப் புள்ளைக கிட்ட எப்படி நடந்துக்கிறதுன்னு தெரியலைம்மா...' தேம்பி அழுதாள் லீலா.

பாஸ்கர் சக்தி

சிவராமன் ஆறுதலாகச் சொன்னார்...

"நீங்க ஏங்க அப்படியெல்லாம் நினைக்கிறீங்க... அது தப்புப் பண்ணிச்சு... கண்டிச்சீங்க... பைத்தியக்காரப் பொண்ணு கொஞ்சம் யோசனையில்லாமப் பண்ணிடுச்சு."

"அப்படியில்லீங்க சார்... அவ என்ன தப்புப் பண்ணா? அந்த வயசு வரைக்கும்... அவளுக்கு ஒரு துணையைத் தேடித் தராதது நம்ம தப்புத்தானே... அவளா ஒரு துணையைத் தேடிக்கிட்டா... அவன் தப்பான ஆளா சரியானவனான்னு தெரிஞ்சுக்குற அறிவை அவளுக்குக் கொடுக்காமலே பொத்திப்



பொத்திப் வளர்த்துட்டேனே... பாவம்... நம்பிப் போயி... ஏமாந்து வந்தவளை, பறிகொடுத்துட்டு வந்தவளை... ஆதரிக்காம அவளைக் கேவலப்படுத்தி, சந்தி சிரிக்க வைச்சுட்டனே...?"

நினைத்து நினைத்து அழுதாள் லீலா.

"சரிங்க... அழுதுட்டே இருந்தா எதுவும் தீராது. அடுத்து என்ன செய்யணும்னு சொல்லுங்க?"

"அந்த வீட்டுல இனிமே என்னால இருக்க முடியாது சார்."

"நம்மூர்லயே வேற வீடு ஏற்பாடு பண்ணட்டுமா?"

"வேணாம் சார்... பக்கத்து ஊால ஏதாச்சும் பாருங்க... இந்த ஊரு முழுக்க நானும், எம்புள்ளைகளும் கேவலப்பட்டுப் போயிட்டோம்."

"அப்படியெல்லாம் ஒண்ணுமில்லை... எல்லாம் உலகத்துல நடக்கறதுதான். மனசைப் போட்டு சும்மா உழப்பிக்கிடாதிங்க."

ஆறுதல் சொன்ன கையோடு சிவராமன் கிளம்பிப் போனார். சின்னப் பட்டிக்கு நாலு கிலோ மீட்டர் தள்ளியிருக்கும் செல்வக் குளம் கிராமத்தில் தமக்குத் தெரிந்தவரின் வீட்டைப் பேசி முடித்து இவர்கள் அங்கு குடிபோக ஏற்பாடு செய்தார்.

"ரொம்ப நன்றிங்க... நீங்க மட்டும் இல்லேன்னா நல்லதங்கா மாதிரி எம்புள்ளைகளை கிணத்துல வீசிட்டு நானும் போய் சேந்திருப்பேன்."

"பெரிய வார்த்தையெல்லாம் சொல்லாதிங்க.. நான் உங்க கூடப் பொறந்த பொறப்பு மாதிரி... எப்ப என்ன வேணுமோ.. எங்கிட்ட வந்து கேளுங்க.."

சிவராமன் இப்படிச் சொன்னதும் கையெடுத்துக் கும்பிட்டாள் லீலா.

"வேணி!"

திரும்பிப் பார்த்தாள் வேணி... சரவணன்.

எழுந்து நின்றாள்... கடந்து போன நாட்களில், அவர்களது குடும்பத்தினரைப் போலவே சரவணனும் மிகுந்த இதமாக இருந்தான். அவனது வீட்டின் திண்ணையிலேயே இவர்கள் தங்கியிருந்த போதும், பல சந்தர்ப்பங்கள் தனியாகப் பார்த்துக் கொண்டபோதும் கூட சரவணனின் முகத்தில் பரிவும், இவர்களது சோகத்தைப் பகிர்ந்து கொண்ட உணர்வும் தான் இருந்தது. அவனது அனுசரணையும், பிரியமான பேச்சும் கிருஷ்ணவேணியை நெகிழ வைத்தன.

"என்ன சரவணா! அவங்கள்லாம் எங்கே?"

'டீ குடிக்கணும்னு போயிருக்காங்க... உன் தங்கச்சியும் கூடப் போயிருச்சு..."

"நீ போகலையா டீ குடிக்க?"

"இல்லை வேணி... எனக்கு உங்கூடத் தனியா பேசணும்னு தோணிச்சு... போகலை."

கிருஷ்ணவேணி மௌனமாக இருந்தாள்.

கிருஷ்ணவேணி தலைகுனிந்தபடியே இருந்தாள்.

"நம்ம காதல் அவ்வளவுதானா வேணி?"

வேணி சிரமப்பட்டுத் தலை நிமிர்ந்தாள். அவனது பார்வையைச் சந்திக்கத் தயங்கினாள். பூவரச மரத்தையே சற்று நேரம் வெறித்துப் பார்த்தாள்.

"ஊரை விட்டுப் போகப் போறீங்க.. என்னதான் பக்கத்து ஊருன்னாலும் இங்கே இருக்கற மாதிரி நாம அடிக்கடி பார்த்து பேசிக்க முடியாது."

கிருஷ்ணவேணி இனி பேசிவிட வேண்டும் என்று தீர்மானித்தாள்.

"வேணாம் சரவணா... இனி நாம முன்ன மாதிரி பாத்துக்கவோ, பேசிக்கவோ வேணாம்... நாங்க இந்த ஊரிலேயே இருந்தாக்கூட.... அதெல்லாம் வேணாம்னு நினைக்கிறேன்."

சரவணனுக்குள் வருத்தம் அலையாய்ப் பரவியது.

"என்ன வேணி சொல்ற... எதுக்காக?"

"எதுக்காகன்னு கேட்டா.. என்ன சொல்றது சரவணா... நீயும்தானே எங்க கூடவே இருக்க... என்னவெல்லாம் ஆகிப் போச்சு? எங்க குடும்பமே நொறுங்கிப் போய் கிடக்கு. எங்க வீட்ல ஒருத்தர் மூஞ்சியை ஒருத்தர் பாக்க முடியலை சரவணா... இப்படியொரு கொடுமையை நீயெல்லாம் அனுபவிச்சிருக்க முடியாது."

சரவணன் அமைதியாக அவளைப் பார்த்தான்.

"பழையபடி நாங்கள்லாம் சாதாரணமா ஆகிறதுக்கு எவ்வளவு நாளாகும்னே புரியலை சரவணா... இதிலே உங்கிட்ட மட்டும் நான் பழையமாதிரி பழக முடியுமா? உங்கிட்ட பேசறப்போ என் அக்கா முகமும், அம்மா முகமும்தானே இனிமே என் நினைப்புலே வரும்... காதலா வரும்? வேணாம் சரவணா.." குனிந்து அழுகிற கிருஷ்ணவேணியைச் சங்கடத்துடன் பார்த்தான் சரவணன்.

"அழாதே வேணி... உங்கம்மா வேதனைப் படுவாங்கன்னுதானே நீ இப்படியெல்லாம் பேசற?"

"அதுமட்டுமில்லை சரவணா... உனக்குப் புரியலையா? இப்பல்லாம் காதலிக்கிற நிலை

''மந்திரிபதவி போனதிலிருந்து என் கணவர் ஒரு மாதிரி நடந்துக்கறார் டாக்டர்..''

''என்ன பண்றார்?''

''தினமும் காலையில் ரிப்பனை கட்டி, கத்திரிக்கோலால் வெட்டி ''சமையலறையைத் திறப்பதில் பெருமையடைகிறேன்'னு சொல்லி அப்புறம்தான் காப்பிபோட அனுமதிக்கிறார்!''

— சு. சந்திரவேல்



மையில நான் இல்லை!"

"இல்லை வேணி... நான்..."

"வாயை மூடு... இந்தப் பேச்சை விட்டு."

கிருஷ்ணவேணி குரலுயர்த்தி இப்படிச் சொன்னதும் சரவணனின் முகம் வாடியது.

"ஸாரி வேணி... மன்னிச்சுக்க... ஓரிரு வினாடி பேசாமலிருந்தான் சரவணன். பிறகு அமைதியாக வீட்டுக்குள் போய் விட்டான்.

கிருஷ்ணவேணி ஏற்படுத்திய மனவேதனையுடன் ஹாலைப் பார்த்தபடி இலக்கின்றி நடந்த சரவணன் அந்த சிறு கதவின் முன்பு வந்து நின்றான். பாட்டி சொன்னது நினைவுக்கு வந்தது.

'உள்ளிருக்கும் சிலையும், பூவரசியின் சாபமும்தான் இன்னும் இந்த வீட்டின் துன்பத்தின் விரல்களாய்த் தீண்டிக் கொண்டிருக்கிறதா?'

குழப்பமும், வேதனையுமாய் சில நிமிடங்கள் நின்றிருந்த சரவணனின் தோளில் இதமான கை விழுந்தது. கிருஷ்ணவேணி.

திரும்பிய சரவணனின் கண்களை உற்றுப் பார்த்தாள் வேணி.

"ஸாரி சரவணா... நீ எவ்வளவு நல்லவன்... நீ சங்கடப்படற மாதிரி பேசிட்டேன்."

சரவணன் அவளையே பார்த்தான்.

அவள் சட்டென அவனை அணைத்துக் கொண்டாள். அவளது தலையைக் கோதிய சரவணனுக்கு அவள் அழுவதை உணர முடிந்தது.

"அழாதே வேணி... உங்கண்ணன் கூட அன்னிக்கு எங்கிட்ட கேட்டுக்கிட்டான். என்னாலே உங்க குடும்பத்துக்கு எந்த வருத்தமும் வராது."

"நீ நல்லவன் சரவணா" என்றாள் வேணி மறுபடியும் விம்மல்களுக்கிடையே... ம சாப்பிடப் போனவர்கள் வந்து விட்டார்கள். சற்று நேரத்தில் டவுனிலிருந்து டிராக்டருடன் சுந்தரும், மணியும் வந்து சேர்ந்தனர். பீரோவை ஏற்றிய பின்பு லீலா, கிருஷ்ணவேணி, அம்சவேணி மூவரும் ஏறிக் கொண்டனர்.

"அழகு தாவி ஏறிடுவான்!" என்றான் சுந்தர்.

"இல்ல சுந்தர் ஏத்தி விடு... விழுந்தாலும் விழுந்திடுவேன்" என்றான் குரல் கம்மியவனாக.

"அண்ணா, என் கையைப் புடிச்சு மேல ஏறு" என்று கிருஷ்ணவேணி கை நீட்டினாள். ஒரு கணம் தயங்கிய அழகு மறுநொடியே கிருஷ்ணவேணியின் கரம்பற்றித் தாவி ஏறினான்.

"போய்ட்டு வர்றேன்" என்றான் அழகு.

அவர்கள் விடைபெற்றனர். உதடுகள் உபசாரமாக சொல்லிக் கொண்டன. ஆனால் புலப்படாத மௌனத்தின் மொழி அங்கே பரஸ்பரம் பரிமாறிக் கொள்ளப்பட்டதுதான் அதிகம்.

லீலா கடைசியாக சரவணனைப் பார்த்துச் சொன்னாள், "பக்கத்து ஊருக்குப் போயாச்சுன்னு எங்களை மறந்துடாதே சரவணா. அடிக்கடி வீட்டுக்கு வா... இந்த தம்பிகளையும் கூட்டிடு வா."

வெயில் 'சுள்'ளென்று அடிக்க, கிருஷ்ணவேணி ஒரு போர்வையை எடுத்தாள். நால்வரும் தலைக்குமேல் போர்த்திக் கொள்ள டிராக்டர் அவர்களுடன் கிளம்பிச் சென்றது. முதன் முதலில் அவர்கள் ஊருக்குள் வந்த நினைவுகள் இந்த நால்வருக்குள்ளும் மேலெழுந்தன. அப்போதிருந்த குறுகுறுப்பு, உற்சாகம், சந்தோஷம் எல்லாம் எங்கே?

(முற்றும்)

பின்குறிப்பு:

வேதனையுடன், விடைதெரியாக் கேள்வி ஒன்றையும் சுமந்து கொண்டு சரவணனும், சகாக்களும் திரிந்தார்கள். அந்த அறைக்குக் கீழ் நிஜமாகவே சிலை இருக்கிறதா? பூவரசியின் கதையும் சாபமும் உண்மைதானா என்கிற குழப்பம் நீடித்து, இளவயதுக்கேயுரிய துணிச்சல் மீதூற ஒரு நாள் அந்த அறையைத் திறந்து, தோண்டிப் பார்க்கத் தீர்மானித்தார்கள்.

அன்று இரவு. கடப்பாறை, மண்வெட்டி, டார்ச் லைட் சகிதம் கிளம்பி பூவரச வீட்டினுள் நுழைந்தார்கள். இவர்கள் நுழைந்த சிறிது நேரத்துக்கெல்லாம் வாசலில் அரவம் கேட்டது. சரவணனின் அப்பா சிவராமன் நின்றிருந்தார்.

"ரெண்டு மூணு நாளாவே கவனிச்சுக்கிட்டுத்தான் இருந்தேன். என்னிக்காவது இப்படிப் பண்ணுவீங்கன்னு எதிர்பார்த்

தேன். இப்ப என்ன, தோண்டிப்பாக்கணு மாக்கும்?"

சரவணன், தயக்கமாக 'ஆமா' என்றான்.

"அதுக்கெல்லாம் அவசியமே இல்லைடா பசங்களா."

"ஏன்?"

"நான் பல வருஷங்களுக்கு முன்னாடியே தோண்டிப் பார்த்துட்டேன்."

இவர்கள் ஆச்சர்யமடைந்தனர். ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

"என்ன இருந்துச்சுப்பா?"

"ஒண்ணும் கிடையாது... சிலையுமில்லை ஒண்ணுமில்லை."

இவர்களால் நம்ப முடியவில்லை. 'பொய் தானேப்பா சொல்றீங்க!" என்றான் சரவணன்.

"உம்மேல சத்தியம் பண்ணணுமா? நிஜம் தான்டா சரவணா... ஏன்டா, இப்ப கேள்விப்



"என்னது? அனுதாப அலையால் ஆண்டிப்பட்டியில அம்மாதான் ஜெயிப் பாங்களா? யார் மேலே அனுதாபம்?"

"வேறயாரு! பன்னீர்செல்வம் மேலே தான்!"

— என்.கே. சுப்ரமணியன்

பட்ட உங்களுக்கே இவ்வளவு ஆர்வமி ருக்கே.! எனக்கு இருந்திருக்காதா... இருந் துச்சு.. தோண்டிப் பாத்தேன். ஒண்ணு மில்லை!"

"அப்ப பாட்டி சொன்ன பூவரசி கதை பொய்யா?"

"இல்லையே.. என்னோட தாத்தா இடி விழுந்து செத்தது உண்மைதான். பூவரசின்னு ஒரு பொண்ணு இருந்ததும் செத்ததும் நிஜம் தாண்டா."

"அப்படின்னா சிலை இருக்கணுமே... எங்க?"

"சிலைதான் இருக்கே... சரவணா.. உம்பாட்டியோட, உங்கம்மாவோட கற் பனையில... உங்க எதிர்பார்ப்பில எல்லாம் சிலை இருக்கே."

"என்னப்பா குழப்பறீங்க."

"எனக்கே தெளிவாச் சொல்லத் தெரிய லைப்பா. வாழ்க்கையில சில சம்பவங்கள் விசித்திரமாக நடக்குது. பத்து வருஷங்கழிச்சு அந்த சம்பவத்தை ஒருத்தரு இன்னொருத் தர்கிட்ட சொல்லும்போது அது கதையா மாறிடுது. கதையா மாறிப்போற சம்பவத்தில் எவ்வளவு நிஜம், எவ்வளவு கற்பனைன்னு தெரிய மாட்டேங்குது. பூவரசியோட கதை யில இந்த சிலை ஒரு கற்பனையான விஷ யம்னு நானா ஒரு முடிவுக்கு வந்துட்டேன்."

"இந்த விவரத்தையெல்லாம் பாட்டி கிட்ட, அம்மாகிட்டயெல்லாம் சொல்ல லையா?"

"நான் தோண்டிப் பார்த்தது தெரிஞ்சா பாட்டி என்னைக் கொன்னே போட்டுடும்... நான் யாருகிட்டயும் சொல்லலை. இதெல் லாம் எதிர்வாதம் பண்ணி எதுக்காக இல் லேன்னு சொல்லணும்? தேவையில்லாத சிக்கல். உங்க பாட்டி சொல்லித்தான் இந்த சுமை வருசா வருசம் சுத்தம் பண்ணி, சாமி கும்பிடறோம். உள்ளே குலதெய்வம் குடி யிருக்குன்னு சொல்லிக்கிறோம். அவங்க மனசை எதுக்கு நோகடிக்கணும்? நீயும் இதையெல்லாம் சொல்லிட்டுத் திரியாதே... எல்லாத்தையும் மறந்துடுங்க என்ன?"

நால்வரும் அமைதியாக இருந்தனர்.

"ஏதாவது வேலை வெட்டியில சேரப் பாருங்க... இந்தப் பழைய கதையெல்லாம் எதுக்கு? ம்.. யாருகிட்டயும் இதைப் பத்திப் பேச வேண்டாம். என்னங்கடா!" ஒரு அதட் டல் போட்டார் சிவராமன்.

நால்வரும் மைதானத்திற்கு வந்தனர்.

"நாம தோண்டிப் பாக்கக் கூடாதுன்னு பொய் சொல்றாரா?"

"இருக்காதுடா."

"அதெப்படி?" பூவரசி சாபம் இல்லாம இருக்காதுடா. இப்பப் பாரு.... அம்சவேணி யும் உடம்பு கருகி... பூவரச மரத்தடியில தானேடா செத்தா!" என்றான் சுந்தர்.

சரவணன் அமைதியாகப் பார்த்தான். இருளில் பூவரச மரம் தெரிந்தது. இலைகள், கிளைகள், பூக்கள் ஆகியவற்றைத் தன்னுள் ளடக்கிய, ஆனால் அவை எவற்றையும் தெளிவுபடுத்தாத ஓர் இருள்வடிவாக, இங்கிருந்து பார்க்கையில் ஒரு புதிர் போல தோற்றமளித்தது பூவரசமரம். ○

நிதியே தகுதி!

வினோத்



'விஜயகாந்த் அவசியம் அரசியலுக்கு வர வேண்டும்' என்று அவருடைய ரசிகர்கள் வற்புறுத்திச் சொன்னார்கள். அதற்கு அவருக்குள்ள தகுதிகளையும் பட்டியலிட்டார்கள். முக்கியமான தகுதி: நிதி. படத்தில் வருகிற மாதிரியே அரசியலிலும் வந்து ஏழைகளைக் காப்பாற்ற வேண்டும் என்று ஒரு பெண்மணி உருக்கமாக வேண்டிக்கொண்டார். கையிருப்பை வாரியிறைக்க மாட்டார் என்று நம்பலாம். ஆனால் விஜயகாந்த் the best way you can help the poor is not to be one of them என்பதை உணர்ந்தவர்.

நூறு படங்களில் நடித்ததாகச் சொல்லிக் கொள்ளும் பல தமிழ் நடிகர்கள் மற்ற மொழிகளில் நடித்ததையும் சேர்த்தே சொல்கிறார்கள் என்றும், விஜயகாந்த் ஒருவர்தான் நூறும் தமிழ்ப் படமாகவே தந்தார் என்றும் பிலிம் நியூஸ் ஆனந்தன் சொன்னார். சர்ச்சைகளில் சிக்கிக்கொள்ளாத சாது, ஆனந்தன். பின்னே ஏன் மற்ற நூறுபட நாயகர்களின் குட்டை உடைத்தார்?

இப்படியெல்லாம்கூட அவலங்கள் இந்தியாவில் இருக்கிறதா என்று மனத்தை நெருட வைத்து, கையைப் பிசைய வைக்கும் விரசக் காட்சிகளுக்காகவே reality bites என்ற நிகழ்ச்சியை வாரா வாரம் நடத்தி வருகிறார்கள் ஸ்டார் நியூஸ்காரர்கள். Stories that leave us feeling miserable.

சென்ற வாரம் வந்தது, பாகிஸ்தான் எல்லையைத் தொட்டுக் கொண்டிருக்

கும் பாகிஸ்தானில் வசித்த ஏழை இந்து மக்கள். அவர்கள் கையில் இருப்பது பாகிஸ்தான் பாஸ்போர்ட். அதை வைத்துக் கொண்டு இந்தியாவில் என்ன செய்ய முடியும்? எவ்வளவோ காலத்துக்கு முன்னால் இங் கிருந்து அங்கு சென்றவர்கள் தான் திரும்பி வந்திருக்கிறோம் என்று எவ்வளவு சொல்லியும் இந்தியப் பாஸ்போர்ட் வழங் காமல் இழுத்தடிக்கிறது



சிவப்பு நாடா ராஜாங்கம். புல் பூண்டு இல் லாத செம்மண் நிலத்தின் நடுவே கல் உடைத்துக் கால் வயிற்றை நிரப்பிக் கொண்டு வருகிறார்கள் குழந்தைகளும் பெண்களும் முதியவர்களும். இன்றல்ல, நேற்றல்ல, பல வருடமாக. பதற்றமான எல் லைப் பகுதி என்பதால் ராணுவ கெடுபிடி வேறே.

This government is an organised hypocricy என்று கன் ஸர்வேடிவ் அரசைத் திட்டி னார் பெஞ்சமின் டிஸ்ரெலி. சர்வநாட்டு சர்வ அரசுக்கும் அது பொருந்தும்.

"நான் ஒரு பாம்புக் குட்டியைச் செல்வமாக வளர்த்தேன். மலைப்பாம்புக் குட்டி'' என்றார் சுஷ்மிதா சென். (எம்.டி.வி)

அவருடன் உரையாடிய முன்னாள் மிஸ் இந்தியாவும் இன்னாள் VJயுமான நஃபீஸா துள்ளிப் பதறி எழுந்திருக்கவில்லை. "அப்புறம்?" என்றார் அமைதியாக.

"அது வளர்ந்து பெரிதானதும் யாருக்கோ கொடுத்துவிட்டேன்" என்றார் சுஷ்மிதா. டி.வி பெட்டியின் கூரை இடிக்கும் அளவுக்கு நல்ல உயரம் இந்த அழகி. பேச்சின்போது கை, கண், உதடு, நெற்றி, தலை எல்லாமே பரபரவென்று பின்னணித் தருகின்றன.

பாம்புக் குட்டியை விட்டு விட்ட பின், 'ரெனி' என்ற குழந் தையை இப்போது தத்தெடுத்து வளர்க்கிறாராம். பெண்களின் வாழ்க்கை is a history of affections.

'சின்னச் சின்னப் பாத்திரங்களில் தலை காட்டி வந்தேன். முழு நேர ஹீரோயினாக வரலாமா வேண்டாமா என்று ஐந்து வருட காலமாக யோசித்து, தற்சமயம் ஃபில்ஹால் என்ற படத் தில் நடிக்கிறேன்' என்றார் சுஷ்மிதா. பத்து வருட காலத்துக்கு யோசித்துக் கொண்டிருக்காமல் இப்போதாவது முடிவெடுத் தாரே, அதுவரை சந்தோஷம்.

மொசைக் தரையின் நடுவே குரோட்டன்ஸ் ஒரு கொத்து முளைத்த மாதிரி வினோதமான ஆப்பிரிக்க முடிய லங்காரத்துடன் தோன்றினார் செந்தில். ('ஜெய் ஹிந்த்' - ஸன்) வழக்கம் போலக் கவுண்டமணியிடம் அகப்பட்டுக் கொண் டவுடன் _



செந்தில்: எங்க அண்ணன் யார் தெரியுமா?

கவுண்டமணி: யார்டா அவன்? பேர் என்ன?

செ: புலிக்குட்டி.

க: உன் பேர்?

செ: பூனைக்குட்டி.

க: அப்ப உங்க ஊர் வண்டலூரா?

(வழக்கம் போல க. நெட்டித்தள்ள, செ. குப்புற விழுகிறார்.)


பின்னர் 'இளமைப் புதிது' என்ற நிகழ்ச்சியில், ஸ்வர்ண மால்யா வந்து, ஜாலியான ஸிஸ்டர் போல வாலிபப் பட்டாளத் துடன் அட்டகாசமாய்க் கும்மாளமடித்தார்.

ஒரு 'மச்சி' 'caught fire! caught fire' என்று பாடினார். பத்திக் கிச்சு பத்திக்கிச்சு பாட்டின் ஆங்கில மொழி பெயர்ப்பாம்! Forget the nonsense that every single moment in life is serious.

கண்ணில் கூர்மையான பார்வையும் கையில் கூர்மை யான பென்ஸிலும் வைத்துக்கொண்டு 'ராஜ் மேடை' பேட்டி களை நடத்தும் நிஜந்தனுக்கு, அரசியல்வாதிகளைக் குடைந் தெடுக்க வேண்டும் என்ற நிஜமான ஆசை நிறையவே இருக் கிறது. கேள்விகள் கேட்கும் முறையை அவர் மாற்றிக் கொண் டால் இன்னும் நன்றாக இருக்கும்.

பா.ஜ.க தலைவர் கே.என். லட்சுமணனை அவர் பேட்டி கண்டபோது விஷயஞானம் அபரிமிதமாக வெளிப்பட்டது. ஆனால் கிடைக்கிற பதிலை உள்வாங்கிக் கொண்டு அதன் தொடர்ச்சியாக அடுத்த கேள்வியை அமைக்கவில்லை. டைப் ரைட்டிங் மெஷினில் பட்பட்டென்று தட்டுகிற மாதிரி கேட் டுக்கொண்டே போனார். லட்சுமணனோ, லட்சுமண ரேகா வைத் தாண்டக்கூடாதென்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டவர் போல முணுமுணுவென்று பதிலளித்தார்.


To get better answers, ask better questions என்று பேட்டி இதை கூறுகிறது.



"இதுவா? எங்க மாவட்டத்
லைவரோட சிலைதான். அடிக்கடி
ட்சித் தலைவரோட காலில்
விழுந்தே எல்லாரோட கவனத்
தையும் கவர்ந்ததால அவரோட
சிலையையும் இப்படியே செய்ய
ஆர்டர் கொடுத்தோம்!"

- பாஸு

சிரிப்பா சிரிக்குதைய்யா!



"நம்ம தலைவரோட சிலையைச் செய்ய சிற்பிக்கு 'இன்ஸ்டால்மெண்டி'ல் பணம் தந்தது தப்பாப் போச்சு!"

- பாஸு




"என் காதலியைக் கண்ணகி சிலை பக்கமா வரச் சொன்னது தப்பா போச்சு!"

"ஏன்...என்னாச்சு?"

"நான் பீச்லே வந்து காத்துக் கிடந்தேன். அவ அருங்காட்சியகம் பக்கமா வந்து வெயிட் பண்ணிக்கிட்டிருந்துருக்கா!"

- நெல்லையப்பபுரம் செல்வன்



"காலம் கெட்டுப் போச்சு!"

"என்னவாம்?"

"புதுசா திறக்க வேண்டிய சிலைக்கு அடியிலே 'கடைசி நோயகற்றுதலுக்கு உட்பட்டது'ன்னு செதுக்கியிருக்காங்க!"

- அம்பை தேவா

மினிதொடர்

சங்கரியின் நாட்குறிப்பு 3

ஆஸ்பத்திரி வளாகம் வெறிச் சென்ற பாலைவனமாகத் தோன்றியது. அப்பாவின் கைகளில் 'டிரிப்ஸ்' ஏறிய படி இருந்தது. அவர் கண் விழித்துப் பார்த்தது கூட சந்தோஷம் தரக் கூடியதாகவே இருந்தது. வசந்தா நேரத்துக்குச் சமைத்து அனுப்புவதும், பாஸ்கரன் எங்கோ பணம் புரட்டி எல்லாவற்றையும் கவனித்துக் கொள் வதும் உள்ளுக்குள் ஏதோ இளகச் செய் தது. வருடக் கடைசி நாட்களில் சர்க் கரை அளவு குறைந்து ஆஸ்பத்திரியி லிருக்கக் கூடுமென்று அப்பா நினைத் திருக்க மாட்டார். காலை ரவுண்ட்சுக்கு வந்த டாக்டர், மத்யானம் வீட்டுக்குப் போகலாம் என்றார். சாப்பாடு கொண்டு வந்த பாஸ்கரன், ரமணியின் மனைவியை யாரோ தாக்கி விட்ட தாகவும் உடனே போக வேண்டு மெனவும் சொன்னான்.

நானும் வருகிறேன் என்றதும் பாஸ் கரன் அவசரமாக மறுத்தான். அப்பா கிசுகிசுப்பான குரலில், "அவளும் வரட்டும் பாஸ்" என்றார். அங்கிருந்த நர்ஸிடம் சொல்லிவிட்டு வெளியே வந்தோம். அவன் ஒருவிதமான அலட்சியமான முகபாவனை யோடு 'ம்' என்றான். வெயில் சுட்டெரிக்கும் தீவிரத்தோடு பொரிந்தபடியிருந்தது. பாஸ்கரன் ஆட்டோவில் ஏறி, 'ஜி.ஹெச்சுக் குப் போ" என்றான். 'உயிருக்கு ஒண்ணுமில் லையே' என்று கேட்டேன். "ரேப்னு சொன் னாங்க சங்கரி" என்றபடி வெளியே பர பரப்பாய்ச் சந்தையில் உலவிய மனி தர்களைப் பார்த்தான். நெஞ்



சம் வெடித்துவிடும் போலிருந்தது. சிரிக்கிற மாதிரியான பாவனையோடு அழுத அவளது முகம் நினைவில் வந்தது. ஞாயிற்றுக் கிழமையானதால் சந்தையில் கூட்டமிருந்தது. மனிதர்கள் வருடப் பிறப்புக்கான ஆயத்தங்களோடு உலா வந்தனர். தொலைக்காட்சிகளில் ஏதோ ஒரு திரைப்படத்தில் கமலஹாசன் 'பைக்'கில் வந்து 'விஷ் யூ எ ஹாப்பி நியூ இயர்' என்று கூறும் பாடல் நாளை பலதடவை ஒளிப்பரப்பாகும்.

"நீங்க அங்கே வர்றது சரியாருக்குமானு தான் நான் வேணாம்னேன்" என்றான் பாஸ்கரன். திடீரென்று அவனது குரல் தளர்ந்து இலேசாக உள்வாங்கி ஒலித்தது. "எங்கிட்ட சேதியைச் சொன்ன ஆள், இது சங்கரிக்கு ஓர் எச்சரிக்கை. ஸ்ரீதர் மேலே கேஸ் வாபஸ் வாங்கிக்கச் சொல்லுனு சொன்னான்" என்றான். மறுபடி ஆஸ்பத்திரி வளாக இருட்டறை கண்முன் விரிந்தது. கால் மடக்கி, கை உயர்த்திக் கிடந்த பிணங்கள். 'பொம்பளை குடிப்பாளா?' என்ற தேன்மொழியின் கேள்வி. 'ஐயோ, எம்மவராசன் போயிட்டானா?' ஓலங்கள். கதறல்கள். கிராதிவழி பெருகின வெளிச்-



தமயந்தி

சம். பிணவறை வாடை. 'டிரெஸ் இருக்கா கொண்டாங்க சீக்கிரம்' என்ற பணியாளர்களின் விட்டேத்தியான விரட்டல் தொனி.

ஆட்டோ பொது மருத்துவமனை முன் நின்றிருந்தது. ஒவ்வொரு அடியாய் எடுத்து வைக்கும் போது அளவிட முடியாத பாரத்துடன் கால்கள் கனத்தன. 'சங்கரி' என்று பாஸ்கரன் கூப்பிட்டது காதில் விழுந்தது. பதில் பேசத் தோன்றவில்லை. உள்ளே சென்று பார்ப்பதற்கான பணத்தைக் கட்டிக் கொண்டிருந்த வேளையில் ஸ்டேஷனில் புகார் கொடுத்த அன்று பார்த்த எஸ்.ஐ. எங்களைப் பார்த்துத் திரும்பி வந்து, "கொஞ்சம் மோசமாத்தானிருக்கு, இவங்க கூட ஜாக்கிரதையாத் தானிருக்கணும்" என்றார். "இதெல்லாம் நினைச்சுதான் பலர் போலீஸ்லேயே கண்டுக்காத மாதிரி இருந்துடுறாங்க மேடம். தப்பா எடுக்காதீங்க. ஒரு பிரதர் மாதிரி சொல்றேன். வேணாம்" என்றார் மறுபடி. 'பார்த்துட்டு வந்துர்றோம்' என்றபடி நகர்ந்தான்.

கட்டில் பக்கம் ரமணி மட்டுமே இருந்தான். கண்கள் கலங்கியிருந்தன. எங்களைப் பார்த்ததும் எழுந்தவன், பாஸ்கரன் கைகளைப்

"யாரோட மோதுதோம்னு தெரியுமா? நீங்களாச்சும் சொல்லப்படாதா சார்? இன்னைக்கு என்னை உள்ளே வைச்சா ஊர் இரண்டாயிடும்னு சொல்லுங்க..."



''கிரிமினல் குற்றம் சுமத்தப்பட்ட ஒருத்தருக்குப் போய் உங்க கட்சியிலே தேர்தல் டிக்கெட் கொடுத்திருக்கீங்களே...?''

''எங்க கட்சியிலேயே ரொம்ப நல்லவர் அவர்தான்...!''

— சீர்காழி ரேவதி

பிடித்துக் கொண்டான். லட்சுமியின் கழுத்துவரை போர்வை போர்த்தப்பட்டிருந்தது. "நேத்து வயல்லருந்து வரலேயேனு தவிச்சா, ராத்திரி ஒன்றரைக்கு முருகப்பன் சேதி சொல்லுதான் சார். என்ன செய்வேன்? டாக்டருங்க சொல்ல மாட்டேங்கிறாங்க. ஆபரேஷன் செய்யணும்கிறாங்க. ஒண்ணும் தெரியலை சார்" என்று தேம்பினான். அங்கு நிற்க இயலவில்லை. லட்சுமியின் மூடிய கண்களை நிமிர்ந்து பார்க்க இயலவில்லை. ஜன்னல் பக்கமாய்த் திரும்பினான். வேப்ப மர நிழலில் ஒன்றிரண்டு பேர் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். நீளவால் குருவி மரக்கிளையில் அசையாமல் உட்கார்ந்திருந்தது.

"இவனுவள விட்டுடக்கூடாதும்மா" ரமணி என்னருகில் வந்து நின்றான். 'நீங்க வேணும்னா கிளம்புங்கம்மா. உங்கப்பாவுக்கு சொகமில்லைனு சார் சொன்னார்" என்றான். நான் திரும்பி அவனைப் பார்த்து 'போகலாம்' என்றதும் மறுபடி, "இவனுவள கொல்லணும்" என்றழுதான். வீட்டுக்கு வந்துப்போற தலைவர் "உம்மேல ஸ்ரீதரனுக்கு எந்தக் கோபமுமில்ல" என்றது ஞாபகத்துக்கு வந்தது. ரீட்டாமேரி பலாத்கார கேஸில் முகத்தை மூடியபடி கோர்ட்டுக்குள் ஓடிய போலீஸ்காரர்கள் போல இவர்களும் முகத்தை மூடியபடி சகல திசைகளிலும் முட்டி மோதுவது போல் தோன்றியது. பாஸ்கரனிடம், "ப்ரஸ்ஸுக்குப் போனா என்ன?" என்றேன். அவன் தயக்கமாய் ரமணியைப் பார்க்க, ரமணி "என்னதுங்க?" என்றான். "நான் பேசிக்கறேன் சங்கரி. நீங்க வேணுமானா கிளம்புங்க" என்றான் பாஸ்கரன். "சங்கரியை ஆட்டோ பிடிச்சு விட்டுட்டு வந்துடறேன்" என்றபடி என்னுடன் நடந்தான்.

"நீங்க சொல்றது சரிதான். ரமணிட்ட பேசுவேன். ஆனா சங்கரி, நீங்க ஜாக்கிரதையா இருக்கணும். சரியா? உங்கப்பா கட்சியில் இருக்கறது அவனுகளுக்கு ரொம்ப சித்தா கூட இருக்கும். ஊரெல்லாம், 'ஒரு பொட்டச்சிக்கு இத்தனை திமிரா'னுதான் பேசறான்க. உங்கப்பா மயங்கினதுக்குக் காரணம் உடம்புக் கோளாறா, மனசுக் கோளாறானு எனக்குத் தெரியல. என்னலாமோ பேசுவான்க. சொல்லக் கூட தயக்கமாத்தானிருக்கு. என்னையும் உங்களையும் தொடர்பு படுத்திக்கூட... ஆட்டோ, இப்ப சந்தை வழியா வர்றப்போ கூட மணியன் சிரிச்சான். அதை விடுங்க" என்றான் மூச்சு வாங்கினபடி. படியிறங்கிக் கொண்டு, "நான் பஸ்ல போயிறட்டா பாஸ்கர்? ஆட்டோ ஆஸ்பத்திரிவரை முப்பத்தஞ்சு ரூவால்ல கேக்கான்?" என்றேன்.

"வருத்தமாயில்லையா சங்கரி?" என்றான் பாஸ்கரன். "ஆட்டோலேயே போயிருங்க. நான் வந்து 'பில்'செட்டில் பண்ணிடறேன். வசந்தா சாப்பாடு கொண்டு வந்துடும்" என்றான். "எங்க வாங்குனிங்க? யார்ட்ட?" என்றேன். தெருவுக்கு வந்திருந்தோம். அவன் ஓரமாக நின்றிருந்த ஆட்டோவைக் கூப்பிட்டு, "ஏறுங்க சங்கரி" என்றான். "நான் கேட்டதுக்குப் பதிலே சொல்லலையே?" என்றேன்.


"வசந்தா செயினை அடகு வச்சது" என்றான். ஆட்டோ கிளம்பியது. திரும்பிப் பார்த்தபோது பாஸ்கரன் திரும்பி ஆஸ்பத்திரி கேட்டுக்குள் நுழைந்து நடந்தபடியிருந்தான். பர்ஸைத் திறந்து ரூபாயை எண்ணினேன். ஆட்டோக்காரர், "கோர்ட்டுக்குப் பக்கத்து ஆஸ்பத்திரிதானே?" என்றார். "ஆமாம்" என்றேன். சீட்டில் சாய்ந்து உட்கார்ந்து முன்னாலிருந்த உலோகக் கம்பியை அழுந்தப் பிடித்துக் கொண்டேன்.

அப்பா வீட்டுக்கு வந்து ஓய்வெடுத்தபடி இருக்கிறார். சாயந்திரம் ஸ்ரீதரபாண்டியன் நலம் விசாரிக்க வீட்டுக்கு வந்தார். கூட வந்த இரண்டு பேர், ஆரஞ்சுக் கூடையொன்றைத் தூக்கி வந்தார்கள். என்னைப் பார்த்த ஸ்ரீதரன், "நல்லாருக்கீங்களா?" என்றார். அப்பாவின் பக்கத்தில் உட்கார்ந்து, 'நல்லா

மழைநீர் சேமிப்புக்கு வித்திட்டவர்!

பத்து வருடங்களாக கான்ஸருடன் போராடி, தமது 54வது வயதில், டேராடூன் மருத்துவமனையொன்றில் ஜனவரி மூன்றாம் தேதி காலமானார் டாக்டர் அனில் அகர்வால்.

யார் இந்த அனில்?



கரக்பூர் ஐ.ஐ.டி.யில் பி.டெக். பட்டதாரியாகி, எழுபதுகளில் இந்தியன் எக்ஸ்பிரஸிலும் ஹிந்துஸ்தான் டைம்ஸிலும் சயன்ஸ் கரஸ்பாண்டென்டாக பணியாற்றி, லண்டன் வாரப் பத்திரிகையான 'நியூ சயன்டிஸ்ட்' இதழில் ''அறிவியலும், சுற்றுச்சூழல் பாதுகாப்பும் மக்களுக்காகவே'' என்று தமது கட்டுரைகள் மூலம் நிரூபித்தவர் இவர். இதற்காகவே உலகத்தரம் வாய்ந்த 'Down to Earth' என்ற பத்திரிகையை, சுமார் எட்டாண்டுகளுக்கு முன் துவங்கியவர்.

பத்மஸ்ரீ, பத்மபூஷன், குளோபல் என்வயர்மென்டல் லீடர்ஷிப் அவார்டு, நார்மன் போர்லாக் அவார்டு என்று பெற்ற விருதுகளும் ஏராளம். ஆனால் எளிமைக்கு எடுத்துக்காட்டு.

ஜோசப் வி.ஜான் அவார்டு, பாரம்பரிய நீர்வள, சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு என்று நிறுவி வருடா வருடம் கொடுத்தவர். தில்லியில் வாகனப்புகைகளுக்கு எதிராகத் தொடர்ந்து போராட்டம் நடத்தியவர். இன்று நாடு முழுவதும் மழை நீர் சேமிப்பு பேசப்படுகிறது என்றால் அதற்கு வித்திட்டு, கிராமம் கிராமமாக, நகரம் நகரமாக, மாநிலம் மாநிலமாகப் பிரசாரம் செய்தவர் அனில் அகர்வால். குடியரசுத் தலைவர் மாளிகையில் மழைநீர் சேகரிக்க ஏற்பாடு செய்த கையோடு, கே.ஆர். நாராயணன் கேட்டுக் கொண்டதற்காக, மாநில ஆளுநர்களைக் குடியரசுத் தலைவர் மாளிகையிலேயே கூட்டி, மழைநீர் சேமிப்பின் மகத்துவத்தை உணர்த்தியவர் அனில்.

அரசு தப்புத்தண்டா செய்தால் தட்டிக் கேட்கக் கூடிய, தைரியம் மிக்க போர் வீரர்.

கிராமப்புறப் பெண்களின் சுமை, மூலிகைகள் திருட்டில் இந்தியா இழக்கும் கோடிகள் என்று வெளியிட்ட கட்டுரைகள் இந்த மனிதரின் இழப்பு, சோகம் தாண்டிய ஒன்று என நினைவுறுத்தும்.

— எஸ்.வி.என்.

ருக்கிங்களா? எதுக்கு சார் தேவையில்லாத டென்ஷன். இன்னிக்கு எங்கிட்டயும் விசாரணை நடந்துச்சு. எப்.ஐ.ஆர். போடுவான் போலிருக்கு. கொஞ்சம் உங்க பொண்ணுட்ட சொல்லப்படாதா?'' என்றார் சன்னமான குரலில்.

நான் அமைதியாயிருந்தேன். அவர் என்பக்கம் திரும்பி, "கடைசி நேரத்துல எந்தப் பாவியோ ஆசிட்டை ஊத்தியிருக்கான். அதுக்கு நான் பலியா?" என்றார். "லட்சுமியை யார் பலாத்காரம் பண்ணா? ஏன் பண்ணணும்?" என்றேன்.

'நீங்க நம்புறியளா தாயீ? எல்லாம் வேஷம். நாடகம். எப்படியாச்சும் பணம் புடுங்கணும்னா என்னமும் செய்வாளுக மானங்கெட்ட சிறுக்கிக" என்றார்.

''இந்த வார்த்தையை உங்கவீட்டு பொண்ணுகளப் பார்த்துச் சொல்ல விடுவீகளா? ரமணியைச் சொல்ல விடட்டுமா?''

"என்ன பேசுதீங்க?"

நான் எழுந்து வெளியே போக முற்பட்டேன். அவர் தடாலென்று எழுந்து, "யாரோட மோதுதோம்னு தெரியுமா? நீங்களாச்சும் சொல்லப்படாதா சார்? இன்னைக்கி என்னை உள்ளே வைச்சா ஊர் இரண்டாயிடும்னு சொல்லுங்க'' என்றார் பெருஞ்சத்தத்துடன். அதே வேகத்தில் வெளியேறி காரில் ஏறினார். கூட வந்தவர்கள் பின்னாலேயே ஓடினார்கள். தெருவிலிருந்து ''இன்னைக்கி நைட்டோட உங்கப்பா கட்சிலருந்து தூக்கி எறியப்படுவார் பாரு'' என்று கத்துவது கேட்டது.

இப்போ வரை அப்படி எதுவும் செய்தி வரவில்லை. ஆண்டிப்பட்டி தேர்தல் பற்றி தேன்மொழி ரொம்பவும் கவலையாக என்னிடம் பேசினாள். லட்சுமி பற்றி நான் பேசத் துவங்கியபோது, 'இளம்பட்டா? அப்பாவைப் பார்த்துக்க' என்று எழுந்தவள் கவனமாக இருந்துக்க சுந்தரி" என்றாள்.

லட்சுமிக்கு மத்யானம் தலையில் ஆபரேசன் நடந்து ஐ.சி.யூ.வில் இருப்பதாக இரவு பாஸ்கரன், வீட்டுக்குப் போகும் வழியில் சொல்லிப் போனான். இந்திய பாராளுமன்றத்தின் மீதான தாக்குதலுக்கு, பாகிஸ்தான் ஐ.எஸ்.ஐ.தான் பொறுப்பு என்று செய்திகளில் வாசிக்கப்பட்டது. பாதுகாப்பு ஏற்பாடுகளிலிருந்த கவனக் குறைவுகளைக் காங்கிரஸ் பேசியபடியிருக்கிறது. இதை எழுதும்போது, இறந்த இந்திய போலீஸ்காரர்களைக் குறித்தே என் யோசனை சுழல்கிறது.

(அடுத்த இதழில் முடியும்)

• உடையாளுர் பஜனை



எழுத்து மொழி என்பது உணர்ச்சிகளை இலகுவாகப் பிரதிபலிப்பதாக இருக்க வேண்டும். கலப்பில்லாத எஃகைப் போல் எழுத்து மொழியும் தூய்மையுடன் உறுதியும் வாய்ந்ததாக இருக்க வேண்டும். ஒரு பாறையை ஒரே போடில் பிளந்த பின்பும் முனை மழுங்காதிருக்கும் எஃகைப் போல், மொழியும் அமைய

நல்ல நூல், நல்ல விழா, நல்ல இசை...!




வேண்டும்.

- சுவாமி விவேகானந்தர் எழுத்து மொழிக்கு வகுத்த இந்த இலக்கணப்படி எழுதியவர் அமரர் கல்கி. பிளந்து கட்டும் தலையங்கங்கள் பலவற்றை 1941 தொடங்கி 1954 வரை கல்கி இதழில் எழுதினார். அவற்றுள் மிக முக்கியமானவற்றை நூலாகத் தொகுத்து வானதி நிறுவனம் பதிப்பிக்க, கல்கி கிருஷ்ணமூர்த்தி நினைவு அறக்கட்டளை அந்நூலின் வெளியீட்டு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்தது. டிசம்பர் 5ஆம் தேதி கல்கி நினைவு தினத்தன்று நிகழ்ச்சி நடந்திருக்க வேண்டும். ஆனால், எதிர்பாராதவிதமாக ஒத்தி வைக்கப்பட்டது. பங்கேற்க ஒப்புக் கொண்ட அனைவரது சௌகரியமும் கருதி அது ஒத்திவைக்கப்பட்ட தேதி - ஜனவரி 12 - அதாவது பாரதமெங்கும் இளைஞர் தினமாகக் கொண்டாடப் படுகிற சுவாமி விவேகானந்தரின் பிறந்த நாள்!

சென்னை, ஆழ்வார்பேட்டை ஆஸ்திக சமாஜத்தில் நடந்த நிகழ்ச்சியில் இந்தப் பொருத்தத்தைச் சுட்டிக் காட்டினார் அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் கல்கி ராஜேந்திரன்

ழ்ச்சிக்குத் தலைமை தாங்கி நூலை ளியிட வந்திருந்த கே.வி. திருவேங் டம் (சென்னை வானொலி நிலைய ன்னாள் இயக்குனர்) தமக்கு வயது 64 கி விட்டாலும் அமரர் கல்கியின்



றவணக்கம் • காயத்ரி



• விழா மேடையில், ரங்கராஜன், திருவேங்கடம், கல்கி ராஜேந்திரன்



• பார்வையாளர்கள்

தலையங்கங்களைப் படித்து, உள்ளத்தில் இளைஞராக உணர் வதாகச் சொல்ல, வயதிலும் இளை நரான சென்னை ஆன்லைன் செய்தி யாளர் ரங்கராஜன் முதல் பிரதியைப் பெற்றுக் கொள்ள, தமது யௌவனம் தும்பும் குரலில் உடையாளூர் கல்யாண ராமன் நாமசங்கீர்த்தனம் இசைக்க...

இலக்கிய விழா, இளைஞர் விழா, இசை விழா, அரசியல் விழா, ஆன்மிக விழா என்று அடுக்கடுக்கான சிறப்புகள் கொண்ட நிகழ்ச்சியொன்றை அரங்கை நிறைத்த கூட்டத்தினர் கண்டும் கேட்டும் அனுபவித்தும் மகிழ்ந்தனர்.

'கணபதியே, கருணாநிதியே...! என் கவலை தணித்தருளே...' என்று கல்லூரி மாணவி காயத்ரி இறைவணக்கம் பாடிய போது, நாட்டின் எதிர்காலம் குறித்த இளைஞர்களின் கவலையையே அந்தப் பாடல் எதிரொலிப்பதாகத் தோன்றியது.

கல்கி ஆசிரியரின் வரவேற்புரையைத் தொடர்ந்து நூல் வெளியீட்டு நிகழ்ச்சி... 'வாழ்க சுதந்திரம் வாழ்க நிரந்தரம்' என்ற தலைப்பில் சுப்ரபாலன் தொகுத்த நூல், அழகாக வண்ணக் காகிதம் சுற்றப்பட்டு மேஜையில் காத்திருக்கிறது. காகிதத்தைப் பிரித்தெடுக்கிறார் திருவேங்கடம். அதன் கீழ் மேலுமொரு பழுப்புக் காகிதச்சுற்று! அதையும் நீக்கியெடுத்துவிட்டு ரங்க

ராஜனிடம் நூலை வழங்க அவர் முற்பட, ரங்கராஜனோ பொது வாழ்வில் தூய்மை காக்கப்படுவதில் பத்திரிகைகளுக்கும் பத்திரிகையாளர்களுக்கும் பெரும் பங்கு இருக்கிறது என்று உணர்த்துவதுபோல், பிரித்தெடுத்த காகிதத்தை முதலில் வாங்கி பாக்கெட்டில் போட்டுக்கொண்டு, பின்னர் இருகரம் நீட்டிப் புத்தகத்தைப் பெற்றுக் கொள்கிறார்!

"தலையங்கம் என்பது ஒரு பத்திரிகையின் இதயப் பகுதி. அது மூன்று அம்சங்களை உள்ளடக்கியிருக்க வேண்டும். பிரச்னையை முதலில் அடையாளம் காட்ட வேண்டும்; பின்னர் அதை விளக்க வேண்டும்; இறுதியாக ஒரு முடிவு அல்லது தீர்வை வழங்க வேண்டும்..." என்று குறிப்பிட்ட திருவேங்கடம் அமரர் கல்கியின் தலையங்கங்கள் அனைத்தும் இவற்றைச் செய்வதோடு ஒரு படி மேலேயும் செல்கின்றன என்றார்.



• வானதி திருநாவுக்கரசு



• சுப்ரபாலன்

"கல்கி கிருஷ்ணமூர்த்தி ஒரு மிகச் சிறந்த ரசிகர். அதனால் அவர் எழுதிய அனைத்திலும் அந்த நல்ல ரசனை ஊடுருவி வியாபித்தது. நல்ல அரசியல் மட்டுமல்ல, நல்ல சங்கீதம், நல்ல இலக்கியம், நல்ல பண்புகள், நல்ல தலைமை என்று அனைத்துக்கும் 'நல்ல' அடைமொழி சேர்த்துக்கொள்வதே கல்கி இலக்கியம்... அதனால்தான் அவரது தலையங்கங்கள் வரலாற்றுப் பெட்டகங்களாக இருப்பதுடன் இலக்கிய படைப்புகளாகவும் மிளிர்கின்றன..." என்றவர் ராஜாஜியைப் பற்றிய தலையங்கங்கள் நூலில் மிக அதிகமாய் இடம் பெற்றுள்ளதைச் சுட்டிக் காட்டினார்.

தலையங்கத்துக்கு ஆங்கிலத்தில் 'லீடர்' என்றொரு பெயர் உண்டு. 'எ லீடர் ஷுட் லீட் யூ சம்வேர் என்பதாலேயே அப்பெயர்' என ராஜாஜி கற்றுத் தந்ததை இணைப்பு உரையில் நினைவு கூர்ந்த கல்கி ராஜேந்திரன், இளைய தலைமுறை பத்திரிகையாளர்களின் பிரதிநிதியாக உரையாற்ற ரங்கராஜனை அழைத்தார்.

ஆங்கிலத்திலேயே அதிக கவனம் செலுத்தி, தமிழ் வாசிப்பைத் தவறவிட்ட இன்றைய தலைமுறையின் பிரதிநிதியாக தமது உரையை மன்னிப்புக் கோரும் தொனியுடன் ஆரம்பித்த ரங்கராஜன், தலையங்கத்துக்காக அமரர் கல்கி எடுத்துக்கொண்ட விஷயங்களை வியந்தார். திருவையாறு தியாகராஜ ஆராதனைகூட தலையங்கத்தில் இடம் பிடித்ததைச் சுட்டிக்காட்டினார். காந்தி மகாத்மாவின் படுகொலையாகட்டும், கிரிக்கெட் ஆட்டமாகட்டும், திருவையாறு குறித்த தலையங்கமாகட்டும்... உள்ளத்தைத் தொடக்கூடிய உணர்ச்சி கொண்டு எழுதப்பட்டதைப் புகழ்ந்தார். ஊழல் குற்றச்சாட்டு குறித்தவொரு தலையங்கம் இன்றைய நிலைமையை அப்படியே பிரதிபலிப்பதைக் கண்டு உணர்ச்சி வசப்பட்டுப் பேசினார்.

ஏறத்தாழ ஒரு நூலரங்கம் போன்ற விரிவான அலசலின் இறுதியில், பெரும்பாலான தலையங்கங்கள் இன்னமும் இன்றைய நாட்டு நடப்பைப் பிரதிபலிப்பதைக் கண்டு பார்வையாளர்கள் பிரமித்திருக்க... 'அத் தலையங்கங்களுக்கு அவசியமே இல்லாத அளவுக்கு நாடு உயர பிரார்த்திப்போம்' என்றார் கல்கி ராஜேந்திரன்.

"அமரர் கல்கியின் எழுத்தாற்றலுக்கு நிகரானது அவரது மனித நேயப் பண்பு. இரண்டாம் பேர் அறியாமல் பல

ரது கல்விக்கு அவர் நிதியுதவி அளித்துள்ளார். அப் பணியைத்தான் கல்கி கிருஷ்ணமூர்த்தி நினைவு அறக்கட்டளை கல்வி உதவித் தொகைகள் அளிப்பதன் மூலம் தொடர்கிறது...'' என்று நன்றியுரையில் குறிப்பிட்டார் அறங்காவலர் வி. கோபாலன். இவ்வாண்டு 1,86,000 ரூபாய் மதிப்புள்ள உதவித் தொகைகள் வினியோகிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

நிகழ்ச்சியை நிறைவு செய்த உடையாளூர் கல்யாணராமன் குழுவினரின் பஜனை, நாட்டின் எதிர்காலத்துக்கான பிரார்த்தனையாகவே ஒலித்தது.

பாரம்பர்ய பஜனை சம்பிரதாயத்தை வகுத்துத் தந்த குருநாதர்களையும், காஞ்சி முனிவரையும், ஞானானந்தா சுவாமிகளையும் குறித்த பாடல்கள், அவர்களுக்கு மட்டுமின்றி அவர்கள் காட்டிய நல்வழிக்குமான வந்தனமாக அமைந்தது.

மஹாராஷ்டிராவிலிருந்து அபங்க கீதம், ஒரிஸ்ஸாவிலிருந்து ஜெயதேவரின் அஷ்டபதி, கர்நாடகாவிலிருந்து தாஸர் பதம், தமிழகத்திலிருந்து கோபாலகிருஷ்ண பாரதியாரின் நந்தனார் சரித்திர கீதம், நாராயண தீர்த்தரின் தரங்கம் என்று தேசமெங்கும் பூத்த பக்திமலர்களை பஜனை மாலையாகத் தொடுத்து, இடையிடையே இஷ்ட தெய்வங்கள் குறித்த நாமாவளிகளையும் சேர்த்து, தனி விருத்தமும் சேர்ந்திசையும், ரக்தி ராகங்களும் ஜனரஞ்சக ராகமாலிகையுமாக கல்யாணராமன் வழங்கிய நிகழ்ச்சி, அரங்கை நிறைத்த அத்தனை பார்வையாளர்களையும் உணர்வால் ஒன்றுபடுத்திவிட்டது. அவரது குரல் வளத்தோடு இழைந்து இழைந்து ஒத்துழைத்த அவரது குழுவினரின் ஸ்ருதி-லயச் சேர்க்கை அதை உயர்ந்த கலை நிகழ்ச்சியாக்கியது.

தேசியத்தின் அங்கமாக கலைகளைக் கருதிய அமரர் கல்கிக்கும், ஆன்மிகத்தையும் தேசியத்தையும் இரு கண்களாகக் கருதிய சுவாமி விவேகானந்தருக்கும் ஒருங்கே செலுத்திய அழகான அஞ்சலியாக அமைந்தது.

- காஞ்சனா பிரகாஷ் ராவ்

படங்கள்: யோகா

அருள்வாக்கு



சக்தி ஜாஸ்தியாக ஆக ஆனந்தம் ஜாஸ்தி என்பதால் அந்த சக்தியினாலேயே ஆனந்தம் உண்டாகிறது என்று அர்த்தமில்லை. சக்திக்கும் ஆனந்தத்துக்கும் நேர் ஸம்பந்தமில்லை. ஒருத்தருக்குத் தம்மைவிடக் குறைந்த சக்தியுள்ளவர்மீது தம்முடைய சக்தியினால் ஆதிக்கம் செலுத்த முடிகிறது, அவரைக் கட்டுப்படுத்த முடிகிறது என்பதிலே ஏற்படும் ஆனந்தம் தப்பான அஹங்காரத்தில் ஏற்படுவது; அதை முறையான ஆனந்தம் என்று சொல்ல முடியாது. பின்னே, சக்தி ஜாஸ்தியானால் ஆனந்தம் எப்படி ஜாஸ்தி ஆகிறது என்றால், அப்போது நம்மைவிடவும் அதிக சக்தியோடு இருந்துகொண்டு நம்மைக் கட்டுப்படுத்துபவர்கள் குறைச்சலாகிக் கொண்டு வருகிறார்கள். ஆகையால், நாம் இன்னொருத்தரை ஆள முடிகிறது என்பதைவிட, நமக்குக் கட்டுப்பாடு குறைகிறது. நம்முடைய ஸ்வதந்திரத்தின் எல்லை ஜாஸ்தியாகிறது என்பதாலேயே ஆனந்தம் ஏற்படுகிறது.

பெரிய கம்பெனிகளில் மானேஜராகக் கொடி கட்டிப் பறந்த சில பேர் ராஜிநாமா பண்ணிவிட்டு, அதோடு 'கம்பேர்' பண்ணிப் பார்க்கும்போது ரொம்பச் சின்னதாக ஸொந்தத்தில் கம்பெனி ஆரம்பிக்கிறார்கள். ''ஏன் இப்படி வருமானம், வசதி எல்லாவற்றையும் குறைத்துக்கொண்டு ஸொந்த பிஸினெஸ் ஆரம்பித்திருக்கிறீர்கள்?'' என்று கேட்டால், ''அதுவா? அங்கே என்னதான் பெரிய பொறுப்புகள், பெரிய வருமானம் முதலானது இருந்தாலும் மேலே உள்ள டைரக்டர்களுக்கு ரொம்பவும் obey பண்ணிக் கொண்டிருக்க வேண்டியிருந்தது. அவர்கள் 'கன்ட்ரோல்' தாங்காமல்தான், பாக்கி ஸமாசாரங்களில் நஷ்டமேற்பட்டாலும் ஃப்ரீயாக இருக்கணுமென்று ஸொந்த பிஸினெஸ் ஆரம்பித்தது'' என்கிறார்கள்.

ஆகையினால் ஸ்வாதந்த்ரியத்தால்தான் ஸந்தோஷமே தவிர சக்தியினால் இல்லை.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சாரிய சுவாமிகள்.

நட்போடு அருளும் எட்டிகுடியான்!


குருஜி ஏ.எஸ். ராகவன்

'சத்' என்பது சிவன்; 'சித்' என்பது சக்தி... இதை நாம் உணரும்போது பிறக்கும் ஆனந்தம்தான் 'சுப்ரமண்யம்' என்று பரமாச்சார்யார் ஒரு சமயம் கூறியிருக்கிறார்.

சுப்ரமண்யம் என்ற வடமொழி சொல்லுக்கு 'மங்களமும் அழகும் நிரம்பிய ரூபம்' என்பது பொருள். தமிழ்ப் பெயரான 'முருகன்' என்பதற்கும் 'சிரஞ்சீவியான அழகும் இளமையும் உடையவன்' என்றுதான் அர்த்தம்.

ஆனந்தத்தை அளிக்கும் அழகன் முருகன் என்று நாம் முடிவுக்கு வரலாம். புலன் இன்பங்களைத் தாண்டி உள்ளத்தையும் ஆன்மாவையும் தொடுகிற அழகானதனால்தான் ஆனந்தத்தை அது அளிக்கிறது – அழிவற்ற நிலையான ஆனந்தம்!

• ஸ்ரீ சௌந்தரேஸ்வரர்



பத்தித் திருமுக மாறுடன் பன்னிரு
தோள்களுமாய்த்
தித்தித் திருக்கு மமுதுகண் டேன்செயன்
மாண்டடங்கப்
புத்திக் கமலத் துருகிப் பெருகிப்
புவனமெற்றித்
தத்திக் கரைபுர ளும்பர மாநந்த
சாகரத்தே

என்பது கந்தரலங்காரம்.


'செயல்கள் அற்றுப் போய், அமைதியில் அடங்கி, சிந்தையாகிய கமல மலரிலே உலகமயமான தொடர்புகளை ஒதுக்கிவிட்டு அமிழ்ந்தபோது, கரை புரண்டோடிய பரம ஆனந்தமாகிற பெருங்கடலினிடையே, சீராக அமைந்த திருமுகங்கள் ஆறுடன் பன்னிரு தோள்களைக் கொண்டதான, வேறெங்குமிலாத இன்பச் சுவையைத் தரக் கூடிய அமுதத்தைத் தரிசித்தேன்...'

என்பது பாடலின் பொருள்.

இவ்வாறு சச்சிதானந்த ஸ்வரூபனாய் நமக்குள்ளேயே முருகன் இருக்கின்றான் என்பதற்கான அடையாளம் போல் அமைந்திருக்கிறது எட்டிகுடி கோயிலின் அமைப்பு!

இத்தலத்தில் சிவபெருமானின் பெயரே சௌந்தரேஸ்வரர்! அம்பிகை ஆனந்தவல்லி. இவ்விருவருக்கான சன்னிதிகளிடையே இருக்கிறது ஆறுமுகப் பெருமானின் சன்னிதி. சோமாஸ்கந்த மூர்த்தத்தை ஞாபகப்படுத்துகிறது.

சிக்கல், எண்கண் சிலைகளை வடித்த சிற்பிதான்




• எட்டிகுடி வேலவன்

எட்டிகுடி வேலவனையும் வடித்திருக்கிறான்.

சிக்கல் சிங்காரவேலவன் போல் இன்னொரு முருகன் அமைந்துவிடக் கூடாது என்கிற வெறியில் சிற்பியின் கட்டை விரலை மன்னன் முத்தரசசோழன் துண்டித்தான் அல்லவா...? அப்படியும் சோர்வடைந்துவிடாமல் தன் கலைப்பணியைத் தொடர்ந்த சிற்பி ஆறுமுகனை வடிக்க ஒரு நல்ல கல்லைத் தேடினான். உயிரோட்டமுடைய, இரத்தம் போன்ற சிவப்பு ரேகைக் கொடிகளைக் கொண்டதும் நீலமும் கருமையும் கலந்ததுமான ஒரு கல்லைக் கண்டு பிடித்தான்.

மனத்தில் ஆனந்த நிலையில் பதிந்துவிட்ட ஆறுமுகன் உருவத்தை ஒரு நல்ல முகூர்த்த நாள் பார்த்துக் கல்லில் வடிக்க ஆரம்பித்தான்.

கையிலிருந்த உளியோசைகூட 'முருகா



• ஆனந்தவல்லி

முருகா' என்று ஒலிக்குமளவுக்கு மனத்தில் முருகன் நாமம் அவனுக்கு ஓடிக் கொண்டேயிருந்தது.

ஆறுமுகமும் பன்னிரு தோள்களும் முடிகிற தருவாயில் முருகன் திருமேனியில் வியர்வையும் அக்னி ஜ்வாலையும் சுடர்விட்டுப் பிரகாசித்தன.

ஓடிச்சென்று அரசனை அழைத்து வந்தான் சிற்பி. அரசனும் இந்த அற்புதத்தைக் கண்டு அதிசயித்து நின்றான்.

மேலும் உற்சாகம் அடைந்த சிற்பி, நுட்பமான நகாசு வேலைகளைத் தொடங்கினான். மயிலின் சிறகுகளை நீவி நீவிச் செதுக்கிய நேரத்தில் அதன்



தத்ரூப அமைப்பு கண்டு, அது பறந்துபோய் விடுமோ என்ற அச்சமே வந்துவிட்டது சிற்பிக்கு! இரண்டு சங்கிலிகளைக் கொண்டு மயிலைப் பிணைத்து வைத்தான்.

எல்லா பணிகளும் முடித்து மயிலுக்குக் கண்களைத் திறந்த கணத்தில், அது முருகனையும் தூக்கிக் கொண்டு மேலே பறக்கத் தொடங்கிவிட்டது!

கையிலிருந்த உளியை மயிலை நோக்கி வீசினான் சிற்பி. அதன் காலில் உளி பட்டு சிறிது சேதமாயிற்று. மயில் மீண்டும் பூமிக்கு வந்து நின்றது. சிற்ப மயில் பறந்த இந்தக் காட்சியைக் கண்டு மன்னரும் மற்றவர்களும் ஆச்சர்யத்தில் மூழ்கித் திக்குமுக்காடினார்கள்!

பின்னர் ஒரு நல்ல நாளில் முறையான சடங்குகளுடன் இந்த முருகன் திருவுருவம் எட்டிகுடி கோயிலில் பிரதிஷ்டை செய்யப் பட்டது.

திருத்துறைப்பூண்டியிலிருந்து நாகப்பட்டிணம் செல்லும் பேருந்து தடத்தில் 21வது கிலோமீட்டரில் இருக்கிறது எட்டிகுடி. திருவாய்மூரிலிருந்து 1.5கி.மீ.

கதையை நம்புவோர் நம்பலாம். ஆதாரம் தேடுவோர், சிற்பத்தின் காலில் இன்னமும் காணப்படுகிற 'உளிக் காயத்தை'ப் பார்த்து அதிசயிக்கலாம்!

மூலவரைப் போலவே உத்ஸவரையும் வடித்துத் தந்தார் அந்தச் சிற்பி.

கோயில் ராஜகோபுரத்துடன் மிக அழகாய் இருக்கிறது. உள்ளே சென்றால் துவஜஸ்தம்பமும் பலி பீடமும் இருக்கின்றன. அவற்றையடுத்து மகா மண்டபமும் அர்த்த மண்டபமும் அமைந்துள்ளன. அர்த்த மண்டபத்தை அடுத்து விமானத்துடன் கூடிய கர்ப்ப கிருஹம் இருக்கிறது. முருகப் பெருமான், வள்ளி தெய்வானை லோலனாக மயில் மீது அமர்ந்து காட்சி தருகிறார். சிக்கல், எண்கண் முருகன் வடிவங்களைப் போலவே இருக்கிறது. மயிலின் கால்கள் தனித்தனியே மூன்று அங்குல உயரத்தில் முன்னும் பின்னுமாக இருப்பதை தீபாரா தனையின்போது காணலாம். இங்கே மயிலின் கால்கள் தெரியும்படி கவன மாய் தீபாராதனை காண்பிப்பார்கள்.

கோயிலின் முன்னால் சுவாமி புஷ்கரிணி அழகுடன் காட்சி அளிக்கிறது.

காஞ்சிரங்குடி என்றும் எட்டிகுடிக்கு ஒரு பெயர் உண்டு. திருப்புகழில் இப்பெயரைப் புகுத்திப் பாடியிருக்கிறார் அருணகிரிநாதர்:

ஓங்கு மைம்புல னோட நினைத்தின்
பயர்வேனை
ஓம்பெ றும்ப்ரண வாதி
யுரைத்தெந் தனையாள்வாய்
வாங்கி வெங்கணை சூரர் குலக்கொம்
புகடாவி
வாங்கி நின்றன ஏவி
யுகைக்குங் குமரேசா
மூங்கி லம்புய வாச மணக்குஞ்
சரிமானு
மூண்ட பைங்குற மாது மணக்குந்
திருமார்பா
காங்கை யங்கறு பாசில் மனத்தன்
பர்கள்வாழ்வே
காஞ்சி ரங்குடி ஆறுமுகத்தெம்
பெருமாளே

'சூரர்களின் கூட்டங்கள் மீது, வில்லை வளைத்துக் கொடிய அம்புகளைச் செலுத்தி யவனே; மூங்கில் போன்ற அழகிய புயங் களையுடைய வள்ளி, தேவசேனையரை மணந்த திருமார்பனே! மாசற்ற, பாசமற்ற மனத்தினராகிய அடியவர்களின் கருணை வள்ளலே! எட்டிகுடி என்னும் தலத்தில் ஆறுமுகத்துடனும் பன்னிரு கரங்களுடனும் விளங்கும் எம்பெருமானே! ஐம்புலன்களும் இழுத்துச் செல்லும் வழியில் ஓடி இளைத்து அயர்ந்த எனக்கு 'ஓம்' என்னும் பிரணவப் பொருள் முதலான மந்திரங்களை உப தேசித்து அருள் புரிவாயே! அடியேனை ஆண்டு அருள்வாயே!' என்று அர்த்தம் இந்தக் காஞ்சிரங்குடி திருப்புகழுக்கு.

காஞ்சிரங்குடி என்னும் எட்டிகுடிக்கு நான்கு திருப்புகழ்ப் பாடல்கள் உண்டு.

எட்டி மரமே இங்கே தலவிருட்சம் என்ப தால் இவ்வூர் எட்டிகுடி ஆயிற்று என்பர். எட்டிக்காய் கசப்புக்குப் பெயர்போனது. ஆனால், இறைவன் முன்னிலையில் கசப் பென்ன... இனிப்பென்ன... யாவும் ஒன்றே என்பதுபோல் அமைந்திருக்கிறது பெயரும் தலப்புகழும்.

மெலிவுற்ற தமியற்கு உன் இருபதும
சரணத்தை
மிகநட் பொடருள்தற்கு வருவாயே!
செழுதத்து மிழுமுத்து வயலுக்குள்
நிறைபெற்ற
திகழ்எட்டி குடியுற்ற பெருமாளே!

செழுமை தவழும் வயல்கள் சூழ் எட்டிகுடியில் வீற்றுள்ள பெருமாளே! வாட்டமுற்ற என் போன்ற அடியார் களுக்கு உன் இரு தாமரைப் பாதங் களையும் அருள, மிக நட்போடு வரு வாயே!

நட்போடு வந்து அருள்வாயே என்று உரிமை கொண்டாடும் தோழமை யோகம் மட்டும் நமக்கு அனுபவமானால் இருக்கும் இடமே எட்டிகுடியாகி விடாதோ! படிக்கும் தமிழெல்லாம் திருப்புகழாகிவிடாதோ!

(அடுத்த வாரம் : மயிலம்)

• புஷ்கரணி





பம்மல் K சம்பந்தம்

கல்யாணம் என்றாலே காத தூரம் ஓடும் சினிமா ஸ்டண்ட் கலைஞர் கம் ஆஞ்சநேய பக்தர் பம்மல் கே சம்பந்தம் (கமல்). செய்யும் தொழில்தான் கணவன் என்று, இதே கல்யாணக் கொள்கையோடு, தில்லாகப் பெண்ணியப் பேட்டி தரும் அழகிய அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் ஜானகி (சிம்ரன்). இந்த இரு துருவங்களும் காதல் எனும் காந்தப் புலத்தில் இணைவதுதான் கதை!

ஏது ரொம்ப சீரியஸ் காதல் கதையாய் இருக்கும் போலிருக்கிறதே, இதில் எங்கே காமெடி வந்தது என்று யாரும் கேட்டுவிடக் கூடாது என்பதற்காக, இரண்டு புதிய காமெடிக் களங்களின் பின்னணியில் திரைக் கதை அமைத்து இரண்டரை மணி நேரமும் நம்மைக் கிச்சு கிச்சு மூட்டுவதில் வெற்றி பெற்றிருக்கிறது, கமல், மௌலி, கிரேஸி மோகன் கூட்டணி.

காதல் கல்யாண தம்பதி, அப்பாஸ்-சினேகா இடையே ஏற்படும் விரிசலைச் சரி செய்ய, அப்பாஸுக்கு ஐடியாக்களைக் கமல் அள்ளித் தருவதும், அதற்குப் பதிலடியாக சினேகாவுக்குப் பிலாசபர், கெய்டாக இருந்து சிம்ரன் அவரை வழி நடத்துவதும் ஏட்டிக்குப் போட்டி காமெடியாகி முதல் பாதி படத்தைத் தூக்கி நிறுத்துகிறது. மாடுமுட்டி விபத்துக்குள்ளாகும் கமலுக்கு, தமது மருத்துவமனையில் அறுவை சிகிச்சை செய்யும் சிம்ரன், தனது கைக்கடிகாரத்தைத் தவறுதலாக கமலின் வயிற்றில் வைத்து தைத்து விட்டு அவதிப்படுவதும், தனது பிழைப்பைக் காப்பாற்றிக் கொள்ள கடிகாரத்தை மறுபடியும் அறுவை சிகிச்சை செய்து வெளியே எடுக்க கமலைக் காதலிப்பதுபோல நடிக்கப்போய், அதை நம்பும் கமல், பிரம்மச்சரிய விரதத்தைக் கைவிட்டு காதலி வசப்பட, இரண்டாவது பாதியில் எக்கச்சக்க கலாட்டாவாகி, சிரிப்பலையில் தியேட்டரே அதிர்கிறது.

முரட்டுத்தனமான ஸ்டண்ட் கலைஞர் வேஷம் என்றாலும் தமது தொழிலுக்கு முரண்பாடாக, நிஜத்தில் குழந்தைத்தனம், அப்பாவித்தனம் இரண்டின் கலவையாகப் படைக்கப்பட்டிருக்கும் கமலின் பாத்திரம் அருமை. மனிதருக்கு நடிக்க கற்றுத் தர வேண்டுமா என்ன? கழுத்து, கை என்று சைக்கிள் செயின் கனத்தில் தங்கச் சங்கிலிகளை அணிந்து கொண்டு சென்னைத் தமிழில் வெளுத்து வாங்கியிருக்கிறார். காதல் தோல்வியில் கலங்கும் இறுதிக் காட்சிகளில் கமலின் சோகரச முத்திரைகள் பளிச்.

சிம்ரனோ பல காட்சிகளில் கமலின் நடிப்பை ஓவர் டேக் செய்திருப்பதோடு, நடனத்திலும் ஒரு கை பார்த்திருக்கிறார். கமலின் தாத்தாவாக நடித்திருக்கும் மலையாள நடிகர் உன்னி கிருஷ்ணன் நம்பூதிரி மனத்தைத் தொடுகிறார்.

தேவாவின் இசை, படத்துக்குப் பெரிதாக உதவவில்லை என்றாலும் கிரேஸி மோகனின் டயலாக் காமெடியும் நாடகத்தனம் வெளித் தெரியாத மௌலியின் இயக்கமும் படத்தைக் காப்பாற்றிவிடுகின்றன.

- விஷுவல்தாசன்

● அபவ் ஆவரேஜ்

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623;
Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 330/-; Overseas : Rs. 2000/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 165/-; Overseas : Rs. 1000/- (Air Mail)

ARTHRITIS / மூட்டுவலி

''வேத விற்பன்னர்களுக்கு இலவச மருத்துவம்''

எனக்கு வேதம் பற்றி ஒன்றும் தெரியாது. 'வேதம் தழைத்தால் நாடு செழிக்கும்' என்று காஞ்சிமாமுனிவர் சொல்லியிருக்கிறார். அவர் சொன்னால் அது சத்தியவாக்கு. ஆகையால் வேத விற்பன்னர்களை கௌரவிக்கும் பொருட்டு அவர்களுக்கு இலவச சிகிச்சை அளிக்க உள்ளோம். இதன் மூலம் மாதாமாதம் குறிப்பிட்ட வேத விற்பன்னர்களுக்கு அவர்கள் இருக்குமிடத்திலிருந்து (தமிழ் நாட்டிற்குள்) வந்து போகும் செலவு, மருத்துவ மற்றும் தங்கும் செலவு அனைத்தும் இலவசமாக தர முடிவு செய்துள்ளோம்.

Dr. S.P. Naidu, Director. Adyar Nature Cure Center

1. OSTEO ARTHRITIS
2. RHEUMATOID ARTHRITIS
3. ANKYLOSING SPONDYLITIS
4. GOUT

1. கை, கால்களில் மூட்டு வீக்கமும், வலியும்.
2. கை, கால் விரல் மூட்டுகளில் வீக்கமும் வலியும்.
3. கழுத்து வலி (Cervical Spondylitis)
4. நடுமுதுகின் கீழ்பகுதியில் வலி (Lumbar vertebra and Sacral Joint area)
5. இடுப்பு எலும்பும் (Pelvis Bone) தொடை எலும்பு தலையும் (Femural Head) சேருமிடம்.
6. குதிகால் இணைப்புகளில் வலி.
7. குதிகால்களில் எலும்பு வளர்ந்து நடக்க முடியாமல் வலி. (Calcaneal Spur)

முதலியவை பல ஆண்டுகளாக இருந்தாலும் ஆங்கில மருத்துவருடைய ஆலோசனையின்படி வித்தியாசமான இயற்கை வைத்திய முறையில், பக்கவிளைவுகள் இல்லாமல் நலம்பெற செய்கின்றோம்.

மேலும் நகரங்களில் நாம் சுவாசிக்கும் காற்று மிகவும் மாசுபட்டு இருப்பதால், தினமும் பிராணவாயு (Oxygen) தரப்படுகிறது. சென்னை, பம்பாய், டெல்லி மற்றும் வெளிநாட்டில் இருந்தும், தாங்கமுடியாத மூட்டுவலியுடனும், வீக்கத்துடனும் தசை பிடிப்புடன் நடக்க முடியாமல் சிரமப்பட்டவர்களும், காலையில் படுக்கையை விட்டு எழுந்திருக்க முடியாமல் சிரமப்பட்டவர்களும், எங்களிடம் நல்ல விதமாக சிகிச்சை பெற்று மகிழ்ச்சியுடன் சென்று இருக்கின்றார்கள். மற்ற விபரங்களுக்கு நேரில் வந்து பார்த்தால்தான் நாங்கள் கொடுக்கும் சிகிச்சையின் தன்மை புரியும்.

அடையார் நேச்சர் க்யூர் சென்டர்

ADYAR NATURE CURE CENTER

No. 6, SECOND CROSS STREET, KASTURBHA NAGAR, ADYAR, CHENNAI - 600 020.
Phone:4413399, 4402470. Tele Fax: 044-4916650 (காந்திநகர் பஸ்டெப்போ எதிரில்)

ஆர்த்ரிடிஸ் பற்றியும் - மற்றும் அதற்கு ஏற்ற உணவுப் பழக்கம் பற்றியும் தெரிந்து கொள்ள விரும்புபவர்கள் நேரில் வந்து குறிப்பு புத்தகங்களை இலவசமாக பெற்றுக் கொள்ளலாம். நேரில் வர இயலாதவர்கள் தபால் எழுதி புத்தகங்களை பெற்றுக் கொள்ளலாம்.

குறிப்பு: வெளியூரில் இருந்து வருபவர்களுக்கு, குறைந்த செலவில் தங்க, சாதா மற்றும் ஏர்கண்டிஷன் ரூம்கள் வாடகைக்கு எங்கள் ஆஸ்பத்திரியில் கிடைக்கும். இதற்கு முன் பதிவு செய்து கொள்ள வேண்டும். சைவ உணவு வசதி மட்டும் உண்டு. வியாதியஸ்தர்களுக்கு தேவைப்பட்ட மாற்று உணவுகளும் வழங்கப்படும் என்பதையும் அறியவும்.

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / Chief PMG-141 / 2001 *
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 37 * Registered as a Newspaper in Srilanka

